# கிணற்றுத் தவளைகள்

(நாவல்)

சிவசங்கரி

பொது நூலக இயக்ககம்
31 சன 1990
சென்னை-2

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு: ஏப்ரல், 1989

திருநாவுக்கரசு தயாரிப்பு

428867
894.8113
SIV
SV2K

விலை: ரூ. 9-00

அச்சிட்டோர்:
ஸ்ரீ பரமேஸ்வரி பிரஸ்
49, காரணீஸ்வரர் கோயில் தெரு
மயிலாப்பூர், சென்னை - 600 004

# பதிப்புரை

ஆசிரியர் திருமதி சிவசங்கரி அவர்களின் அற்புத புதினப் படைப்பான **கிணற்றுத் தவளைகள்** என்னும் இந்த நாவலை வானதி பதிப்பகத்தில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கிராமங்களில் கிணற்றுத் தவளைகளாய் வாழும் பெண்களின் அறியாமையையும் அப்பாவித்தனத்தையும் பயன்படுத்தி அவர்களை மிரட்டி— அடித்து— தன் போக்குக்கு பணிய வைத்து, ஆதிக்கம் செலுத்தும் ஆண்களை இந்நாவலில் அடையாளம் காட்டுகின்றார் ஆசிரியர். அத்தகைய ஆடவன்தான் இந்நாவலின் கதாநாயகன் சாரங்கன்.

பெண் பாத்திரங்களாக வரும் பாலா—சாரங்கனின் மனைவி, காயத்ரி— பாலாவின் தங்கை. இருவரும் இரு துருவங்கள். பாலா— கல்லாமை, அறியாமை, அப்பாவித்தனம் இவற்றின் பிரதிபலிப்பு. காயத்ரி— கல்வி கற்ற உலகம் தெரிந்த சூரியச் சுடர்.

தனக்கு ஆண் வாரிசு வேண்டுமென்பதற்காக சாரங்கன் பாலாவை மிரட்டி அவள் தங்கையான காயத்ரியை— கல்லூரியில் படித்துக்கொண்டிருப்பவளை இரண்டாங் கல்யாணம் செய்து கொள்ள வன்முறையில் இறங்கி கட்டாயக் கல்யாண ஏற்பாட்டை செய்கிறான். இறுதியில் கிணற்றுத் தவளைகளாய் வாழ்ந்த அப்பெண்ணுக்கும், அப்பெண்ணின் அம்மா பர்வதத்திற்கும் தைரியமூட்டி, சாரங்கனுக்குப் புத்தி புகட்டி விடுகிறாள், பாலாவின் தங்கை காயத்ரி.

"......நீ மட்டும்னு இல்லே, உன்னை மாதிரி பலவீனமான பொண்களாலதான் இவாள்ளாம் இந்த ரீதில அக்ரமம் பண்ண துணியறா... ஸ்கூல் ப்ரேயர்ல பாரதியார் பாட்டெல்லாம் நீட்டி முழக்கிண்டு பாடுவோமே— மறந்துட்டியா? 'புதுமைப்பெண்' எப்பிடி இருக்கணும்னு பாரதியார் சொன்னத மனசுல வாங்கிண்டு, அர்த்தம் புரிஞ்சு பாடியிருந்தா, இன்னிக்கு இப்படி நடந்துக்க மாட்டே... என்னிக்கோ அவர் பாடிட்டுப் போனத, அவர் கொள்ளுப் பேத்தி வயசார உன் காலத்துல கூட நாமல்லாம் இன்னும் புரிஞ்சிக்கலேன்னா எப்பிடி? கண்ண தொடச்சுண்டு எழுந்து ஆக வேண்டியத பாரு..."

—இவ்வரிகள் ஆசிரியர் சிவசங்கரியின் வைர வரிகள்.

சமூக விழிப்புணர்வு ஊட்டவல்ல இத்தகைய நாவலை ஆக்கித் தந்த திருமதி சிவசங்கரி அவர்களுக்கு வானதி பதிப்பகத்தின் சார்பிலும் வாசகர்களின் சார்பிலும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன் முறையில் அச்சிட்டுத் தந்த ஸ்ரீ பரமேஸ்வரி பிரஸ் உரிமையாளர் திரு P. மணிக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—வானதி ஏ. திருநாவுக்கரசு

# கிணற்றுத் தவளைகள்

## 1

கூடத்தின் ஒரு பக்கம் முழுவதையும் அடைத்துக் கொண்டு உட்காரத் தொடங்கிய நெல் மூட்டைகள் ஒன்றின் மேல் ஒன்றாக வரிசையாக அடுக்கப்பட்டதில் உயரே உயரே எழுந்து கிட்டத்தட்ட உத்தரத்தைத் தொட முற்பட்டன.

ஒரு வரிசை கூட விடாமல் எல்லாம் பூர்த்தியாகி விட, கடைசியாக முதுகில் ஏற்றி வந்த மூட்டையை எங்கே இறக்குவது என்று புரியாமல் தயங்கிய ஆளைப் பார்த்து சாரங்கன் முறைத்தான்.

வெற்றிலைக் குதப்பலை வாயின் ஓரமாகத் தள்ளிக் கொண்டு, சற்றே அண்ணாந்த பார்வையோடு எச்சல் ஊற "எழே, எழக்கேண்டா..." என்று உறுமினான்.

மூட்டையை இறக்க சுவற்றில சாய்த்து, வலித்த முதுகை நிமிர்த்தி அவன் நேராய் நிற்பதற்குள் மறுபடி உறுமல்.

"ஏண்டாழே, சொன்னாத்தான் செய்வியா? தூக்கு. எழக்குனு நா எல்லாத்துக்கும் கத்தணுமா? கார்த்தாலேருந்து கூடக்கூட நின்னே இத்தன நேரம் ஆயிழுக்கு! ரெண்டு மூட்டையை நாலு தப்படி தூக்கிண்டு வழத்துக்குள்ள பொழுது விடிஞ்சாச்சு! அந்த வீட்டு தாவாழத்த எப்படா ஒழிக்கழதா உத்தேசம்? ம்?"

"........"

"அசமஞ்சப் பயலுவ! கேட்டதுக்கு பதில் சொல்லேண்டா... சம்முவம் எங்க?"

அந்த ஆள் மகா தயக்கத்துடன், பார்வையை வாசலிலும், வெளி தாழ்வாரத்திலும் அலையவிட்டு "இருக்காருங்க......" என, சாரங்களின் கோபம் கொடியில் மூக்கில் ஏறி உட்கார்ந்தது.

வேகமாய் நடந்து, முற்றத்தின் மூலையில் இருந்த சாக்கடையில் 'பசக்'கென்று வெற்றிலையைத் துப்பினவன் அங்கிருந்தே கத்தினான்.

"ஏண்டா, திமிரா? 'இருக்காரு'னு இழுக்கறியே என்னமோ! சம்முவம் செததுட்டான்னா நாஞ்சொன்னேன்? எங்கடாவன்? அப்போ புடிச்சு நீயே மூட்டையை தூக்கிண்டு வர்றே, அவனைக் கண்ணுலயே காணும்... சும்மா உம்முதுகுல ஏத்தி ஏத்தி வெச்சுப்புட்டு தூங்கறனா? முருவன் ஒரு ரெண்டு நடை வந்தான், அப்பறம் அவனையும் காணும்! ஏண்டாலே, வெளையாடறீங்களா? அப்புறம் கூலிக்கு மட்டும் முப்பது பேரு வந்து நிப்பீங்களே, ஒங்களைத் தெரியாதா எனக்கு? இன்னிக்கு எவனாவது வாங்க, சொல்றேன்... ஒரு ஆளு கூலிதான் தரப்போறேன், மத்தவனுக்கெல்லாம் நீயே குடுத்துக்கோ..."



"இல்லீங்க கொழுந்த......"

"கொழுந்தையாவது கிழுந்தையாவது! நீ போய் சம்முவத்த வரச்சொல்லு... நா அவங்கிட்ட பேசிக்கறேன்..."

விருட்டென்று எதிர்வீட்டைப் பார்க்க நகர்ந்த ஆள், ஒரே கொடியில் சண்முகத்துடன் திரும்பி வந்தான்.

"கூப்பிட்டீங்களா கொழுந்தை..."

"ஏன், கூப்டாத்தான் வருவீங்களோ? இந்தப் பயலுவள இஞ்ச அனுப்பிட்டு நீ அஞ்ச என்னடா கார்வார் பண்ணிண்டிருக்கே? சொன்னபடி சரியா வேலை பண்றாங்களானு வந்து பார்க்கறதில்லே? நேத்திக்கே படிச்சுப் படிச்சு சொன்னேன், கார்த்தால விடிஞ்ச கையோட ஆளுங்கள கூட்டிண்டு வந்துடு, மூட்டையை அடுக்கி வீட்டையும் ஒழிச்சுப்பிடலாம்னு! கேட்டியா நீ? தெருவுல நாலு பேருக்குத் தெரியாம, எவன் கண்ணுலயும் படாம ஒரு காரியம் செய்யலாம்னா முடியறதா? இப்பப்பாரு, மணி பத்தாறது! இனிமே அந்த வீட்டை பெருக்கி, மெளிகிட்டு அப்புறம் எப்படா தென்னந்தோப்புக்குப் போறது? பன்னண்டு மணி உச்சி வெயில்லயா காய் எறக்கறது? அப்புறமா எப்போ வண்டில ஏத்தி அனுப்பறது? கண்ல சுட்டாப்பல ஊர்வலம் போச்சுன்னா... அவனவன் ஆத்தாமைல வெடிச்சுப் போயிட போறான்... இப்பவே 'மூட்டை அடுக்கியாறதாகும்!'னு ரெண்டு பேரு வந்து பொருமிட்டுப் போயாச்சு, வயத்தெரிச்சல் புடிச்சவங்க!"

கையை ஆட்டி ஆட்டி கத்தினவன், முகத்தின் வெறுப்புச் சுழிப்பு மாறாமல், நின்ற இடத்திலிருந்தே

சமையல் கட்டைப் பார்த்து, "இந்தாடீ, கொஞ்சம் ஜலம் கொண்டா..." என்று குரல் கொடுத்தான்.

பின், மறுபடி சண்முகத்தின் பக்கம் திரும்பினான்.

"உங்களோட மாரடிக்கறதே என் பொழுப்பா போச்சு! கோணிய கன்னா கெட்டியா தெக்கணும்னு அன்னிக்கே நா சொன்னேனா இல்லியாடா? கோழி கிறுக்கலா என்னடா வேலை இது! கண்றாவி! இஞ்ச பாரு, நூலு புடிச்சாப்பல வரிசையா நெல்லு கொட்டிப் போயிருக்கு! இத்தனையும் இப்ப அள்ளி, தூசு தும்பு இல்லாம சுத்தம் பண்ணிப்பிடணும், தெரியறதா? எல்லாம் போயி வேலையப் பாருங்க, போங்கடா... ம்ம் ஜரூரா ஆகட்டும். இந்தாடீ... ஜலம் கேட்டு நாலு நாழி ஆறது... இன்னும் என்ன பண்றே?"

"இதோ வந்துட்டேம்பா..." என்று கையில் தண்ணீர் ஜக்குடன் குதித்துக்கொண்டு வந்த பெரிய பெண் அபிராமியை தோளில் கை வைத்து சாரங்கன் அழுத்தி நிறுத்தினான்.

"என்னத்துக்குடி இந்தக் குதியல் இப்போ? மெதுவா வர்றத்துக்கென்ன? ரெண்டாந்தரம் நா கேட்டப்பறம் தான் அவசரமா இப்படி குதிச்சுண்டு ஓடி வரணுமா?"

"இல்லப்பா, உள்ள படிச்சுண்டு..."

"நிறுத்துடீ! எதுக்கெடுத்தாலும் வியாக்கியானம் பண்ணிண்டு நிக்காதே! அதுசரி, நீ என்னதுக்கு வந்தே இஞ்ச? கூடத்துக்கு வந்து ஜலம் குடுக்கக்கூட உங்கம்மாவுக்கு முடியலியாமா? அவதான் அனுப்பிச்சான்னா, நீயும் வெக்கமில்லாம வந்து நிக்கறியே! இனிமே கூடத்துப்பக்கம் அனாவசியமா வந்தே... தொலைச்சுப் பிடுவேன்! பொம்மனாட்டியா லட்சணமா உள்ளே கிட!"



பன்னிரண்டு வயதிலேயே பெரிய 'பொம்மனாட்டி'யாக எப்படி இருப்பது என்பது விளங்காமல் சற்று நேரம் அப்படியே நின்ற அபிராமி, தண்ணீர் ஜக்கை அப்பாவிடம் கொடுத்துவிட்டு தலையைக் குனிந்தபடி உள்ளே போனாள்.

முற்றத்து சாக்கடை அருகில் சென்று, ஜக்கிலிருந்து தண்ணீரை சாய்த்து வாயில் ஊற்றி 'பொளக்' 'பொளக்'கென்று இரண்டு தரம் வாயைக் கொப்பளித்தான் சாரங்கன். ஜக்கை அப்படியே படியில் வைத்துவிட்டு, "சட்டுனு ஒரு காப்பி கொண்டாடீ!" என்றான உரக்க.

வேட்டியை அவிழ்த்து சரக்கென்று உதறி இடுப்பில் மறுபடி சுற்றி, டப்பாக்கட்டாய் மடித்துக் கட்டிக் கொண்டான்.

போ என்று சொன்ன பின்னாலும் நகராமல் நின்ற சண்முகம், மெதுவான குரலில் "கொழுந்தை, வந்துங்க..." என்று ஆரம்பிக்க, அவன் பேசப்போவது புரிந்த மாதிரி சாரங்கன் பாதியில பேச்சை வெட்டினான்.

"வந்துமில்லே, போயுமில்லே! உன் பேச்சை அப்புறம் வெச்சிக்கோ! இப்ப இந்த பயல்களை அனுப்பி எதிர்வீட்டை ஒழிச்சுக்குடு... இன்னும் அரை மணி தேசாலத்துல வீடு ஒழிச்சு, அழகா சாவி என் கைக்கு வந்துடணும், தெரியறதா? இஞ்சயும் மூட்டையை சுத்தி மருந்தடிச்சு, படுதாவப் போட்டுக் கட்டு... எவனாவது வந்து பாத்துத் தொலைக்கப் போறான். காபியைக் குடிச்சுப்புட்டு நா தோப்புக்கு வந்துடறேன், இன்னிக்கு ஒரு காய் விடாம சட்ஜாடா எல்லாத்தையும் எறக்கி

யாகணும்! ஒழுங்கா சொன்னதை செஞ்சுட்டு மளமளனு வந்து சேரு,... ம்... ம்... நிக்காத... போ..."

சண்முகம் லேசாக தலையை உயர்த்தி, "அதுக்கில்லீங்க கொழந்தை... இவனுங்களுக்கு ஏற்கனவே கூலி பாக்கி நிக்கிது... அதக் குடுத்தீங்கனா, வீட்டுல ரெண்டு காசு குடுத்துட்டு வருவாங்க..." என, சாரங்கன் அவசரமாய் தலையை ஆட்டி மறுத்தான்.

"அதெல்லாம் காலனா குடுக்க மாட்டேன்... ஒவ்வொருத்தனா மாத்தி மாத்தி வந்து பூச்சி காட்டிட்டு போறானுங்க, வேலைய ஒரு பய ஒழுங்கா செய்ய மாட்டேன்றானுங்க! காசு மட்டும் நா ஒடனே குடுத்துடணுமா? சொன்ன வேலைய முழுசா முடிச்சுட்டு சாயந்தரம் வாங்க, பைசா பாக்கியில்லாம தீர்த்துப் புடறேன்! இப்ப ஒண்ணுங்கிடையாது, போங்கடா..."

தீர்மானமாய் அவன் பேச, இனியும் நிற்பதில் பயனில்லை என்பது புரிந்த மாதிரி சண்முகம் வாசலை நோக்கி நடக்க துவங்க, உடன் இருந்த ஆள் மட்டும் கீழே கிடந்த குப்பையைப் பெருக்க ஆரம்பித்தான்.

அவன் ஒழுங்காய் வேலை செய்கிறானா என்று இரண்டு நிமிஷம் போல நின்று மேற்பார்வையிட்ட சாரங்கன், காலை வீசி வீசி நடந்து சமையல்கட்டுக்குள் நுழைந்தான்.

தலைகீழாய்க் கவிழ்க்கப்பட்ட 'ட'னா வடிவத்தில் இருந்த அறையின் நடுவே பெரிய குதிர் ஒன்று நின்று, அறையை இரண்டாய் பிரித்துக் கொண்டிருந்தது.

குதிருக்கு இந்தப் பக்கமாய் தரையில் காலை நீட்டி உட்கார்ந்து நோட்டுப் புத்தகத்தில் எதையோ எழுதிக்



கொண்டிருந்த இரண்டாவது பெண் லதாவைப் பார்த்ததும் சாரங்கன் அப்படியே நின்றான்.

"என்னடீ இது? எழுந்திரு......"

அப்பாவின் அதட்டலைக் கேட்டு தடக்கென்று எழுந்து நின்று விழித்தாள் லதா.

"என்னடீ டிரெஸ் இது? ஒடம்புல பாதி தெரியறது, வெக்கமா இல்லே? மூதேவி... எங்கடீ ஒங்கம்மா?"

கையில் காபி டம்ளருடன் வந்த பாலா, "இதோ இருக்கேன்னா... காபி கேட்டேளே, இந்தாங்கோ..." என்று பவ்யமாய் நீட்ட சாரங்கன் அதை வாங்காமல் விரைப்பாய் நின்றான்.

"எப்ப கேட்டதுக்கு, எப்போ கொண்டு வர்றே! இப்பத்தான் பாலே கறந்தியாக்கும்! கொண்டு போய் சாக்கடைல ஊத்து...... இல்லேன்னா நீயே கொட்டிக்கோ! அறிவுகெட்டவளே... இவ என்னடீ டிரெஸ் போட்டுண்டிருக்கா? முழங்காலுக்குக் கீழே துணியே காணும்?"

"இதுவா? இதுதான்னா 'மிடி' டிரெஸ்ஸாம்! போன லீவுக்கு மெட்ராஸ்லேருந்து உங்கக்கா வந்தப்போ வாங்கிண்டு வந்தாரே, அதான்... இன்னிக்கு பள்ளிக்கூடம் லீவுதானேன்னு, ஆத்துல இதப் போட்டுண்டு உக்காந்திருக்கா... நாநதான்..."

"நிறுத்துடீ! பள்ளிக்கூடத்துக்கு லீவுன்னா, மானம் மரியாதைக்கும் லீவா? ஆத்துலதான் உக்காந்திருக்கப் போறான்னு, அவுத்துப் போட்டுட்டு உககாரச் சொல்லேன்... எவளோ மானங்கெட்டவ வாங்கிக் குடுத்தாளாம், இவளும் மாட்டி விட்டிருக்காளாம், துளியாவது புத்தி இருக்கா பாரு! எங்கக்காவுக்கு ஒரு

T. Nanda Kumar
He is an obivare

எழவும் கிடையாது... அவ பொண்கள் பேண்ட்டையும் சட்டையும் மாட்டிண்டு, தலைமயிரைக் கத்தரிச்சுண்டு நிக்கறதே, அந்த மாதிரி இஞ்சயும் நினைச்சு ணூட்டாளா! இருக்கட்டும் இந்த வருஷ லீவுக்கு இந்தப் பக்கமே வராதேனு கடுதாசி எழுதிப் போட்டுடறேன்! இந்தாடி, இவ டிரஸ்ஸைக் கழட்டிப்புட்டு பாவாடையச் சுத்திவிடு மொத காரியமா! ஒழுங்கா காலு கையெல்லாம் மூடிண்டு உக்காரச் சொல்லு, பொம்மனாட்டிக் கழுதைய! சின்னது எங்கேடி? எங்க தொலைஞ்சிது அது?"

அவன் கேள்வி காதில் விழாத மாதிரி பாலா காபி டம்ளரை மறுபடி அவன் முன் நீட்டினாள். மெதுவாகப் பேசினாள்.

"முக்கி முனகி இப்பத்தான் லதாவுக்கு எட்டு வயசாறது... அதுக்குள்ள பாவாடைய சுத்து, காலை மூடு, கைய மூடுன்னு ஏன்னா இப்பிடி படுத்தறேள்? நாமதான் வாங்கல்லேன்னாலும், யாராவது வாங்கிக் குடுத்தாலாவது இந்த மாதிரி டிரெஸ்ஸெல்லாம்..."

அவள் சமாதானம் ஆத்திரத்தை அதிகமாக்கிய மாதிரி சாரங்கன் காபியைத் தட்டி விட்டான்.

"வாய மூடுநீ, கடங்காரீ! எதுத்துப் பேசினே, கொன்னுப்புடுவேன்! எல்லாக் கழுதைக்கும் ஒழுங்கா பாவாடையக் கட்டி வெயி... இல்லேன்னா, ஒண்ணுகூட நாளைலேருந்து பள்ளிக்கூடம் போக வேண்டாம்... சின்னது எங்கேனு கேட்டேன், அதுக்கு பதிலக் காணும். பேச வந்துட்டா... எங்கடீ அது?"

"அவ... அம்மிணியாத்துக்கு விளையாடப் போயிருக்கா..."



"எ... என்னது! விளையாடப் போயிருக்காளா? இந்த கால வேளைலியா? அப்படியே விளையாடித் தொலைக்கணும்னா ஏன், இஞ்ச விளையாட இடமா இல்லே? கொல்லையோட வாசல் நீளமா நீட்டிண்டிருக்கு, இஞ்ச விளையாட முடியலியாமா? இத விட்டுட்டு, அம்மிணியாத்து மூக்கோட்டை எடத்துல போய்த்தான் விளையாடணுமா? இந்தாடீ லதா, எழுந்திரு... போய் அவள இழுத்துண்டு வா... இன்னும் ஒண்ணாங்கிளாஸ் கூட படிச்சு முடியலலே, அதுக்குள்ள ஊர்மேய ஆரம்பிச்சாச்சு! வேணுன்னா அம்மிணியும் கிம்மிணியும் இஞ்ச வந்து கூத்தடிக்கட்டும்! நீ ஏண்டி இன்னும் நிக்கறே! இன்னொரு காபி கொண்டானு நா... பத்துதரம் சொல்லணுமா"

கலந்து கொண்டு வந்ததை தட்டிவிட்டு அரை நிமிஷம் ஆகவில்லை, அதற்குள் மறுபடி கேட்கிறீர்களே— என்று எதிர் கேள்வி எழுப்புவதைப் பற்றி நினைத்துக்கூட பழக்கமில்லாத காரணத்தால் பாலா அடித்துப் பிடித்துக் கொண்டு திரும்பினாள்.

இரண்டு நிமிஷங்களில் ஆவி பறக்க காபியுடன் வந்து நின்றாள்.

ஒரு வாய் குடித்து, அவன் கோபம் அடங்கும் வரை காத்திருந்தவள், மெதுவாய் "ஒரு விஷயம்னா..." என்றாள்.

தம்ளரை தழைத்த சாரங்கன் 'அ?' என்றான் அதட்டலாய்...

"ஒண்ணுமில்லேன்னா... வந்து... அம்மா கும்மோணம் போகணுங்கறா..."

"கும்மோணமா? எதுக்கு? இப்ப என்ன கல்யாணம் பாழாப்போறது அஞ்ச?"

"கல்யாணம் ஒண்ணுமில்லே... ரெட்டைவட சங்கிலி பண்ணக்குடுத்து இருவது இருபத்தஞ்சு நாளுக்குமேல ஆறதோன்னோ... அதப் போய் வாங்கிண்டு வந்துடலாமேன்னுதான்..."

அசுவாரஸ்யமாய் கேட்டுக்கொண்டு நின்றிருந்த சாரங்கன் திடுமென திரும்பிப் பார்த்தபோது அவன் கண்களில் ஒரு ஆங்காரம் அழுத்தமாய் தெரிந்தது.

"சங்கிலியா ? எப்போ பண்ணக்குடுத்தது ? யாரக் கேட்டுண்டு குடுத்தே ? எங்கிட்ட ஒரு வார்த்தைகூட சொல்லலியே? எனக்குத் தெரியாம இன்னும் என்னெல்லாம் நடக்கறது இஞ்ச ?"

பாலா அரண்டு போனாள்.

"ஐயோ... தெரியாம ஒண்ணுமே பண்ணல்லியேன்னா... அன்னிக்கு அம்மாஞ்சியாத்து பேரன் ஆண்டு நிறைவுக்காக கும்மோணம் அழைச்சுண்டு போனப்போ, கடத்தெருவுல எங்கள எறக்கிட்டு நீங்க கூட பாங்க்குல யாரையோ பாத்துட்டு வர்ரேன்னு போனேளே... மறந்துட்டேளா !"

"மூடுநீ வாய ! ஒரு வார்த்தை கேட்டா ஒம்பது வார்த்தை பதில் பேசறே ! என்னிக்குப் போனோம், எப்பப் போனோம்னா கேட்டேன் ? சங்கிலி எப்போடீ பண்ணக்குடுத்தே ?"

"என்னன்னா புதுசாட்டம் கேக்கறேள்? அன்னிக்குத்தான் நகைக் கடைக்குப் போய் பத்தர்கிட்ட குடுத்துட்டு வந்தோமே! இப்பிடி நகை வாங்கற காசுக்கு, செகிண்ட் ஹாண்ட் கார் ஒண்ணு வாங்கினாலும் உபயோகம்'னு நீங்ககூட திட்டிண்டே வந்தேளே..."



"ஆ... மா ! திட்டாம, தலைல தூக்கி வெச்சுண்டு ஆடுவாளாக்கும் ! இஞ்ச வயல்ல எறங்கி சேத்துல அல்லாடறது நா ! ரா இல்லே பகல் இல்லேனு நா ஒழைச்சு சம்மாதிச்சா, நீயும் ஒங்கம்மாவுமா நகையா வாங்கி மாட்டிப்பேள் ! மனுஷாளுக்குத் துளி விவஸ்தையானும் இருக்கணும்... 'அன்னிக்குத் திட்டினேளே'னு இன்னிக்கு ஞாபகப்படுத்தினா ஆச்சா? ஏதுரா, புருஷங்காரன் வாண்டாம்னு சொல்றானேனு செய்யாம இருந்தா, அது சமத்து காரியம்... அதவுட்டுட்டு..."

அன்றைக்கு திட்டினாலும் 'ம்... ம் எப்படியோ ஒழிஞ்சு போங்கோ... செய்யறத காத்ரமா செய்யச் சொல்லு... உங்கம்மா செஞ்சாலும், போட்டுக்கப் போறது நம்ம அபிராமிதானே...!' என்று அனுமதி தந்ததோ, நீளமாய் பேசியதோ நினைவே இல்லாத மாதிரி சாரங்கன் சாதிக்க, வழக்கம் போல அவனை எதிர்த்து பேசாமல் பாலா மௌனித்தாள். பிறகு, "இந்த தரம் மட்டும்..." என்று அவள் பேசத் துவங்க, குதிருக்கு அந்தப் பக்கத்திலிருந்து "பாலா... இங்க சித்த வா...' என்று குரல் கேட்டது.

தூணில் சாய்ந்து நின்றிருந்த பர்வதம், அவள் தாய், பாலா உள்ளே நுழைந்ததும நுழையாததுமாய் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

"என்னடி பாலா இது, உனக்கு நேரங்காலமே தெரியலியே ! மாப்பிள்ளை கோவமா இருக்கறப்போ நகையும் கட்டையும் பத்தி பேசுவாளோ !"

"நீதானேம்மா கும்மோணம் போகணும்னு சொன்னே ? இப்பவே சொன்னத்தானே, பஸ் புடிச்சு போயிட்டு வர தோதா இருக்கும் ? இருட்டறத்துக்கு முன்னாடி திரும்பி வரவேண்டாமா ?"

"சொன்னேன்டி... அதுக்காக அவர் கோவமா இருக்கறப்போ..."

பாலா கிசுகிசுப்பாய் 'ப்சு' என்று சூள் கொட்டி கழுத்தை நொடித்தாள்.

"ஆ... மா... இவர் என்னிக்கு கோவமில்லாம வாழ்ந்து கிழிச்சார்..."

"ஷ் ஷ்... மெதுவாய் பேசுடீ பாலா... மாப்பிள்ளை காதுல விழப்போறது!"

இவர்கள் பேசியது காதில் விழுந்துவிட்ட மாதிரி, வேகமாய் நடந்து சமையலறைக்குள்ளேயே வந்து நின்றான் சாரங்கன்.

"என்ன கிசுகிசுத்தாறது? பொண்ணத் தூண்டி விட்டுப்டு இப்ப அடக்கற மாதிரி நடிச்சாறதாக்கும்!"

பர்வதம் ஏற்கனவே நன்கு மூடி இருந்த தலைப்பை இன்னும் அழுத்தமாய் இழுத்து விட்டு கொண்டாள்.

"இல்லை மாப்பிளே..."

"இப்ப உங்களோட பேசிண்டிருக்க எனக்கு நேரம் இல்லை... தென்னந்தோப்புல ஆளுங்கல்லாம் காத்துண்டு இருக்கறப்போ இஞ்ச சமயம் தெரியாம எழவெடுத்தா எனக்கு கோவம் வரும்... கொழந்தையை கிள்ளிவுட்டுட்டு தொட்டிலையும் ஆட்ற சாமர்த்தியம் எல்லாம் இஞ்ச வேண்டாம், ஆமா சொல்லிட்டேன்"

கத்திவிட்டு, வந்த வேகத்திலேயே அவன் திரும்பிய போது, பாலா விடாமல் "இந்த தரம் மட்டும்னா என்று ஆரம்பிக்க சாரங்கன் ஆத்திரத்துடன் குரலை உயர்த்தினான்.

"சொல்ல சொல்ல எதிர்த்து வாயாடினா நா பொல்லாதவனாயிடுவேன்! கும்மோணத்துக்குப்



போவாண்டாம்... சங்கிலியும் வாங்க வாண்டாம்! நகைய வாங்கு, பொடவைய வாங்குனு யாரும் இங்க தூபம் போட்டுண்டு இருக்க வாண்டாம்... ஒழுங்கா ஆத்துக் காரியத்தப் பாத்துண்டு இருக்கறதானா எல்லாரும் இருக்கட்டும்! இல்லேன்னா, சின்னப் பொண்ணு ஹாஸ்டல்ல கண்டத சாப்டுண்டு இருக்காளேனு சதா ஒப்பாரி வெசகுண்டு இஞ்ச இருக்கறவா நிம்மதிய கெடுத்துண்டு இருக்கறத்துக்கு பதிலா பட்டணத்துக்குப் போய் பொண்ணுக்கு சமைச்சுப் போட்டு படிக்க வெக்கட்டும்! மொதல்ல ரயிலேத்தி அனுப்பு! இஞ்ச தொணதொணப்பு துளியாவது கொறையும்!"

தொடர்ந்து மேலே பேசத் தெரியாமல் பாலா நின்றபோது, வாசலிலிருந்து யாரோ "சாரங்கா......" என்று கூப்பிடும் சப்தம் கேட்டது.

"ப்ச... அதுக்குள்ள எவனோ வந்துட்டான்... வேலையத்தப் பசங்க..." என்ற சலிப்போடு கூடத்து நாற்காலியின் முதுகில் மாட்டியிருந்த சிவப்புக் காசித் துண்டை எடுத்து வெற்று மார்பின்மீது போர்த்துக் கொண்டே வெளியே வருவதற்குள், வாசலில் குரல் கொடுத்தவன் ரேழியைத் தாண்டி கூடத்துக்குள் நுழைந்திருந்தான்.

"சாரங்கா... அட, இங்கதான் இருக்கியா... நாலு தரம் குரல் கொடுத்துப் பார்த்தேன், ஆளைக் காணுமேனு நானே..."

"வா... வா... உக்காரு... என்ன இப்போ திடீர்னு? நீ வருஷா வருஷம் பெரிய லீவுக்குத்தானே குடும்பத்தோட வர்ற பழககம்?"

முற்றத்து பெஞ்சில் இருவருமாய் அமர்ந்துகொள்ள, உள்பக்கம் திரும்பி பாலாவிடம் "இந்தாடி... காபி அனுப்பு, வாத்தியாராத்து நாகராஜன் வந்திருக்கான்..." என்றவன், நாகராஜனைப் பார்த்து "சொல்லுடா... என்ன விசேஷம்?" என்றான் சிரிப்புடன்.

நாகராஜன் பெருமையாய்த் தலையாட்டிச் சிரித்தான்.

"ம்... விசேஷந்தான்... என் ரெண்டு பையனுக்கும் பூணூல் போட்டுடலாம்னு முடிவு பண்ணியிருக்கேன்... வர்ற ஞாயித்துக்கிழமை ஒரே முகூர்த்தத்துல ரெண்டு உபநயனத்தையும் வெச்சிக்கலாம்னு ஒரு ஏற்பாடு... அதான்..."

"இப்ப என்னடா திடீர்னு பூணூல்? இப்ப போடப் போறதா பேச்சு இருக்கறதாக்கூட எங்கிட்ட உங்கம்மா சொல்லலியே? நாலு நாள் முந்திகூட இங்க வந்து அரிசி ஒரு மூட்டை வாங்கிண்டு போனாளே, ஒண்ணும் சொல்லலியே?"

"இந்த விசேஷத்துக்குத்தாண்டா அரிசி வாங்கி வெச்சிருக்கா... இல்லேன்னா, அம்மா ஒண்டி ஆளுக்கு திடீர்னு மூட்டை அரிசி எதுக்கு? வருஷாந்தர நெல்லு தான் பத்தாயம் நெறைய இருக்கே! உங்கிட்ட சொல்லலாம்னுதான் அம்மாவும் நெனைச்சாளாம், ஆனா, என்ன இருந்தாலும் ஊர்ல நீதான் பெரிய மனுஷன்... எனக்கு சினேகிதன்னாலும், பெரிய மிராசு இல்லியா! ஆம்பிளை நா வந்து நல்ல சேதியச் சொல்றதுதான் கௌரவமா இருக்கும்னு நெனைச்சி இருக்கா! அதான்..."

பழைய சினேகிதத்தில் 'வாடா, போடா' என்று கூப்பிட்டாலும்கூட, ஊருக்குப் பெரிய மனிதன் என்ற



கௌரவத்தை மறக்கவில்லை நாகராஜன் என்பது பெருமிதத்தைத் தர, காலையிலிருந்து இருந்துவந்த எரிச்சல் கொஞ்சம் குறைந்து சந்தோஷமாய் நிமிர்ந்து உட்கார்ந்தான் சாரங்கன்.

"ம்... பம்பாய்லேர்ந்து வந்து இந்தப் பட்டிக்காட்டுல பூணூல் போடறியாக்கும்! ஜமாய்..." என்றவன், எவர்சில்வர் தட்டில் வைத்து அபிராமி கொணர்ந்த காபித் தம்ளரை எடுத்து நாகராஜனிடம் நீட்டினான்.

'ஏண்டி கூடத்துக்கு வந்தே?' என்கிற பல்லவியை மீண்டும் கேட்க நேரிடுமோ என்ற அச்சத்தில், டம்ளரைக் கொடுத்தும் கொடுக்காததுமாய் அபிராமி உள்ளே ஓடிப்போனாள்.

"பட்டிக்காடாவது! பெரிசா டவுன்னு இல்லாட்டாலும், இங்க என்னடா கொறைச்சல்? பட்டணத்துல இந்த மாதிரி திடும்னு ஏற்பாடு பண்ணி ஒரு விசேஷத்த நடத்த முடியும் சாரங்கா? இங்க பாரு, சத்திரம் தேடணுமா, சாஸ்திரிகள் தேடணுமா? ஒண்ணு மில்லே... சாப்பாட்டு சாமானும் மத்ததும் மட்டும் வாங்கிட்டா, ஊர் மனுஷா ஒத்தாசையோட ஜாம் ஜாம்னு பெரிய கல்யாணத்தையே நடத்திப்பிடலாம்! பம்பாய்ல ஒண்டியா உப்பு, புளி வாங்கறதுக்குள்ளியுமே தாவு தீர்ந்துடும்! இதுல என் பொண்டாட்டி வேற வேலைக்குப் போறா... என்னிக்கு நேரம் கிடைச்சு, என்னிக்கு ஏற்பாடுகளக் கவனிக்கறது! நல்லவேளை, எனக்கு ரெண்டும் புள்ளையா பொறந்துதோ, நா பொழைச்சேன்! அம்மா எல்லா சமாச்சாரத்தையும் கவனிச்சுண்டு, 'வா'ன்னு ஒரு வரி எழுதினா, ஒடனே கிளம்பி சம்பந்தியாட்டமா வந்துட்டேன்! இதோட என் பொறுப்பு தீர்ந்தது... அப்புறம் பசங்க பெரிசாயிடுத்

துன்னா, கல்யாணம் கில்யாணமெல்லாம் பொண்ணைப் பெத்தவன் பாடு, எனக்கென்ன! ஆனா ஒண்ணு, சொத்து பத்து இல்லாம இருக்கறதுக்கு உன்ன மாதிரி மூணும் பொண்ணாப் பெத்து வெச்சிருந்தா, கவலை பட்டுபட்டே நாப்பது வயசுக்குள்ளியே எனக்கு ஆயுசு முடிஞ்சுப் போயிடும்..."

தன ஹாஸ்யத்தை தானே ரசிக்கும் தினுசில் நாகராஜன் ஒருதரம் துடையில் தட்டிக் கொண்டு 'ஹோ... ஹோ' வென்று ஆர்ப்பாட்டமாய் சிரிக்க, சாரங்கனுக்கு ஆத்திரத்தில் நாக்கு பரபரத்தது. வேலையாட்களையும், பெண்டாட்டி குழந்தைகளையும் சவுக்கு மாதிரி வார்த்தைகளை வீசி வாயை அடக்கி வைக்கிற மாதிரி இவன் வாயையும் அடைக்கும் தினுசில் ரெண்டு வார்த்தை சுருக்கென்று சொல்லிவிட்டால் என்ன என்று தோன்றிய நினைப்பை உடனே மாற்றிக் கொண்டான்.

இல்லை, இல்லை— எனக்குதான் பேசத் தெரியும் என்கிற ரீதியில் வாயாடகூடாது— ஏதாவது காரியம் ஆகவேண்டுமென்றால்தான் இவனை மாதிரி நபர்கள் இங்கே வருவது வழக்கம். இப்போதும் ஏதோ ஆக வேண்டிதான் வந்திருக்கிறான. அது என்ன என்று தெரிந்து கொண்டு, ஒரு உதவியும் செய்யாமல் கழுத்தறுத்தால் போயிற்று!

"என்ன சாரங்கா... சிரிப்பு வர்லியா? அதுசரி, பெரிய மனுஷன் நீ, அத்தனை சுலபத்துல சிரிச்சுப் புடுவியா! ஆமா, நா போன தரம் வந்தப்போ, உம் பொண்டாட்டி புள்ளையாண்டிருந்ததா ஒரு ஞாபகம்... என்ன, குழந்தை சத்தம் எதுவுமே கேக்கலியே? அம்மாக்கு ஓரோர் தரம், லெட்டர் எழுதறப்ப



கேக்கணும்னு நினைச்சிப்பேன்— ஆனா, மறந்துடுவேன்."

"ப்ச்... அதுக்கு ஆயுசு இல்லே... உசிரே இல்லாமத்தான் பொறந்தது..."

நாகராஜன் சட்டென்று மௌனமாகி, "ஸாரிடா..." என, சாரங்கன் அலட்சியமாய் புன்னகைத்தான்.

"எதுக்குடா ஸாரி? நல்லவேள அப்பவே உசிர விட்டுதேன்னு நா சந்தோஷப்படறேன்! இல்லேன்னா, மூனோட நாலாவதா அதுவும் உன் வாயில விழுந்து பொறப்படும்!"

"ஏன், அதுவும் பொண்ணுதானா? என்னடா இப்பிடி எல்லாத்தையும் செலவா பெத்து வெச்சிருக்கியே! 'வரவு' ஒண்ணாவது வேண்டாமா? அடுத்ததுலியாவது சமத்தா நடந்துக்கோ, என்னை மாதிரி!"

நாகராஜனின் இடிச்சிரிப்பு மறுபடி நாராசமாய் ஒலிக்க, சாரங்கனுக்குப் பொறுக்க முடியாமல் போயிற்று.

"போதுண்டா உன் வேடிக்கை! இப்ப நீ எதுக்கு இஞ்ச வந்தே, அதைச் சொல்லு மொதல்ல! எனக்கு வேலையிருக்கு..."

"பத்தியா, அத மறந்தே போயிட்டேன்... ஞாயித்துக்கிழமை முகூர்த்தம் வெச்சிருக்குனு சொன்னேனோல்லியோ? ரெண்டு நாள் முன்னாடியே எனக்குக் கொஞ்சம் வாழஎலை, பால் இதுக்கெல்லாம் நீதான் ஏற்பாடு பண்ணணும்... இப்ப் ஊரு முழுக்க நீதான் பால் சப்ளையாமே?"

நாகராஜனை மட்டம் தட்ட ஒரு நூலிழை கிடைத்த சாரங்கன உடனே நிமிர்ந்து எழுந்து நின்றான. "பாலா? அதுவும் பூணூல் முகூர்த்தத்துக்கா ம்ஹூம்— இத மொதல்லியே சொல்லியிருக்க மாட்டியோ? பால் கிடைக்கறது ரொம்ப கஷ்டம்... நல்ல கறவை மாடெல்லாம் செத்துப்போச்சு...... இருக்கற ஒன்று ரெண்டும் கறவை வத்திப்போச்சு! ஆத்து உபயோகத் துக்கே போரும் போறாமத்தான் இருக்கு... நீ வேற யாருகிட்டயாவது ஏற்பாடு பண்ணிக்கோ..."

நாகராஜனின் பதைப்பு கலந்த ஏமாற்றம் வெளிப்படையாகத் தெரிந்தது.

"என்னடா இப்பிடி சொல்லிட்டே! உன்னை நம்பிண்டுதான் நா நிம்மதியா இருந்தேன்! இப்ப வேற எங்க திடீர்னு போய் நிக்கறது?"

சாரங்கன் திருப்தியோடு சிரித்தான்.

"நா என்ன பண்ணட்டும்? ஸாரி..." என்று தோளைக் குலுக்கிவிட்டு, "இந்தாடி... நா வெளில போறேன்... வாசக்கதவத் தாப்பா போட்டுக்கோ..." என்று உள் பக்கமாய் பொதுவாய் கத்தினான். தவிப்போடு நின்ற நண்பனை லட்சியம் பண்ணாமல் வாசலைப் பார்க்க நடந்தான்.

பின்தொடர்ந்து வந்த நாகராஜன் வாசத் திண்ணைக்குப் பக்கத்தில் நின்று தூணைப் பிடித்துக் கொண்டான்.

"அப்ப பால் இல்லேங்கறே! சரி, வேற எங்கயாவது சமாளிச்சுக்கறேன், வாழஎலை இதர சாமான்களுக்காவது ஏற்பாடு பண்ணுவியோன்னோ?" என்றவன்,



திடுமென "சாரங்கா, உனக்கு என்னடா வயசாறது? என்னைவிட சின்னவன்தானே நீ?" என்றான்.

"ம்? முப்பத்தெட்டாறது! இப்ப என்ன திடீர்னு வயசு ஆராய்ச்சி?"

"ஒண்ணுமில்லே... என்னைவிட ரெண்டு வயசு தான் நீ சின்னவன். ஆனா என்னமோ, இருபத்தஞ்சு வயசுக்காரன் மாதிரி அன்னிக்குப் பார்த்தாப்பல அப்பிடியே இருக்கே! தலையில ஒரு நரையில்லை... உடம்பும் கட்டுவிட்டுப் போகாம மார்க்கண்டனா... உஹூம்... மூன்று பொண்களுக்குத் தகப்பன்னு சத்தியமா உன்னை யாரும் சொல்லமாட்டா... என்னப்பாரு, நெத்தி அகலமாயிண்டே வரது! இருக்கற நாலு மயிர்ல, ரெண்டு நரைச்சுப் போயிடுத்து! என்ன இருந்தாலும் நீ இன்னும் ஜோராத்தாண்டா இருக்கே! அதனாலத்தான் சொல்றேன், நம்பிக்கை இழக்காம 'வரவு'க்கு முயற்சி பண்ணிப் பாருனு— என்ன?"

தொடர்ந்து அலைச்சிரிப்புடன் நாகராஜன் போனபின்னாலும், சாரங்கன ரொம்ப நேரம் வாசலி லேயே எரிச்சலுடன் நின்றிருந்தான்.

பிறகு தோப்புக்குப் போய் விவகாரங்களை கவனித்து, மதிய சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வந்த பின்னாலும்கூட வேறு எதிலும் கவனம் பதியாதபடி அதே எரிச்சல் மேலோங்கி நின்றது.

ஒரு மணி தருவாயில், சமையல்கட்டு கதவைப் பிடித்தபடி பாலா, "சாப்பிட வர்றேளா? எலையப் போடட்டுமா? கொழந்தைகள் உங்களுக்காகக் காத்துண்டிருக்கான்னா..." என, வேண்டா வெறுப்பாக அமர்ந்தான்.

பக்கத்தில் வரிசையாய் அபிராமி, லதா, புவனா மூன்று பெண்களும் உட்கார்ந்திருக்க, பாலா பரிமாறத் தொடங்கினாள். குதிருக்கு அந்தப் பக்கமாய் நின்று ஒவ்வொரு பாத்திரமாய் எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள் பர்வதம்.

திடுமென— சுற்றிலும் பெண்களே நின்று வியூகம் அமைத்துக் கொண்டிருக்க, தான் அதில் பரிதாபமாய் அகப்பட்டுக் கொண்டுள்ளது மாதிரியான எண்ணம் தோன்ற, எரிச்சலில் சாரங்கனின் கோபம் கட்டுக்கடங்காமல் போயிற்று.

"ரூம்ல இன்னும் அத்தனை எடம் பாக்கியிருக்கே, வரிசையாய் விடாம பொண்ணே பெத்து கொலு வெக்கறதுதானே! பாக்கியிருக்கற அங்கணத்துல நீயும் உங்கம்மாவும் நில்லுங்கோ! எல்லாம் இஷ்டப்படி சமைச்சு கொட்டிண்டு, இஷ்டப்படி சுத்துங்கோ, பார்த்து ஊர் கைய தட்டிண்டு சிரிக்கட்டும்! ச்சே... ஒரே பொம்மனாட்டி ராஜ்யமாப் போயிடுத்து! எழவு— எல்லாம் எம்போறாத காலம்! ஆம்பிளையா நெஞ்ச நிமித்திண்டு வாழலாம்னா ஒரு விடிவு பொறக்க மாட்டேங்கறதே!"

உட்கார்ந்து கத்திய சூட்டோடு எழுந்து நின்றவன் சாப்பிடாமலே வெளியேற, எதற்காக இந்த திடும் கத்தல் என்று புரியாத அவஸ்தையுடன் "என்னன்னா... என்னன்னா..." என்று பாலா உடன் ஓடிவர, "சீக்கிரமாப் போயி மாப்பிள்ளைய சமாதானப் படுத்துடீ..." என்று பர்வதம் பதற,— அப்பாவின் கோபம் தெரிந்த சமாசாரம்தான் என்றாலும் இந்த அளவுக்கு பீரிட என்ன நடந்தது என்று விளங்காமல் மூன்று பெண்களும் திருதிருக்க—



பிறந்தது எல்லாம் பெண்ணாய் போயிற்றே, பேர் சொல்ல ஒரு பிள்ளைகூட இல்லையே என்று எப்போதோ சாரங்கனுக்குள் விழுந்த ஏக்கம், பிளாட்டிங் பேப்பரை ஸ்பர்சித்த மை மாதிரி பரவியிருந்தாலும், இதற்கு எப்படி தீர்வு காணலாம் என்கிற கேள்வியாய் உறுத்தத் தொடங்கியது அன்றைக்குத் தான்; அந்த முற்பகல் பொழுதிலிருந்துதான்!

## 2

ஊருக்குப் பெரிய மனிதன் என்ற ஹோதாவில் இன்று அதிகாரம் கொடி கட்டிப் பறக்க வாழும் சாரங்கனை, இத்தனை சொத்து சுக சௌகர்யங்களும் 'வாடா ராஜா' என்று கன அக்கறையுடன் அழைத்து மடியில் உட்கார வைத்துக் கொண்டது ஒரு தனி கதை...

'குருட்டு அதிர்ஷ்டம்', 'லாட்டரிப் பரிசு', 'கூரையைப் பிய்த்துக்கொண்டு கொட்டின தெய்வம்'— என்று எத்தனை விதமான யோகங்கள் உண்டோ, அத்தனையும் ஒன்றாய் சேர்ந்து ஒரு சுபயோக சுபதினத்தின் முகூர்த்த வேளையில் அவனை அலாக்காய்த் தூக்கி அரண்மனை சிம்மாசனத்தில் ஏற்றி வைத்ததுதான் நிஜம்.

அதிர்ஷ்டத்தின் அரவணைப்பு மட்டும் இல்லாமல் இருந்தால், திருச்சியில் ஏதோ ஒரு தனியார் கம்பெனியில் ஐநூற்று சொச்சம் சம்பளம் வாங்கிக் கொண்டு, காமா சோமா என்று கைக்கும் வாய்க்கும் போதாமல் ஒரு குடுத்தனத்தை நடத்திக் கொண்டு இருப்பானே ஒழிய, இப்படியா? ராஜ தர்பாரா? ம்ஹூம்— நிச்சயம் இல்லை.



என்றோ எப்போதோ தங்கைக்குக் கொடுத்த வார்த்தையை மறக்காமல், பாலாவைப் பெற்ற வைத்தியநாதன், தங்கை தைலாம்பாளின் ஒரே புத்திரன் சாரங்கனுக்குத் தன் மூத்த பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்த அன்றே சாரங்கனின் அட்டஹாசமான வாழ்க்கைக்கு யார் கண்ணுக்கும் தெரியாமல் விதை ஊன்றப்பட்டுவிட்டது என்றாலும், நினைத்த நினைப்பில்லாமல் திடுமென ஒருநாள் அவர் பிராணனை விட்ட பிறகே யதார்த்தம் புரிபட்டு ஓஹோ என்று சாரங்கன் விழித்துக்கொள்ள, அதிர்ஷ்டம் மளமளவென்று வேர் விட்டு ஆலமரமாய் வளர்ந்து படர்ந்தது.

இஞ்சிக்குடி கிராமத்தின் பெரிய மிராசு, பட்டாமணியம், ஏராளமான நஞ்சைக்கு சொந்தக்காரர் என்ற அடைமொழிகளோடு, அந்தத் தாலுக்கா முழுவதுக்கும் 'நியாயவான்' என்ற பட்டம் வேறு உண்டு வைத்தியநாதனுக்கு.

அக்கம் பக்கத்தில் எந்த ஊரிலும், எந்த விவகாரத்திலும் தலையிட்டு மத்தியஸ்தம் செய்து வைகக அவரைத்தான் அணுகினார்கள். அவர் பேச்சுககு மறு அப்பீல், எப்போதுமே இருந்ததில்லை.

உப்பிலியப்பன் கோவில் பெருமாள் மாதிரி வாட்டசாட்டமாய் வாசல் ரேழி கொள்ளாமல் வந்து நின்று, தாயத்து கோர்த்த பூணூல் மார்பில் புரள, தோளில் தொங்கின துண்டால் பிடறியைத் துடைத்தபடி தெருவைப் பார்த்தார் என்றால், அழுது கொண்டிருக்கும் குழந்தை வாயை மூடும்; அனாவசிய வம்பில் பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கும் ஆணும் பெண்ணும் அசட்டுச் சிரிப்போடு தலை குனிவர்... அப்படி ஒரு ஆகிருதி, ஸ்வபாவம்...

இந்த குணங்களினாலேயே, அக்ரஹாரத்து மனிதர்கள் மட்டுமல்லாமல், மேட்டுத்தெரு, குடியானவத் தெரு ஜனங்களும்கூட ஏதாவது ஒரு வழக்கைப் பிடித்துக் கொண்டு, 'பெரியவர் நீங்கதான் ஒரு வழி சொல்லணும்' என்று தினம் வாசற் பந்தலில் வந்து நிற்பது வழக்கமாயிற்று.

ஊர் வியாஜ்ஜியங்களில் காட்டிய நியாயத்தையே தன் சொந்த வாழ்க்கையிலும் மீறாமல் கடைப்பிடித்ததால்தான், சாரங்கனை மனசார மருமகனாக்கிக் கொள்ள வைத்தியநாதனுக்கு சாத்தியமாயிற்றோ!

இஞ்சிக்குடி பெரிய மிராசுக்கு, போனதை விட்டு இருப்பதை மட்டும் கணக்கிட்டால் இரண்டு குழந்தைகள், ஆசைக்கு ஒரு பெண், ஆஸ்திக்கு ஒரு பிள்ளை என்று.

தைலாம்பாள் என்கிற தையூ, வைத்தியநாதனை விட நாலு வயசு சின்னவள். கடைக்குட்டி என்பதால பெற்றவருக்கு ஏக செல்லம். இயற்கையிலேயே இருந்த வணங்காமுடித்தனத்துடன் இந்த செல்லமும் சேர்ந்து கொண்டதில் தையுவுக்கு நாக்கு ஒண்ணரை முழம் நீளம்; எவரையும் மதிக்காமல் நடக்கும் நடத்தை பற்றியோ கேட்கவே வேண்டாம்.

இந்தத் தையூவுக்கு அவள் ஆசைப்பட்ட தினுசிலேயே நாகரீக சிகப்புத்தோல் மாப்பிள்ளையாகத் தேடித்தேடிப் பிடித்து, தங்கள் அளவுக்கு அந்தஸ்து பணம் காசு இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்று மனசைத் தேத்திக்கொண்டு கல்யாணத்தை தடபுடலாய் நடத்தின கையோடு, மாப்பிள்ளையும் பெண்ணும் வசதியாய் வாழவென எக்கச்சக்கத்துக்கு சொத்தையும் கன்னிகாதானத்தோடு சேர்த்து



தானமாக வழங்கவே செய்தார்கள். ஆனால், கல்யாணமாகி மூத்த பெண் ராதாமணி பிறந்து, அடுத்தவன் சாரங்கன் தையூவின் வயிற்றில் ஆறு மாசமாக இருந்தபோது நிலமையே தலைகீழாக மாறிப் போய் விட்டது.

'வருஷத்துல ஒரே ஒரு தரம் காசைப் பாக்கறதுக்காக, முன்னூத்து அறுவத்தஞ்சு நாளும் மாரடிக்கறதாவது! வயலுமாச்சு, வாய்க்காலுமாச்சு!' என்று ஜம்பமாகப் பேசி, இருந்த நிலத்தையெல்லாம் விறறு மரக்கடை வைத்து, அனுபவமில்லாத தொழிலில் உழைப்பின்மையும் சேர்ந்துகொள்ள, கடையையே மூழ்கடித்துவிட்டு நின்றார் தையூவின் கணவர். மேற்கொண்டு இரண்டு மாசங்கள் போவதற்குள், 'கிராமத்து ஜனங்களுக்கு பொறாமையும் பொச்சரிப்பும் ரொம்ப ஜாஸ்தி... ஒருத்தர நன்னா வாழ விடாதுகள்! டவுனுக்குப் போயிட்டா இந்த பாடே இல்லே... ஓஹோன்னு இருக்கலாம்!' என்று தன் இயலாமைக்குப் பிறரைக் குற்றம் சொல்லி, திருச்சிக்கு ஜாகையை மாற்றிக்கொண்டு வந்தார்.

இத்தனை போதாது என்று, யாரோ குருட்டாம் போக்கில் சொன்னதை நம்பிக் கொண்டு ஒரு புது பிரிண்டிங் பிரஸ்ஸை ஆரம்பித்து, அதுவும் கல்யாணப் பத்திரிகையைத் தவிர வேறு ஒன்றையும் பார்க்காமல் இயந்திரங்கள் துருப்பிடித்து, பிறகும் விடாமல் புதுப்புது தொழிலாய் துவங்கி, நொடித்து... ஹூம்... என்ன நடந்து என்ன?

கடைசியில் உயிர் போகும்வரை அவர் ஜம்பம் மட்டும் கடுகத்தனை கூட குறையாததோடு, சின்ன வயசிலேயே கல்யாணமாகி அத்தனை வருஷங்கள்

ஒன்றாய் வாழ்ந்த தையூவையும் அந்த சவடாலும் திமிரும் நன்றாகவே ஒட்டிக்கொண்டதுதானே கண் கூடாய் நடந்தது?

புருஷன் காலமான பிறகு, பதினான்கு வயசு ராதா மணியையும் பத்து வயசு சாரங்கனையும் வைத்துக் கொண்டு தங்கை திருச்சியில் தனியாக சிரமப்படு கிறாளே என்ற ஆதங்கத்தில் ‘என்னோட இஞ்சிக் குடிக்கே வந்துடு தையூ... இஞ்ச இனிமே என்ன இருக்கு!' என்று வைத்தியநாதன் சொன்னபோது, தையூ, சுற்றி நாலு பெரிய மனுஷர்கள் இருக்கிறார்கள், பேசுவது தமையன் என்கிற பிரக்ஞை கூட இல்லாமல் அலட்சியமாய் சிரித்து உதட்டைப் பிதுக்கினாள்.

‘இஞ்சிக்குடிக்கா? நானா? அய்யே... அதெல்லாம் இனிமே தோதுப்படாதுண்ணா... ஸ்விட்சப் போட்டா லைட்டு, ஃபேன், குழாயைத் திறந்தா தண்ணி, நாலு தப்படிலே சினிமா கொட்டகை, கடை கண்ணினு நாங்கள்ளாம் பழகிட்டோம்... அத்தனையும் விட்டுட்டு கிராமாந்தரத்துக்கு வர்றது இனிமே சாத்தியமில்ல... சாரங்கன் நன்னா படிக்கறான். மேம்மேல காலேஜ்ல படிக்கணும்னு ஏகத்துக்கு ஆசைப்படறான்... அதனால அங்க வர்றதுங்கறத மறந்துடு... ஆனா, உன் கடமையச் செய்யணுங்கற ஆதங்கம் உனக்கு இருந்தா, ப்ரஸ்ஸை வித்துட்டு பணத்த பாங்குல போட்டுடு... வட்டி வந்தா வசதியா இருக்கும். அறுப்பு ஆனதும் வருஷாந்தரத்துக்கு நெல்லையும், அப்பப்ப மாசாந்தர சாமான்களையும் கொடுத்து அனுப்பிடு... அதான்... எனக்கு வேற என்ன வேணும்? ஒண்ணுமில்ல! உன் நிம்மதிக்கு என்னென்ன செய்யணுமோ செய்... நா தடுக்கவா போறேன்?' என்றாள் அழுத்தம் திருத்தமாய்.



சும்மா சொல்லக்கூடாது— ‘உன்னால் முடிந்ததை அனுப்பு' என்று மேலோட்டமாகச் சொன்னாலும், சர்க்கரையாய்ப் பேசி மற்றவர்களை மொட்டை அடிக்கும் சாமர்த்தியம் தையூவுக்கு நன்றாக கைவந்த கலையாகவே தெரிந்திருந்தது.

வாயைத் திறந்து, இது வேண்டும், அது வேண்டும் என்று கேட்க மாட்டாள். ஆனால் ஒவ்வொரு முறை வைத்தியநாதன் திருச்சிக்கு வரும்போதும் அலுக்காமல் சலிக்காமல் ஒரே புலம்பலைப் புலம்புவாள்.

‘எனக்கு அண்ணா நீ... உனக்கு நா அருமை. உனக்கும் எனக்கும் நடுவுல ஆயிரம் கொடுக்கல் வாங்கல் இருக்கும்... இதுகளுக்கு என்ன? எல்லாம் ‘உனக்கென்ன உங்கண்ணா தாங்குவான், கொண்டு வந்து சாய்ச்சுடுவான்னு சதா நாக்குல பல்லு பட ஆத்தாமைப்படறதுகள் அண்ணா...' என்பாள்.

‘நீ இங்க வந்தாலே அக்கம்பக்கத்து மனுஷாளுக்கு மூக்குல வேர்த்துடறதுண்ணா! ‘அண்ணா வந்திருக்காரா, என்ன கொண்டு வந்திருக்கார்?'னு வம்புக்கு அலையறதுகள்! ‘இப்ப பலாப்பழ சீசனாச்சே, ரெண்டு பழம் வந்திருக்குமே? கூடவே சாக்குல நாலு தேங்கா, மாங்கானு கொண்டு கூடம் பூரா எறக்கி யிருப்பாரே'னு பறக்கா வெட்டிகள மாதிரி கேக்கறா!' என்பாள்.

ஏற்கனவே வண்டி கொள்ளாமல் மூட்டை முடிச்சோடு வந்திருக்கும் வைத்தியநாதன், தங்கையின் புலம்பலைக் கேட்டதும் ஏதோ குற்றம் செய்தவர் மாதிரி குறுகுறுத்துப்போய், ஊருக்குத் திரும்பினதும் திரும்பாததுமாய் மறுபடி ஒரு மூட்டையைக் கட்டி வேலையாள் மூலமாகக் கொடுத்து அனுப்புவார்.

அண்ணாவின் இந்த வெள்ளை மனசு, தையூவுக்கு மகா சாதகமாய் அமைந்து போனது.

அதனாலேயே, ராதாமணி பெரியவளாகி வரன் பார்க்கத் துவங்கினபோது, தன் தகுதியை மறந்து அளவுக்கு மீறி பெரிய இடத்தில் தானே நிச்சயம் செய்து, அண்ணாவுக்கு வெறும் கடுதாசியில் நாலு வரி எழுதிப் போட்டுவிட்டு, 'ஏதோ, எனக்குத் தெரிஞ்ச தினுசுல நிச்சயம் பண்ணிட்டேன், இனிமே நீதான் பெரியவனா பொறுப்பா கல்யாணத்த நடத்தி வைக்கணும் அண்ணா' என்று துளி லஜ்ஜையில்லாமல் அவளால் பொறுப்பை வைத்தியநாதனிடம் தள்ள முடிந்தது.

இதோடு, எதைக் கேட்டாலும் அண்ணா செய்வார், அவருக்கு இளகின மனசு என்ற எண்ணம் தந்த தைரியத்தில்தான், எப்போதோ ஒரு பேச்சுக்காக அவர் சொன்ன வார்த்தையை அடிக்கடி நினைவுபடுத்தி, கையிலும் தலையிலும் அடித்து சத்தியம் செய்து கொடுத்த மாதிரியான பிரமையை உண்டாக்கி, சாரங்கன்— பாலா கல்யாணத்துக்கான அஸ்திவாரத்தை வலுவாகப் போடவும் முடிந்தது.

**வை**த்தியநாதனுக்கு பாலா பிறந்தபோது, சாரங்கனுக்கு ஏழு வயது.

திருச்சியிலிருந்து புண்ணியாகவாசனத்துக்காக வந்திருந்த தையூ, பளீரென்று சிகப்புத் தோலும் கறுப்பு வெல்வெட் துணியால் குல்லாய் போட்ட மாதிரி கவிழ்ந்திருந்த தலைமயிருமாய் குழந்தை பாலா இருப்பதைப் பார்த்து பிரமித்துப் போனாள்.

'சேப்பா எத்தனை அழகா இருக்கு! கண்ணும் மூக்கும் அழகா லட்சணமா, கிளி கொஞ்சறது போ!'



என்று குழந்தையை வாரியெடுக்கையில், அவள் அருகில் நின்றிருந்த சாரங்கன், 'பொம்மையாட்டமா இருக்கும்மா... நா தூக்கிப் பாக்கட்டுமா?' என, தையூவின் முகத்தில் குதூகலம் க்ஷணப்பொழுதில் பரவிப்போனது.

'தூக்கேண்டா... அத்தை புள்ளைன்னா, அவளுக்கு நீ ஆம்படையான்தானே! உனக்கு இல்லாததா... பேஷா தூக்கிக்கோ!' என்றவளின் சந்தோஷம் தனக்கும் தொற்றிக்கொண்ட மாதிரி வைத்தியநாதனும் சிரித்தார்.

'பிராப்தம் இருந்தா உன் வாக்கு பலிச்சுட்டுப் போறது! குழந்தைய சாரங்கன கையில குடு, தையூ...' என்றார்.

அன்று விளையாட்டாய் வந்து விழுந்த வார்த்தைகளை இருவருமே மறந்து விட்டாலும், குடும்பம் நொடித்துப்போய் புருஷனும் போனபிறகு, இந்த வார்த்தைகளை மறக்காமல் நினைவுக்குக் கொணர்ந்து தனக்கு சாதகமாக அடிக்கடி பயன்படுத்திக் கொண்டாள் தையூ.

—ராதாமணி கல்யாணத்த நன்னா நடத்தணும்னு அவர் சொல்லிண்டே இருப்பார் அண்ணா... இப்போ அவர் இல்லாட்டாலும் நீ ஒண்ணுலேயும் குறை வெக்க மாட்டேன்னு எனக்குத் தெரியும், நாளைக்கே சாரங்கனுக்கும் பாலாவுக்கும் நிச்சயமாச்சுன்னா, இஞ்சிக்குடில கல்யாணச் செலவுன்னு உனக்கு என்ன பெரீசா நா வச்சுடப்போறேன்?— என்றாள்.

—பாலாவுக்கு நகை, கிகை பண்ணணும்னா என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டுப் பண்ணு... என்

மாட்டுப் பொண்ணுக்கு என்ன போடபோறேன்னு நா தெரிஞ்சுக்க வாண்டாமா?— என்றாள்.

—பாலா பேர்ல கால் குழி நிலம்கூட வாங்காதேண்ணா... அதுக்கு பதிலா பணமா குடுத்தாலும் திருச்சில பெரிய வீடு வாங்கலாம்— என்றாள்.

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக,

—பாலா எஸ்ஸெல்சி படிச்சவரைக்கும் போதும், பொம்மனாட்டிக்கு அதுக்கு மேல படிப்பு என்ன வேண்டிக்கிடக்கு! எனக்குப் போட்டியா அவளும் காலேஜ்ல படிக்கப் போறாளானு சாரங்கன் கோவிச்சுக்கறான்!— என்றாள்.

இத்தனை வருஷங்களாக தங்கை இந்தப் பேச்சை எடுத்து, முடிவே செய்துவிட்ட மாதிரி அவளாகவே கருத்து தெரிவித்தபோதெல்லாம், என்ன இருந்தாலும் உறவு வகையில் உரிமை கொண்டவர்கள்தானே என்ற சமாதானத்தில், எதையும் மறுத்துப் பேசவில்லை வைத்தியநாதன்.

தன்னைப் போலவே தன் மனைவி பர்வதத்துக்கும் இதில் ஆட்சேபணை ஏதும் இருக்காது என்றே நம்பினார்.

ஆனால் பர்வதத்தின் நினைப்போ வேறாக இருந்தது.

முதல் முறையாக இந்தக் கல்யாணப் பேச்சு தீவிரமானபோது, ‘உறவு முறைதான்னாலும், மத்ததையும் யோசிக்க வாண்டாமா?’ என்று பர்வதம் சின்னக் குரலில் தயங்க, வைத்தியநாதன் சிரித்தார்.

‘மத்ததுன்னா? காசு பணத்தச் சொல்றியா? நமக்கு இருக்கறது ரெண்டே ரெண்டு பொண்கள்



தானே, சொத்தப் பிரிச்சுக குடுக்க எந்தப் புள்ளை இஞ்ச இருக்கு? இந்த சொத்து போறாதா, பாலா ஜாம ஜாம்னு இருக்க?’

‘நா அதச் சொல்லலே... சாரங்கனப்பத்தி முன்ன நாம கேள்விப்பட்டோமே, அது... வந்து...’

மனைவியின் பயம் நியாயமானதுதான் என்று புரிந்த தினுசில், வைத்தியநாதன் ஒரு நிமிஷம் கண்ணை மூடி யோசித்தார்.

யோசனையின் பலனாய் மறுநிமிஷம் தலையை மெதுவாய் ஆட்டி, ‘நீ வீணா எதையோ நினைச்சு பயப்படாதே பர்வதம்... வயசுப்புள்ளைகளனா இந்தக காலத்துல அப்படித்தான் இருப்பா... தாலியக் கையில குடுத்து, பொறுப்ப தலைல ஏத்திட்டோமனா தானா எல்லாம் சரியாப் போயிடும்...’ என்றார் உறுதியான குரலில்.

சின்ன வயசிலிருந்தே சாரங்கனின் குணம் அத்தனை உசத்தியானதாக இல்லைதான்.

எத்தனைக்கெத்தனை புத்தி அதீதமாக இருந்ததோ, அத்தனைக்கத்தனை குதர்க்கமும் வக்கிரமும் தளும்பிக்கொண்டுதான் கவனத்தை ஈர்த்தன.

பள்ளியில் படித்த நாளிலும், பின் கல்லூரி நாளிலும் அவனைப்பற்றி புகார் வராத நாளே இல்லை என்று சொல்லலாம்.

லீவுக்கு ஒவ்வொரு முறை இஞ்சிக்குடிக்கு வரும் போதும், ஊர் முழுவதையும் தன் சேஷ்டைகளால் அலற அடிப்பான்.

மாமாவோடு வயலுக்குப் போகிறேன் என்று சொல்லிவிட்டு, பக்கத்து வயலில் இறங்கி பயிரை

துவம்சம் செய்தபோதும்; வீடு வீடாகப் போய் மனிதர்களை மிரட்டி 'எனக்கு இதக் குடுக்கல்லேன்னா உங்காத்து பாப்பாவத் தூக்கி கிணத்துல போட்டுடுவேன்' என்ற போதும்; ஒரு மாட்டுக் கொட்டகையைக் கூட விடாமல் நுழைந்து அத்தனை மாட்டுக் கயிற்றையும் அறுத்து மாடுகளை ஓடவிட்டபோதும்; இன்னும்... இன்னும் எத்தனையோ நிகழ்ந்தபோதும்,

தையூ ஒரு முறைகூட அவனைக் கண்டித்தோ, அதட்டியோ பேசினவள் இல்லை.

மாறாக, 'புருஷப்புள்ளைன்னா அப்பிடித்தான் இருப்பான்... களிமண்ல புடிச்சு வச்ச மாதிரி முட்டியத் தேய்க்காம 'பொந்து'னு உக்காந்துண்டே இருந்தா, அப்பறம் என்ன ஆம்பிளை அவன்!' என்று பெருமையோடு திருஷ்டி வேறு சுற்றிப் போடுவாள்.

முதலில், 'இது என்ன துஷ்டத்தனம்!' என்று தோன்றிய எரிச்சலை, தங்கையின் பேச்சைக் கேட்டதும் அப்படியே தலைகீழாக மாற்றிக் கொள்வார் வைத்தியநாதன்.

இந்த 'ஆம்பிள்ளை' லட்சணங்கள், சாரங்கனுக்கு வயசு ஏற ஏற கூடிக்கொண்டேதான் போனதே தவிர, துளிக்கூட குறையவில்லை.

அவன் சுபாவத்தில் எப்படி இருந்தாலும் படிப்பில் மட்டும் கொஞ்சம்கூட ஏமாற்றாமல இருந்தது, தையூ அவனைக் கண்டிக்காமல் இருந்ததற்கும், அவனை எண்ணி பெருமை கொண்டிருந்ததற்கும் காரணமாக இருந்திருக்கலாம்.

பி. காம். படித்து முடிக்கும் வரை ஒரு வருஷம்கூட விடாமல் முதல் வகுப்பில வேறு பாஸானதில் தையூவுக்கு ஏக சந்தோஷம்.



'எம்புள்ளைக்கு இருக்கற புத்தி யாருக்கு வரும்! அதான் பொறாமைல, அவன் முரடன், போக்கிரி, வாயாடறான்னு என்னென்னமோ உளர்றா எல்லாரும்!' என்று கொடிக்கு நூறு தரம் சொல்லிக் கொள்வாள்.

கல்லூரியில் படிக்கும் காலத்தில், பரீட்சை முடிந்த கையோடு சாரங்கன் நண்பர்களுடன் சேர்ந்து காவேரியில் நீச்சலடித்துவிட்டு, இரவு பன்னிரண்டு வரை ஊர் சுற்றிவிட்டு 'புகை' வாசனையோடு வந்து நின்றதைப் பார்த்ததும், வைத்தியநாதனுக்குள் சின்னதாக எழும்பிய பயத்தைக்கூட, அவன் முதல் வகுப்பில் பாஸ் செய்துவிட்டான் என்கிற செய்தி ஒரேயடியாய் அமுக்கி விட்டது.

தொடர்ந்து, யாருடைய சிபாரிசும் இன்றி தன் வாய் ஜாலத்தினாலும், சவடாலினாலும் அவனே ஒரு தனியார் கம்பெனியில வேலை தேடிக்கொண்டபோது, அவனைப் பற்றி வரும் புகார்கள் அத்தனையுமே பொய் என்றுகூட ஆணித்தரமாக நம்ப முற்பட்டார் வைத்தியநாதன்.

அந்த நம்பிக்கையில்தான் மனைவியை சமாதானப்படுத்திவிட்டு, பாலாவை ரொம்ப மனநிறைவுடன் சாரங்கனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்தார்.

பதினாறு வயசு பாலா, இருபத்து மூன்று வயசு சாரங்கன் கட்டிய தாலியைக் கழுத்தில் வாங்கிக் கொண்டு, திருச்சியில் அந்தச் சின்ன போர்ஷனில் வாழத் துவங்கி முழுசாய் ஒரு வருஷம் போவதற்குள், வாழ்க்கையின் பொறுப்புகளைச் சுமக்க முடியாமல் சாரங்கன் திண்டாடித்தான் போனான்.

டாண்— டாண் என்று மணியடித்த தினுசில் ஆபீஸ் போக வேண்டியிருக்கிறது. உட்கார்ந்து ரசித்து சாப்பிட முடியாமல் அள்ளிப் போட்டுக்கொண்டு ஓட வேண்டியிருக்கிறது. சாயந்திரம் சீனியர் அக்கவுண்டண்ட் எப்போது தலையசைக்கிறாரோ அப்போதுதான் வீடு திரும்ப வேண்டியிருக்கிறது. என்ன வாழ்க்கை இது!

வக்கணையாய் சாப்பிட்டு, சுகமாய் தூங்கி, இஷ்டம்போல ஊர் சுற்றி, தினம் ஒரு சினிமா பார்த்து, பாதி ராத்திரி வரை சீட்டாடி...

ம்ஹூம். ஒன்றும் முடியவில்லையே!

வாழ்க்கை முறையே மாறிப்போய் செக்குமாடு கணக்காக ஆகிவிட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக— எவன் முன்னாலோ கை கட்டி சேவகம் செய்து, அவன் தார்க்குச்சி போட்டு ஓட்டுகிற மாதிரி பணிந்து பணிந்து கீழ்ப்படிந்து, அவன் தூக்கியெறியும் சம்பளத்தைப் பொறுக்கிக்கொண்டு வர வேண்டியிருக்கிறதே என்ற ஆத்திரம் சாரங்கனை ரொம்பவும் ஆட்டி வைத்தது.

பெற்ற தாயின் வாயால் ஒரு 'சசீ...' என்ற அவமதிப்பைக் கூட இதுவரை கேட்டதில்லை, இப்போது கண்டவனும் ஆபீஸில் அதிகாரியாய் உட்கார்ந்துகொண்டு, 'ஏன்யா இன்னிக்கு லேட்டு? இதென்ன ஆபீஸா, இல்லே உங்க வீடா?' என்கிறான்; 'என்னய்யா வேலை பண்ற, மனச எங்கயோ மேய விட்டுக்கிட்டு! ஒழுங்கா வேலை செய்யத் தெரியல லேன்னா எதுக்குய்யா வர்றே?' என்கிறான்; 'அஞ்சரை மணியானா சடால்னு கௌம்பிடறீயே, மத்த வேலைய எவன்யா முடிப்பான்?' என்கிறான்.



பி. காம். முதல் வகுப்பில் பாஸ்; எவர் எவரையோ பிடித்து வாங்கிய வேலை என்று ரொம்பப் பெருமிதத்தோடு வேலையில் சேர்ந்தவனுக்கு, அந்த வேலைக்கு உண்டான பொறுப்பும் கவனமும் மட்டும் பிடிக்காமல் போயிற்று.

வெள்ளைக்காலர் உத்தியோகம், மேலே தூசு படாமல் சம்பளத்தை வாங்கிக்கொண்டு போய் விடலாம் என்று நினைத்தவனுக்கு, பெரும் ஏமாற்றம்.

பேசாமல் எல்லாவற்றையும் தொலைத்துத் தலைமுழுகலாம் என்றால், இத்தனை விரட்டல்களுக்கும் பர்தியாய் அவர்கள் கொடுக்கும் சம்பளம் ரொம்பத் தேவையாக இருக்கிறதே!

படிக்கும் காலத்திலாவது மாமாவின் உதவி பெருமளவில் இருந்தது. வருஷாந்தர மளிகை, சீசனுக்கேற்ற பழம், காய், இத்தியாதிகள், அவ்வப்போது ரொக்கம்கூட என்று குறைவில்லாமல் இருந்தது.

இப்போதும் பாலாவுக்கு 'சீர்' என்ற பெயரில் வரிசையாய் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன என்றாலும், பணவிஷயத்தில் கொஞ்சம் தட்டுப்பாடுதான்.

பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்தபின், 'இனிமேயும் நாம பணம் அனுப்பிண்டிருந்தா, அது மாப்பிள்ளைய அவமதிக்கறாப்பல ஆகாதோ?' என்று தனக்குத்தானே யோசனை பண்ணி, வைத்தியநாதன் சரியானதைச் செய்கிறோம் என்கிற நினைப்பில் பணபோடு ஒதுங்கிக் கொண்டு விட்டதில், பண ஓட்டம் அத்தனை தாராளம் இல்லைதான்.

சம்பளம் என்ற பெயரில் ஏதோ வரும்படி இருக்கும் போதே குடித்தனம் நடத்துவது உன்பாடு என்பாடு என்றிருக்கிறது.

இதில், வேலையையும் உதறிவிட்டால் அப்புறம் மதிப்புதான் என்னாவது!

இந்த அவஸ்தையெல்லாம் உண்டான பிறகு, நண்பர்களோடு சீட்டாடப் போனால், தைரியமாய் ருபாய்த்தாளை நீட்டிக் காட்ட முடியாமல் போயிற்று.

லைட் ஷோ சினிமா பார்த்துவிட்டு சிகரெட் உதட்டில் ஊஞ்சலாட அட்டகாசமாய் நண்பர்கள் நடுவில் பந்தாவாய் அரட்டை அடிக்க முடியாமல் போயிற்று.

சரி; காசு பணமும், ஆபீஸும்தான் உயிரெடுக்கின்றன என்றால, மற்றதிலாவது நிம்மதியும் சந்தோஷமும் அமையக்கூடாதோ?

எதிலுமே அதிர்ஷ்டமில்லை. இல்லையானால், நேற்று வரை கல்குண்டு மாதிரி ஆரோக்கியமாய் இருந்து, பிள்ளையை ஓடி ஓடி கவனித்த தையூவை திடுமென மூச்சுக்கு முப்பதாயிரம் வியாதி முனக வைக்குமா?

கிணற்றடி பாசியில் சறுக்கி விழுந்ததில் முதல் கோளாறு ஆரம்பித்தது. அப்புறம், முதுகு பிடிப்பு, கால் வீக்கம், தலை சுற்றல்... என்னமோ போங்கள்... தொட்டுத் தொட்டு நாலு மாசம் போவதற்குள் இன்னதென்று புரியாமல் நூறு உபாதைகள்...

சாரங்கன், தையூ விஷயங்கள்தான் இப்படி என்றால், பாலாவின் தவிப்பு வேறு மாதிரியாக இருந்தது.



கொல்லையோடு வாசல் நீண்டு அகண்டிருந்த வீட்டில், ஆனும் தேனுமாய் வாழ்ந்து பழக்கப் பட்டவளுக்கு, இந்த 'டஞ்சன்' போர்ஷனில் கைகால்களைக் குறுக்கிக்கொண்டு உட்காருவதுகூட சிரமமாக இருந்தது.

பிறந்தது முதல், பத்து வயது வரை ஒற்றைப் பெண்ணாகவே வளர்ந்து, அடுத்தவள் காயத்ரி பிறந்த பிறகும்கூட அன்பும் ஆள் வகையறாவுக்கும் குறையாமல் பிறந்தகத்தில் இருந்துவிட்டதில், குனிந்து நிமிர்ந்து சதா வேலை பண்ணுவதற்குள் பாலா திணறித்தான் போனாள்.

இப்படி ராணியிலும் மகாராணியாய் இருந்தவளுக்கும் தையூவுக்கும் எதிலுமே ஒத்துக்கொள்ளாமல் போய், இவர்களது அபிப்ராய பேதங்களும் தகராறுகளும் சாரங்கனின் தலையிலேயே வந்து விழுந்தன.

பகலில், கொடிக்கொரு தரம் மாட்டுப்பெண்ணைப் பார்த்து முகத்தைச் சுளித்தும், கையைச் சொடுக்கியும், கன்னத்தில் இடித்தும், ஓரிரு சந்தர்ப்பங்களில் தலையில குட்டியும், கை நீட்டி அடித்தும் தையூ வரிசையாய் கத்துவாள்.

—கைக்காரியமே போறாம பொண்ணை குதிர் மாதிரின்னா வளர்த்திருக்கா! ஒரு சப்பாத்தி பண்ண உடம்பு வணங்கறதா? வறட்டித் தட்டறாப்பல...ச்சே...

—எச்சல், தீட்டு தெரியாம என்ன பொம்மனாட்டி? புருஷா வர்ற எடத்துல துளி ஒதுங்கி நிக்கப்படாதோ?

—வெக்கமில்லாம பக்கத்து போர்ஷன்காரனோட என்னடி பேச்சு வேண்டிக்கிடக்கு? இஞ்சிக்குடில ஆேளாட பேசறாப்பல நினைச்சிணூட்டியா?

—நா வாசலுக்குப் போனா நீயும் கூடவே 'அத்தை, அத்தை'னு வந்தூடறியே! மாட்டுப்பொண்ணா லட்சணமா துளி பயம் இருக்காடி உனக்கு?

—சொந்த அத்தைடீ நா! என்னமோ நீ புதுசா இப்பத்தான் சீமைலேர்ந்து வந்தாப்பல வரிஞ்சு வரிஞ்சு ஊருக்கு லெட்டர் எழுதறியே! கிழிச்சுப்போடு அத... நா எழுதிக்கறேன்!

இத்தனை பேச்சுக்கும் பதிலாய் என்னவோ ஆறுதல் கிடைத்து விடுகிற மாதிரி இரவில் கணவனிடம் ஏதாவது பேசபோய், அவனது மூர்க்கத்தனத்தையும் பாலா வாங்கிக்கொண்ட நாட்கள்தான் அதிகம்.

—அத்தை அதச்சொன்னா, இதச்சொன்னானு ஓயாம என்னடீ பொலம்பல்?

—அம்மா என்னமோ கேட்டதுக்கு நீ பதிலே சொல்லலயாமே? அத்தனைக்கு தைரியம் வந்துடுத்தா? அடி செருப்பால...

—நீ வந்ததுலேர்ந்து ஆத்துல தரித்திரம்தான், மூதேவி...

—என்னமோ அம்மா ரொம்ப சொன்னாளேனு இப்பிடி ஒரு கல்யாணத்துல மாட்டிக்க வேண்டியதாப் போச்சு! இல்லாட்டா, மாப்பிள்ளை மாப்பிள்ளைனு தலைல தூக்கி வெச்சுண்டு ஆட எத்தன பேரு தயாரா இருந்தா தெரியுமாடீ?

—கல்யாணத்துக்கு முன்னால தங்கை தங்கைனு குழைஞ்சிண்டு வருவாரே உங்கப்பா, இப்போ என்ன சம்பந்தி திமிர் புடிச்சுடுத்தா?

குத்தலோடும் அடிதடியோடும் மட்டும் நிற்காமல், எந்த சின்ன பண்டிகை வந்தாலும், அது வெறும் ஆடி



தை வெள்ளியாக இருந்தாலும்கூட, விடாமல் வைத்திய நாதனுக்கு கடிதம் போட்டு, 'பண்டிகைக்கு நீ இங்கு வந்து பாலாவை அழைத்துப் போய் கொண்டு விடவும்' என்று மொட்டையாய் தையூ கட்டளை இடுவதும்,

தங்கையின் கட்டளையை சிரமேற்கொண்டு ஒவ்வொரு தரமும் திருச்சிக்கு வந்து பாலாவையும், சாரங்கன் நல்ல மூடில் இருந்து சம்மதித்தால் அவனை யும், இஞ்சிக்குடிக்கு அழைத்துப்போய், புடவை வேட்டி இத்தியாதிகளோடு மரியாதை செய்து அனுப்பி வைப்பதும் வைத்தியநாதனுக்கு வாடிக்கையாயிற்று.

இந்தச சம்பிரதாய நாட்களைத் தவிர, எப்போ தெல்லாம் தேவை என்று தோன்றுகிறதோ அப்போ தெல்லாம், 'கோபால்தாஸ் கடைல புது மோஸ்தர் அட்டிகை வந்திருக்கு, பாலா வாங்கிக்கப் பிரியப்படறா' என்ற ஒற்றை வரிக் கடிதங்களும்,

'உங்களையெல்லாம் பாக்காம எனக்கு அங்க இருப்பே கொள்ளலைப்பா... அதான் ஓடி வந்துட்டேன்' என்று கண்ணில் குளம் கட்டிய நீருடன் நேரிலேயே பாலா துசுக்கென்று வந்து நிற்பதும்கூட சகஜமாகவே போயின.

படிப்பு, குணம், பணம், அந்தஸ்து அத்தனையிலும் முதல் தரமாக இருந்த பல நல்ல வரன்களைப் பற்றி யெல்லாம் காதில்கூட முழுசாக வாங்கிக் கொள்ளாமல், கொடுத்த வாக்கு முக்கியம் என்றும், தங்கையின் வீட்டுக்குத்தானே அனுப்புகிறோம் என்ற சமாதானத்தி லும் தான் செய்து வைத்த பாலாவின் திருமணம், சந்தோஷத்தில் முடியவில்லையே என்பது வைத்திய நாதனுக்குள் ஆழமான வருத்தத்தையே உண்டாக்கின.

சரி போ, அவள் தலையெழுத்துப்படி நடக்கட்டும் என்று தீர்மானித்து, சமாளித்துக் கொண்டவரை

அப்படியே இருக்க விடாமல் அந்தப் போதாத ஒரு நாளில் பாம்பு ரூபத்தில் வந்து எமன் வேறு சந்திகக வேண்டுமா ?

வைத்தியநாதன் என்ன வயல்காட்டுக்குப் புதுசா ? வரப்பில் நடக்கத் தெரியாதவரா ? எங்கு என்ன இருக்கும் என்கிற விவரம் புரியாதவரா ?

ப்ச்...

எல்லாம் போதாத காலம்தான், வேறென்ன ?

இல்லாவிட்டால் ஐந்தடி சர்ப்பம் அந்த பகல் வேளையில் கண்ணில் படாமல் போய், பம்பு கொட்டகையிலிருந்து வரப்புப் பிரியும் இடத்தில் அவசரமாய் காலை வைப்பாரா ?

ஹூம்... நிச்சயம் போதாத காலம்தான்... வேறென்ன ?

இல்லையானால், யாரையும் மனசு நோகப் பேசாமல், தானும் எதற்காகவும் அதீதமாக அலட்டிக் கொள்ளாமல், வாழ்க்கையின் சராசரி நிகழ்வுகளை அதனதன் போக்கிலேயே எதிர்கொண்டு வாழ்ந்தவர், நாற்பத்தாறு வயசிலேயே அகாலமாய் பிராணனை விடுவது எப்படி சாத்தியம் ?

குடும்பத்திற்கே தூணாக நின்றவர், கிராமத்துக்கே ஆலமரமாய் நின்றவர் மறைந்து போனதால் ரொம்பவும் தாக்கப்பட்டது பர்வதம்தான.

இதுவரை கணவரின் பரிபூரணமான ஆளுமையின் கீழ் எதைப்பற்றியும் கவலைப்படாமல் விஸ்ராந்தியாய் இருந்த காலம் நினைத்த நினைப்பின்றி மறைந்து விட்டதில், இதுநாள்வரை வெளியில் வாசலில் வந்து பழக்கமில்லாதவள் இப்போது மட்டும் எப்படி அத்தனை



நிலபுலன், பண விவகாரங்களையும் சமாளிககப் போகிறோம் என்று பரிதவித்தாள்.

இனி, ஏழு வயசு சின்னப்பெண் காயத்ரியை, ஒண்டி ஆளாய் வளர்த்து, எப்படிக் கரையேற்றப் போகிறோம் என்று மலைத்தாள்.

ஊர் முழுவதையும் 'எலே...' என்ற ஒற்றைச் சொல்லில் தன் கைக்குள் அடக்கமாக வைத்திருந்தவர் போனபிறகு, வேறு வார்த்தைக்கு ஏதேனும் மதிப்பு இருக்குமா என்று அஞ்சினாள்.

இத்தனை பெரிய வீட்டில், சின்னப் பெண்ணையும் வேறு வைத்துக் கொண்டு எப்படி தனியாக இருப்பது என்று பயந்தாள்.

நாலாவிதத்திலும் அச்சம் தாக்க, வைத்தியநாதன் மறைந்த நாலாம் நாள் பலவீனமான ஒரு நிமிஷத்தில், தையூவின் கைகளைப் பிடித்துக்கொண்டு, 'என்னை இங்க தனியா விட்டுட்டுப் போகாதீங்கோ அககா... நீங்க எல்லாரும் இங்கயே வநதுடுங்களேன...' என்று பர்வதம் அழுதபோது, முதலில் சாரங்கன் மறுத்தான்.

'வேற வேலையில்லியா எங்களுக்கு? ஏதோ சாவுக்கு வந்தோம், காரியம் ஆச்சுனு கிளம்பறத விட்டுப்டு இஞ்சயே டேரா அடிக்க முடியுமா என்ன? இனிமே உங்க கஷ்டத்தையெல்லாம் நீங்கதான் பாத்துக்கணும், எங்களத் தொந்தரவு பண்ணினா "எப்பிடி !' என்று சிடுசிடுத்தான்.

சாரங்கனைப் போலவே முதலில் மறுத்த தையூ, வைத்தியநாதனின் பதினாறு நாள் காரியங்களையும் செய்யவென இஞ்சிக்குடியிலேயே தங்கி கவனித்த

போது, பர்வதத்தின் கெஞ்சலில் தங்களுக்கும் ஏராளமான ஆதாயம் இருப்பதைப் புரிந்துகொண்டாள்.

'பெரிய அய்யிரு' காலமானதால், சாரங்கனையே 'குழந்தை' என்று அழைத்து, மதிப்போடு நடத்தி, எதற்கெடுத்தாலும் அவன் வாய் வார்த்தையை எதிர் நோக்கி வேலையாட்கள் காத்திருப்பதைப் பார்த்தாள்.

பண்ண வேண்டிய சமையலிலிருந்து, தானத்துக்கு வாங்க வேண்டிய மோதிரம் வரை 'மாப்பிள்ளையையே கேளு...' என்று வேறு நாதியில்லாமல் பர்வதம் இவர்கள் மேல் சாய்வதை உணர்ந்து கொண்டாள்.

'அப்பா மாதிரியே உங்க குரலும் கணீர்னு இருக்கு அத்திம்பேர்... உங்களப் பாத்தா நம்ம ஆளெல்லாம் என்னமா பயப்படறா தெரியுமோ?' என்ற காயத்ரியின் வெகுளியான பேச்சில் வெளிப்பட்ட சாரங்கனின் அதிகார தோரணையைப் புரிந்து கொண்டாள்.

மொத்தத்தில், திருச்சியில் ஏனோ தானோவென்று ஒரு வேலையில், கோடவுன் மாதிரியான வீட்டில் போதும் போதாமலும் இருக்கும் நிலையைவிட, இஞ்சிக்குடி வாழ்க்கை லட்சம் தரம் மேலானது என்பதைத் துல்லியமாய் உணர்ந்தாள்.

புரிந்த கையோடு தனியாக சாரங்கனை அழைத்து கிசுகிசுப்பாய் விளக்கவும் முற்பட்டாள்.

'சும்மாச் சும்மா வேண்டாம்னு ஏண்டா பொலம்பறே? அங்க என்ன பெரிய ஜமீன் வாழ்க்கை பாழாப்போறது, விட்டுப்டு வர முடியாதுங்கறதுக்கு? 'ச்சீ'ப்பட்டுண்டு, லோல்பட்டுண்டாவது அங்கதான் குப்பை கொட்டணுமா? இந்தாத்துக்கு இருக்கற ஒரே



ஆம்பிளை நீ, எல்லாத்தையும் கையில எடுத்துண்டு மகாராஜா மாதிரி இருக்க வாண்டாமோ?'

'என்னம்மா நீயும் உளர்றே? அப்பா போனப் போவே திருச்சிய விட்டு வரமாட்டேன்னு சொன்னியே? இப்பப்போயி... அதுவும் நா வேலைக்கு வேற போயிண்டிருக்கேன்... எல்லாத்தையும் விட்டுப்டு எப்பிடிம்மா வரது?'

வந்தா என்னடா? பழசப்பத்தி பேசாத, அப்ப காலமே வேற! இப்ப வாய்ச்சிருக்கறத விட்டுப்புடாதே சாரங்கா... நீ சரினு உடனே சொல்லிட்டியானா, நாளைலேர்ந்து நீதாண்டா ராஜா! அவனவனும் கையக் கட்டிண்டு சலாம் போடுவான் தெரியுமாடா?'

'அதெல்லாம் சரிம்மா... இங்க வந்து நா என்ன பண்றது? பி. காம். படிச்சுப்டு அக்கவுண்டண்டா இருக்கறவனுக்கு, வயல்ல என்னம்மா புரியும்?'

'எல்லாம் போகப்போக தானே புரியும்... இதுல புரிய என்ன இருக்கு? கணக்கு வழக்க கவனிச்சுண்டு, ஆட்களை மேய்ச்சுண்டு இரு... வேலை தானா நடக்கும்!'

பிள்ளைக்கு இசைவாய் பேசிப் பேசி அவன் மனசை தையூ கரைத்ததற்குப் பலன் இல்லாமல் இல்லை. ஒரு வழியாய் இறங்கி வந்த சாரங்கன், பர்வதத்தின் கெஞ்சலுக்கு தலை அசைத்தான்.

'என்னமோ ரொம்ப சொல்றேளே, நீங்களும் தனியா எல்லாத்தையும் கவனிச்சுண்டு கஷ்டப்படணுமேனுதான் இனிமே இஞ்சயே இருந்துடலாம்னு முடிவு பண்ணிட்டேன்... ஆச்சு, இன்னும் ஒண்ணு ரெண்டு வருஷம் போனா, கம்பெனில பெரிய

ப்ரமோஷன் குடுத்து, வீடு காருனு குடுக்கறேங்கறா... இப்ப அதெல்லாத்தையும் விட்டுட்டுத்தான் வரணும்... பரவாயில்லே, மாமாவுக்கு புருஷப்பையன்னு யார்தான் இருக்கா?' என்று என்னவோ போனால போகிறது என்று தன் சௌகர்யங்களை விட்டுக் கொடுத்துவிட்டு வருகிற மாதிரி சாரங்கன் சம்மதித்தான்.

திருச்சிக்கு ஒரு கடை போய், குடுத்தனத்தை ஒழித்துக் கொண்டு இஞ்சிக்குடிக்கு வந்த நாளைத்தான் சாரங்கனை சப்பரத்தில் ராஜாவாக ஏற்றி அதிர்ஷ்டம் அமர்த்தின நாள் என்று சொல்ல வேண்டும்.

மாமா நல்ல சொத்துள்ளவர், அவருக்கு ஆண் வாரிசு எதுவும் கிடையாது என்பதால் இரண்டு பெண் களுக்கும்தான் அத்தனையும் போய்ச்சேரும் என்ப தெல்லாம் ஏற்கனவே தெரிந்ததுதான்.

ஆனாலும், எப்போதோ அவர் காலத்துக்குப்பின் பாகம் பிரிக்கப்பட்டு, பாலாவின் பாகமாக தன் கைக்கு சரிபாதி வரும் என்றுதான் சாரங்கன் நினைத்திருந் தானே தவிர, இப்படி அவர் ஆயுள் படக்கென்று முடிந்துவிடும் என்றோ, தன் கையிலேயே அத்தனை அதிகாரமும் வந்து உட்கார்ந்து கொள்ளும் என்றோ அவன் எதிர்பார்க்கவே இல்லை.

தெருவில் போன வழிப்போக்கனைத் தேடிப்போய் யானை மாலை போட்டதும் அல்லாமல், தட்டிக்கேட்க ஒரு பிராணிகூட இல்லாமல் உச்சாணிக்கிளையில் தூக்கியும் வைத்து சுதந்திரமாய் ஆட்சி செய்ய விட்ட மாதிரி ஒரு அதிர்ஷ்டம்.

புத்திசாலியான சாரங்கன் இதை நன்கு பயன் படுத்திக் கொண்டான்.



சாட்டையைக் கையில் எடுத்துக்கொண்டு, சொடக்கி சொடக்கி ஒருவர் விடாமல் அனைவரையும் ஆட்டி வைத்தான். இயல்பாகவே அவனுக்குள் இருந்த புத்திசாலித்தனத்தால், ரொம்ப சீக்கிரமே பண்ணை வேலையைப் புரிந்து கொண்டு ஸ்திரமாகக் காலூன்றிக் கொண்டான்.

வீட்டுப் பெண்கள் வெளியே வருவது முதற் கொண்டு அவன் சொல்படிதான் நடந்தது.

கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் பத்தாம் வகுப்பை முடித்த காயத்ரி, ப்ளஸ் டு படிக்க கும்பகோணம் போக விரும்பியபோது, 'பொட்டச்சிக்கு படிப்பு என்ன வேண்டிக்கிடக்கு?' என்று கர்ஜித்து நிறுத்தினான்.

'உங்கக்கா எஸ்எஸ்எல்சியோடதானே நிறுத்திண்டா? இப்போ? உனக்கு மட்டும் என்ன புதுசா?' என்றான்.

ஆனால் ஊரில், தன்னைவிட அந்தஸ்தில குறைந்த குருக்கள் வீட்டுப் பெண்ணே பஸ் பிடித்து கும்பகோணம் போய் படிக்கத் துவங்க, தன் செல்வாக்கை நிரூபிப்பதற்காகவே காயத்ரிக்கும் கடைசியில் பச்சைக்கொடி காட்டினான்.

தொடர்ந்து கல்லூரியில் படிக்க ஆசைப்பட்ட போது, 'அத்திம்பேர், அத்திம்பேர்... ப்ளீஸ்... எனக்கு நிறைய படிக்கணும்னு ஆசையா இருக்கு... இங்கேர்ந்து கும்மோணத்துக்கு தினம் போயிட்டு வந்தாத்தானே உங்களுக்குப் புடிக்கலே? நா மெட்ராஸ்லியாவது திருச்சிலியாவது தங்கி படிக்கறேனே? ஹாஸ்டல்லயே தங்கிண்டுட்டா, ஒரு பயமும் இல்லே அத்திம்பேர்... ப்ளீஸ்...' என்று காயத்ரி விடாமல் கெஞ்ச,

இஞ்சிக்குடியிலியே முதல் முதலில் பட்டணத்துக்கு அனுப்பி ஹாஸ்டலில் தங்க வைத்து ஒரு பெண்ணைப் படிக்க வைக்கும் பெருமையில் சம்மதித்தான்.

பி. ஏ. படித்து, எம். ஏ. வில் முதலாண்டில் இருக்கும் காயத்ரியைப் பற்றி 'எங்காத்துப்பொண்ணு என்னென்ன படிப்பெல்லாம் படிச்சிண்டிருக்கா தெரியுமா?' என்று உள்ளூர பெருமையாக இருந்தாலும், வெளியில் அவளும் மற்றவர்களும் காதில வாங்கிக் கொள்ளும்படியாக, 'படிச்சுக் கிழிச்சு சொத்து கரைஞ்சதுதான் மிச்சம்! பொம்மனாட்டிக்கு அடக்கம் வாண்டாமோ?' என்று விடாமல் சிடுசிடுப்பதை மட்டும் விடவேயில்லை.

இந்த சிடுசிடுப்பு, தனக்கே அடுத்தடுத்து மூன்றும் பெண்களாய்ப் பிறந்தபோதிலிருந்தே ஆரம்பித்து, பிள்ளைக்குழந்தை இல்லையே என்கிற ஏக்கத்தை உருவாக்கி, மனசுக்குள் ஊறப்போட்டு, இப்போது நாகராஜன் கிளப்பிவிட்டுப் போனதில், கிளறின குப்பையிலிருந்து வரும் வாடையாய் புகைத்துக்கொண்டு எழுந்து, ஆண்வாரிசுக்கு வழிதான் என்ன என்ற தவிப்பை சாரங்கனுக்குள் தகதகக்க பற்றியெரியச் செய்யும் நெருப்பாக மாறியதில் அதிசயம்தான் என்ன!

# 3

நூறு தரம் உதைத்தும் கிளம்ப மறுத்த மோட்டார் சைக்கிள் மீது எழுந்த ஆத்திரத்தில், சீட்டில் ஓங்கிக் குத்தினான் சாரங்கன்.

"ச்சே... இந்த கருமாந்தரத்தைக் கட்டிண்டு அழணும்னு என் தலையெழுத்து... அவனவன் என்னமா 'சர்சர்'னு கார்ல பறக்கறான்! நா இன்னும் இத உதைச்சு உதைச்சு கட்டைவண்டியாட்டம் தள்ளிண்டு போயிண்டிருக்கேன்... பொழுது விடிஞ்சா மொத காரியமா இந்த எழவெடுத்ததை ஒழிச்சுப்பிட்டுத்தான மறுவேலை... சனியன்..."

வாசற்பந்தல் நிழலிலேயே ஒரு ஓரமாய் வண்டியை நிறுத்திப் பூட்டினவன், உள்பக்கம் திரும்பி "ந்தாடி..." என்று குரல கொடுக்க, பின்கட்டிலிருந்து ஈரக்கையைத் தலைப்பில் துடைத்தபடி அரக்கப் பரக்க பாலா வந்து நின்றாள்.

"என்னன்னா? கூப்டேளா?"

"ஆமா, வெத்தலை பாக்கு வெச்சு விசேஷத்துக்குக் கூப்டேன்! அரை மணியா நா வண்டியோட மன்னாடிண்டு நிக்கறது காதுல விழாம கூப்டேளா என்ன, கூப்டேளா? இந்த ராயசமெல்லாம் இஞ்ச

வச்சிக்காத, ஆமா சொல்லிட்டேன்... இந்தா, வண்டி சாவிய எடுத்து உள்ள வை... நா பஸ்லயே போயிக கறேன்... ஆளுங்க வந்து சாமான் சஜ்ஜா எடுத்துண்டு போனா, திரும்பக் கொண்டு வந்து ஒழுங்கா வெக்கறானானு கவனிச்சுக்கோ... வாசப்பக்கம் ஒரு கண்ணு இருக்கட்டும்... அம்மாவும் பொண்ணுமா ரெண்டாங்கட்டுலயே சமாதி ஆயிடாதீங்கோ... என்ன, காதுல விழுந்துதா? 'சரி, செய்றேன்'னு ஒரு வார்த்தை வாயத் தொறந்து சொலலேன், முத்து உதிர்ந்து போயிடறதானு பாப்போம்..."

எப்போதும்போல மௌனமாகக் கேட்டுக்கொண்டு நின்ற பாலா, அவசரமாய் தலையாட்டினாள.

"பாத்துககறேன்னா... நா எல்லாத்தையும் கவனிசசுககறேன..."

"ஆ... மா... கிழிச்சே! என்னமோ பெரீசா கவனிச்சுக்கறாளாம்! அடிச்சுக்க ரெண்டு கை போறாது எனக்கு! வீட்டுக்குள்ள யானை புகுந்தாக்கூட தெரியாது! அசமஞ்சம்!"

கையிலிருந்த சாவியை திண்ணையில் விட்டெறிந்து விட்டு சாரங்கன் கூலிங்கிளாஸை எடுத்து மாட்டிக் கொண்டான். வெற்றிலைப் பெட்டியைக் கையில் எடுத்து, பூப்போட்ட டர்க்கி டவலை உதறித் தோளில் போட்டவாறு தெருவில் இறங்கி நடந்தான்.

'எங்கே போகிறீர்கள்? என்று வாய்வரை வந்து விட்ட கேள்வியை உடனே அழித்துவிட்டு, வாசலுக்கு வந்து சாவியை எடுத்துக்கொண்டு, சாரங்கன் அக்ரஹார முனையில் திரும்புவதையே பார்த்துக் கொண்டு நின்றாள் பாலா.



எப்போது வெளியே கிளம்பினாலும் இப்படித்தான் அவன் முகத்தையே பார்த்துக் கொணடு நிற்க வேண்டும்.

விருப்பமிருந்தால், போகுமிடத்தையும், போக வேண்டிய அவசியத்தையும் பற்றி சொல்வான்; இல்லையானால், டெரிலின் சட்டை அணிந்து புது டவலை எடுத்துக் கொண்டு, கண்ணாடியை மாட்டியவாறு சரசரவென்று இறங்கிப் போய்க்கொண்டே இருப்பான்.

பல சமயங்களில் இந்த முஸ்தீபுகள்கூட தெரிய வராமல், வாசலில் மோட்டார் சைக்கிள் கிளம்பும் சப்தம் கேட்டு, கூடத்தையும் தாழ்வாரத்தையும் ரேழியையும் தாண்டி வாசலுக்கு வந்து பார்ப்பதற்குள் வண்டி போயே விட்டிருக்கும்.

இன்றும்கூட, மோட்டார் சைக்கிளை அவன் உதைக்கும் சப்தம் காதில் விழாமல், உளுந்தைக் களைந்து கொண்டிருந்தவள், அவனின் 'ந்தாடி...' காதில் விழ, செய்து கொண்டிருந்த காரியத்தை அப்படியே போட்டுவிட்டு ஓடிவந்திருக்கிறாள்.

வண்டியும் கிளம்பாமல், பஸ்ஸிலாவது போக வேண்டிய அவசியமான ஜோலி என்னவாக இருக்கும் என்று அங்கேயே நின்று புருவங்கள் லேசாக உயர யோசித்தவள், எதையும் ஊகிக்க முடியாமல் போக, வாசற் கதவைச் சாத்தி, சங்கிலிக் கொக்கியை கதவு நிலையில் மாட்டிப் பூட்டிக்கொண்டு உள்ளே போனாள்.

அக்ரஹாரத்தைத் தாண்டி, தார் போட்ட ரஸ்தா ஓரமாக சாரங்கன் வந்து நின்றதும், எதிர்சாரியிலிருந்த டீக்கடை மாணிக்கம் ஓட்டமாக ஓடி வந்தான்.

"கொழந்தே... டவுனுக்குப் போறீங்களா?"

களமுடையாய் ஓடிவந்து இந்தக் கேள்வி கேட்க வேண்டிய அவசியமென்ன என்ற அலட்சியத்துடன், "ம்..." என்று எங்கோ பார்த்துக்கொண்டு சாரங்கன் பதில் சொல்ல, மாணிக்கம் இரண்டு தரம் சூள் கொட்டி விட்டு "அடடா..." என்றான்.

"டவுன் பஸ் இப்பத்தான போச்சுதுங்க... கொழந்தே போவப்போ நீங்கனு முன்கூட்டியே சொல்லி யிருந்தா, நிப்பாட்டி வெச்சிருக்கலாமில்லே? அடுத்த வண்டி எப்ப வருமோ, எளவோ! வேணும்னா இப்படி நின்னுகிட்டு அவஸ்தைப்படாம பஸ் வர்ற வரைக்கும் நம்ம கடை பெஞ்சுல குந்திக்குங்க... வாங்க..."

பஸ் போய்விட்டது என்பதைவிட, டீக்கடைக் காரன் தன்னை அழைத்தது சாரங்கனின் எரிச்சலை அதிகமாக்கியது.

"அதாண்டா சரி... உன் கடைல வந்து உட்காரச் சொல்லுவ, அப்பறம் டீ குடிக்கச் சொல்லுவ, அதுக்கப் புறம் வந்தவனுக்கு டீ ஆத்தி சப்ளை பண்ணச்..."

அவன் முடிப்பதற்குள், மாணிக்கம் அவசரமாக வாயில் உள்ளங்கையால் 'வவவ' என்று தட்டிக்கொண்டு குறுக்கிட்டான்.

"என்ன கொழந்தே, பெரிய்ய பெரிய வார்த்தை யெல்லாம் சொல்றீங்க? மன்னிச்சுக்கங்க... நா அப்பிடி சொல்லலீங்க... வண்டி வர்ற வரைக்கும் வெயில்ல நிக்கவேணாமே, நம்ம கடை வாசல்ல கொட்டாயி நெழலு இருக்குதுனு சொன்னேன்... குறுக்கால தஞ்சாவூரு போற வண்டி ஏதாச்சும் வந்தா, நாங் கையக் காட்டி நிப்பாட்டறேன்... உங்களை ஏத்திக்கிட மாட்டேன்னா சொல்லிருவான்?"



"வர்றேன், போய்யா... [illegible] புடுங்காதே... போயி ப[illegible] வருதானு பாரு, போ..."

என்னமோ மாணிக்கத்தின் அபிரா[illegible]த் தீர்த்து வைப்பதற்கு வருகிற மா[illegible]தவனை, அவன் போன இரண்டே நிமிஷத்தில் வெயிலின் எரிச்சல் தாங்காமல் ரஸ்தாவைக் கடந்து டீக்கடை கொட்டகை யில் போடப்பட்டிருந்த பெஞ்சில் நுனியில் அமர்ந்து கொண்டான்.

42886

காலையிலிருந்து ஒன்றுமே உருப்படியாக நடக்கா மல் போய் விட்டதில் எரிச்சலும் ஆத்திரமுமாகச் சேர்ந்து சொல்லத் தெரியாத கோபத்தைக் கிளறி விட்டிருந்தன.

894.8113 SIV

இது மாதிரி சமயங்களில், தடாரென்று நினைத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் கும்பகோணம் போய், அங்கு மருந்துக்கடை வைத்திருக்கும் ராஜசேகரோடு சேர்ந்து 'கற்பகா'வில் வயிற்றை நிரப்பிக்கொண்டு, ஏதாவது ஒரு சினிமாவுக்குப் படையெடுத்து, அது முடிந்ததும் மருந்துக்கடை உள் அறையிலேயே இரவு வரை 'தீர்த்தத்தோடு' சீட்டாடிவிட்டு, கிட்டத்தட்ட பாதி ராத்திரியில் கிராமத்துக்குத் திரும்புவதுதான் சாரங்கனின் வழக்கம்.

ராஜசேகர் அவனோடு திருச்சி கல்லூரியில் ஒன்றாகப் படித்தவன். இவன் மாதிரி படிப்பில் அத்தனை கெட்டிக்காரனாக இல்லாவிட்டாலும் மற்ற தில் ஆள் சோடை போனதில்லை. நல்ல பணம். படிக்கிற காலத்திலேயே 'தண்ணி' போட்ட பெருமை யுள்ள சிலரில் ஒருவன். பெரிய இடத்திலிருந்து மனைவியும் வாய்த்துவிட, இப்போது சொந்த மருந்துக் கடை என்ன, 'பலான' சமாசாரங்கள் என்ன என்று

அமர்க்களமாய் வாழ்ந்து கொண்டிருப்பவன். மனசு ஒரு நிலையில் இல்லாத சமயங்களில ராஜசேகரோடு அரை நாள் பொழுதைக கழிததுவிட்டு வருவது சாரங்கனுக்கு பாட்டரியை 'சார்ஜ்' செய்து கொளளுகிற மாதிரி இருக்கும். செய்யக்கூடாத பலவற்றையும் செய்து விட்டு, 'அதனால என்னடா?' என்று தடாலடி அடிக்கும் அவனது பேச்சும், போக்கும் உள்ளுக்குள் நமநமக்கும் எரிச்சலுக்கு இதமாக இருக்கும்.

ஆனால் அதெல்லாம், வேலை அதிகமாக இல்லாத நாளில்தான். இன்று மாதிரி, இருக்கிற வேலையெல்லாம் அந்தரத்தில் விட்டுவிட்டுக் கிளம்புகிற வழககமில்லை.

நிழலில் உட்கார்ந்தும்கூட வெக்கை தணியாமல் வியர்வை பெருக, தோளிலிருந்த டவலை எடுத்து முகம், கழுத்து, கையை அழுந்தத் துடைத்துக்கொண்ட போது, அதிக சப்தமில்லாமல் ஒரு ஃபியட் கார் இவனைக் கடந்து போயிற்று.

நிறம், எண் இரண்டையும் பார்த்ததுமே, அது பக்கத்து கிராமத்தைச் சேர்ந்த வெங்கிட்டுவின் கார் என்பது புரிந்து போயிற்று.

நம்மிடம் டிராக்டர் வாடகைக்கு வாங்கி ஓட்டுகிறவன்கூட, சொந்தமாகக் கார் வைத்திருக்கிறான்!

நாம் மட்டும், இன்னும் அந்த ஓட்டை மோட்டார் சைக்கிளை விட்டபாடில்லை!

இருப்புக் கொள்ளாமல் எழுந்தவன், இரண்டடி நடந்துவிட்டு மறுபடி வெயிலின் கடுமை தாங்காமல் கொட்டகைக்குள் வந்து நின்று கைகளைக் கட்டிக் கொண்டான்.



திருச்சியிலிருந்து இஞ்சிக்குடிக்கு வந்துவிட்ட புதுசில், நல்ல வசதியான வாழ்க்கை என்பதில் மட்டும் தான் நாட்டமிருந்ததே தவிர, என்னென்ன வசதிகள் என்ற பட்டியல் போடும் அளவுக்கு சாரங்கனுக்கு சாமர்த்தியம் இருக்கவில்லை. கையில் அளவுக்கு அதிகமான பண ஓட்டம் இருந்தபோதும், நல்ல துணிமணிகள், நகை, தாராளமாய் புழங்க பணம், பளபளவென்ற புது டிராக்டர் போன்றவைகளில்தான் புத்தி போயிறதே தவிர, கார், சோபா, அது இது என்று வேண்டாதவற்றின்மேல் ஆசை எழவில்லை.

பின்னர், எதற்கெடுத்தாலும் பஸ் அல்லது மாட்டு வண்டியை நம்பி, பாதி ஆயுளை காத்திருப்பதிலும் போக்குவரத்திலுமே செலவிடுவதை உணர்ந்த நாளில், அப்போதைய ஆடம்பர நாகரீகத்தின்படி மார்க்கெட்டில் புதுசாக வந்திருந்த மோட்டார் சைககிளுக்குப் பதிவு செய்து, பல மாசங்கள் காத்திருந்த பிறகு வண்டி கைக்கு வந்தபோது சாரங்கனின் பெருமை கூடித்தான் போயிற்று.

அந்த வண்டியும் இத்தனை நாள் துளி மக்கர் செய்யாமல் உழைத்துவிட்டு, இப்போது வயசான களைப்பில் அவ்வப்போது ஆய்ந்து ஓய்ந்து உட்கார்ந்து விடத் துவங்க, அடுத்தது என்ன என்ற கேள்வி தோன்ற ஆரம்பித்திருக்கிறது.

மறுபடியும் ஸ்கூட்டரோ, மோட்டார் சைக்கிளோ வாங்குவது பிரமாதமான விஷயமில்லைதான்.

ஆனால், நேற்று முளைத்த வெத்து வேட்டு பயல்களெல்லாம் பந்தாவாகக் காரில் அங்குமிங்கும் போய்வர, தான் மட்டும் இன்னமும் ஏன் இப்படி அல்லாட வேண்டும்?

போன மாசம் கும்பகோணம் போயிருந்தபோது கூட ராஜசேகர் கேட்டானே, 'ஏண்டா இப்பிடி வெயில்ல மண்டை காய்ஞ்சுகிட்டு வர்றே? ஜம்முனு ஒரு கார் வாங்கிட்டா, அலுங்காம வரலாமில்லே?' என்று!

வாங்கலாம்தான்.

வெறும் கார் என்ன, குடவாசல் சாயபு வைத்திருப்பதுபோல் பளபளவென்ற மாருதியே வாங்கலாம், அதுவும் ஏ. ஸி. பொருத்தப்பட்டு!

எப்போது வேண்டுமானாலும் பணத்தை மொத்தமாக, அவனவன் செய்கிற மாதிரி தவணை முறையில் வாங்காமல், வீசியெறிந்துவிட்டு புது வண்டியை வாங்கிவிட முடியும்தான்...

ஆனால்...

ஒவ்வொரு முறை இந்த 'கார்' பேச்சை சாரங்கன் எடுக்கும்போதும், தவறாமல் பாலாவின் வாயிலிருந்து ஒரு பயமுறுத்தல், மிரட்டல் பிறக்கிறதே, என்ன செய்ய?

'...வீடு முழுக்க பொண் குழந்தைகளா இருக்கறப்போ... இதெல்லாம் எதுக்குன்னா? அந்தப் பணத்துல வைர வளையோ, அட்டிகையோ செஞ்சு போட்டுடலாமே! லட்ச ரூபானு நினைச்சுண்டா அடி வயித்த பகிர்ங்கறதுன்னா... காயத்ரிக்கு ஒரு ஏற்பாட்டப் பண்ணிட்டு, நம்ம பொண்கள்ட்ட வரச்சே வெலைவாசில்லாம் ரெட்டையா ஏறிப்போயிருக்குமே! என்னன்னா பண்ணப் போறோம்?'

கார் ஏதும் வாங்காதே; மோட்டார் சைக்கிள் போதுமே; மாட்டு வண்டியே கூட போதும்; காரில் கொண்டு போய் லட்ச ரூபாயைப் போடுவார்களா?



இப்படி அறிவுரை சொல்கிற மாதிரி எதையாவது பாலா கேட்டிருந்தால், 'போடி வாய மூடிண்டு! உனக்கென்ன தெரியும்! பொம்மனாட்டிக் கழுத...' என்று ஒரே நொடியில் அவளை ஒதுக்கிவிட்டு காரியத்தைச் சாதித்துக கொண்டிருக்க முடியும்.

ஆனால், அவள் எதில் சாமர்த்தியசாலியோ இல்லையோ, இந்த விஷயத்தில் மட்டும் கெட்டிக்காரிதான்.

இல்லையானால், எப்படிச் சொன்னால் சாரங்கனுக்கு வலிக்குமோ, எந்த வார்த்தை அவன் காதுக்குள் நுழையுமோ அப்படி விடாமல் பேசி அவன் கையைக் கட்டிப் போட்டிருப்பாளா?

நீயுமாச்சு உன் பெண்களுமாச்சு என்று தூக்கியெறிந்துவிட்டுப் போவதற்கு எத்தனை நேரமாகும்?

பாலா ஒருத்தியாக இருந்தால் இதுவும் சுலபம்தான்; ஆனால், ஊர்கூடி என்னமோ கோடித்துக்கொண்டு வக்காலத்து வாங்குகிற மாதிரி அல்லவா ஆளுக்காள் 'பொண்ணாப் பெத்திருக்கியே!' என்று கெக்கலிக்கிறார்கள்!

அன்று பூணூல் கல்யாணத்தின்போது நாகராஜன் மற்றவர்களையும் அல்லவா கிளப்பிவிட்டு விட்டான்!

நாகராஜனின் நினைப்பு வந்ததும் சாரங்கனின் கண்கள் ஒரே நொடியில் கோபத்தால் சிவந்து போயின.

என்னமாய் பேசிவிட்டான் நாகராஜன்! என்ன கிண்டல், என்ன குசும்புத்தனம்!

அவன் கேட்ட பாலுக்கும் மற்றதற்கும் தான் ஏற்பாடு செய்து தரவில்லை என்று பழிக்குப்பழி தீர்த்துக் கொண்டானோ!

'எங்காத்து விசேஷம் ஒரு வழியா முடிஞ்சுடுத்து! இனிமே அடுத்தது சாரங்கனாத்து கல்யாணங்கள் தான்! அவனோட உபயமே வரிசையா நம்மூர்ல கல்யாணச் சாப்பாட்டுக்குப் பஞ்சமில்லாம செஞ்சுடும், இல்லியா சாரங்கா?' என்றான்.

'இப்பவே புடிச்சு நகை, நட்டு பாத்திரத்துக்கெல்லாம் ஏற்பாடு பண்ண ஆரம்பிச்சுடு! பொண்ணாத்துக்காரனா இருந்துண்டு நாளைக்கு இது தோது படாது, அது முடியாதுனு கைய விரிச்சியானா உன் அந்தஸ்துக்கு நன்னாருக்குமா?' என்றான்.

'பூணூல கல்யாணத்துக்குன்னு எங்க அப்பா பக்கத்துலேந்து பெரிய மனுஷா நிறைய பேர் வந்திருக்கா... எல்லாரையும் விடாம சினேகம் பண்ணிக்கோ சாரங்கா... நாளைக்கு காயத்ரி, அபிராமினு வரிசையா ஜாதகத்தை எடுத்தா, உபயோகப்படுமே!' என்றான்.

இன்னும் என்னென்னவோ வாழைப்பழத்து ஊசியாய் சமயம் கிடைத்தபோதெல்லாம் அவன் குத்திக்குத்திப்பேச, சுற்றியிருந்தவர்களும் என்னவோ பெரிய ஹாஸ்யத்தைக் கேட்டுவிட்ட தினுசில் கேலியாய்ச் சிரிக்க, சாரங்கன் குன்றித்தான் போனான்.

கிராமத்துக்கு வந்த நாள் முதலாய் ஒரு பயல் இப்படி எதிரே நின்று தைரியமாய் பேசியதில்லை... சிரித்ததில்லை.

எங்கோ பம்பாயில் இருந்துகொண்டு, 'இந்த கிராமத்துக்கு நீ பெரிய ராஜாவாக இருந்தால் எனக்கென்ன?' என்ற மதர்ப்பில் இந்த நாகராஜன் பேசினால், வாய்த்தது சந்தர்ப்பம் என்று மற்றவர்களும்



கூட சேர்ந்து கொண்டு கொட்டாங்கு அடித்துவிட்டார்களே!

பூணூல் விசேஷத்துக்குப் போய்விட்டு வந்த இரண்டு நாளாய் மனசு ஒரு நிலையில் இல்லாமல் தவிப்பது நிஜம்தான்.

விடை தெரியாத புதிர் மாதிரி இரண்டு நாளும் மண்டைக்குள் உட்கார்ந்து ஏதோ குடைந்தது.

பிராண்டலை இனியும் பொறுக்க முடியாது என்று புரிந்ததும், போட்டது போட்டபடி இதோ கும்பகோணத்துக்குப் புறப்பட்டாயிற்று.

ஆனால், இந்தச் சின்ன விஷயத்தில்கூட நினைத்தது நடக்காமல், கடைசி நிமிஷத்தில் வண்டி காலை வாறிவிட, அரை மணியாய் பஸ்ஸுக்காக காத்திருக்க வேண்டியிருக்கிறது.

என்னென்னவோ யோசித்தும எரிச்சல் அடங்காமல் போக, மூன்றாவது தடவையாக வெற்றிலை போடும் உத்தேசததில் பெட்டியில் கை வைத்தபோது, சற்று தூரத்தில் பஸ் வருவது தெரிந்தது.

தடக்கென்று எழுந்து நின்று, விரலைச் சொடுக்கி மாணிக்கத்தைக் கூப்பிட்டான்.

"எலே, ஓடிப்போய் வண்டிய நிறுத்து! ஓடுறாலே..."

பாதையின் குறுக்கே நின்று பஸ்ஸை அவன் நிறுத்தியதும், வெளியே எட்டிப்பார்த்த கண்டக்டர், "யாருப்பா அது? உங்க ஊரு டவுன பஸ்ஸா இது, சகட்டுமேனிக்கு நிறுத்தறீங்களே?" என்று இரைச்சலாக ஆரம்பித்து, சாரங்கனைப் பார்த்ததும முகபாவம் மாற்றினான்.

"அட, நீங்களா சார்! ஏறிக்குங்க... உங்களுக்கு இல்லாத எடமா! நா ஏதோ இந்த ஆளுங்கதான் மூட்டை முடிச்சோட கும்பலா ஏறப்போறாங்கனு நினைச்சிட்டேன்... நீங்க வாங்க..."

சாரங்கன் ஏறி அமர்ந்ததும் பஸ் கிளம்ப, வழி நெடுக கண்டக்டர் வாய் ஓயாமல் பேசிக்கொண்டே வந்தான்.

"...மோட்டார் சைக்கிள வித்திட்டீங்களா சார்? நம்ப வண்டில நீங்க ஏறி ரொம்ப நாளாச்சில்லே... முன்னல்லாம் உங்க மாமா வருவாரு சார் எப்பவும் நம்ம வண்டில... அவர் படில காலு வெச்சார்னா, உள்ளாற உக்காந்திருக்கற ஜனம் பூராவும் எந்திரிச்சி நின்னுக்கும் அப்பிடியே! அவரு முன்னால ஒரு பய உக்கார மாட்டான் சார்! குடும்பத்தோட போனா மட்டுந்தான் வண்டி கட்டுவாரு, தனியா வந்தார்னா பஸ்ஸுதான்! வக்கீலு கோர்ட்டுனு கும்மோணம் போற பயலுவள்ளாம், பஸ்ஸுக்குள்ளாறவே விஷயத்தத் தீத்துக்குவானுங்க! புண்ணியவான் அல்பாயுசுல போயிட்டாரு, இப்ப எல்லா பயலுவளும் வரிஞ்சு கட்டிக்கிட்டு கும்மோணத்துக்கு ஓடறானுவ! மனுஷன் போய் பல வருஷம் ஆகியும் மனசுல பச்சுனு நிக்கறாரு... ஏதோ மாமனுக்கு ஏத்த மருமவனா நீங்க இருக்கக்கண்டு வயலும் வரப்புமா ஊர் நல்லா இருக்கு! இல்லாட்டி..."

தொடர்ந்து அவன் பேசிய பேச்சுக்கெல்லாம், விரும்பியோ விரும்பாமலோ ஒற்றை வார்த்தையில் பதில் பேசிக்கொண்டே வந்து, கும்பகோணத்தில் இறங்கி ராஜசேகரின் மருந்துக்கடையில் நுழையும் போது, அது நாழிகை மறந்திருந்த நினைப்புகள் மறுபடி தலை தூக்கின.



படியேறி கடைக்குள் நுழைந்து ஒரு கணம் தாமதித் தவனை உற்சாகமாய் ராஜசேகரின் குரல் வரவேற்றது.

"சாரங்கனா... உனக்கு நூறு ஆயுசுடா... கொஞ்சம் முன்னாலதான், நீ வந்தா எத்தனை நல்லா யிருக்கும்னு நினைச்சேன்! உள்ளாற வாயேண்டா... ஏன் அங்கியே நின்னுகிட்டிருக்கே? வண்டி சங்கீதம் எதுவும் கேக்கலியே, எனக்குத் தெரியாம கார் வாங்கிட்டியா என்ன?"

வேறு வழியில்லாமல் வலுக்கட்டாயமாக முகத்தில் ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்டு சொச்சப் படியேறினான் சாரங்கன்.

"நீ ரொம்ப பிஸியா இருக்கற மாதிரி தெரிஞ்சது. அதான் அப்பறமா வரலாமோனு தயங்கினேன்... அதுகுள்ள நீயே பாத்துட்டே..."

ராஜசேகர் அட்டகாசமாக சிரித்தான்.

"பிஸியா? நானா? நாம எப்பவுமே பிஸிதான்... அதுக்காக சாப்பிடாம, தூங்காம, இல்லே வேற ஏதாச்சும் செய்யாம இருக்கறமா என்ன? நீ வா, உனக்காக நா இன்னிக்கு முழுசும் ஃப்ரீயா வெச்சிக்க றேன்.. மொதல்ல போய் சாப்பாட்ட முடிச்சுக்குவமா? ஒரு மணி ஆயிடுச்சின்னா எனக்கு வயித்துல மணி அடிக்க ஆரம்பிச்சிடும்..."

கடையின் நடுவில் ஒரு பெரிய குளிர்பெட்டி இருக்க, அதன் பக்கத்தில் இருந்த நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து, கைகளைத் தூக்கி சோம்பல் முறித்த சாரங்கன், "ப்ச்... போடா!" என்றான் அலுப்போடு.

"சும்மா சாப்பாடும் கீப்பாடும்! எனக்கொண்ணும் பிடிக்கல்லேடா... வேற ஏதாவது பேசேன்..."

எவருக்கோ பில் போட்டுக்கொண்டே இவனிடம் பேசிக்கொண்டிருந்த ராஜசேகர் திரும்பினான்.

"என்னடா ஆச்சு உனக்கு? சாப்பாடு கூட போரடிக்கற அளவுக்கு வாழ்க்கை வெறுத்திடிச்சா? ஊரே கை கட்டி நிக்கிது உம்முன்னால, பெரிய மிராசு நீ... என்னா கொறைஞ்சிப் போயிடுச்சுனு இப்பிடி சலிச்சுக்கறே? நீ சத்தமா மூச்சு விட்டாக்கூட உங்கூர் காரங்க அலறியடிச்சுகிட்டு..."

சாரங்கன் கோபமாக எழுந்து நின்றான்.

"இப்ப நிறுத்தப்போறியா இல்லியா ராஜா? மனுஷன் அப்பிடியே வெறுத்துப்போய் வந்திருக் கறப்போ, சமயா சந்தர்ப்பம் தெரியாம வெளை யாடறியே!"

ராஜசேகர் முகத்தில் சிரிப்பு மறைந்தது. அருகே வந்து சாரங்கனின் தோளைத் தட்டி, "ஸாரி சாரங்கா, உன் மூட் தெரியாம பேசிட்டேன்... வா, வெளியே போகலாம்... நிதானமா உக்காந்து பேசுவோம், வா..." என்றான்.

"என்னடா இது, சொன்னதையே சொல்லிண்டிருக் கியே? நாந்தான் சாப்பிட வரலைனு சொன்னேனே நீ, வேணுன்னா போயிட்டு வா... நா இஞ்ச கடைய கவனிச்சுக்கறேன்..."

"அட, கோவிச்சுக்காதேப்பா! நா உன்னை சாப்பிடக் கூப்பிடலை! இப்படி எங்காச்சும் போயிட்டு வரலாமேனு நினைச்சேன்... மனசு சரியில்லேன்ற... அப்பால இங்க உக்காந்துகிட்டு என்ன பண்றது? கடைய ஆளுங்க கவனிச்சுப்பாங்க... நீ எந்திரி சொல்றேன்!"



பேசினவன், சாரங்கன் வாயைத திறந்து ஏதும் பேசும் முன்னா, "கொஞ்சம இருடா..." என்று கையை ஆட்டிவிட்டு உள் அறைககுள் போனான்.

கையில் ப்ரீஃப் கேஸுடன் திரும்பி வந்து "வாடா..." என்றபோது, மறுப்பேதும் சொல்லாமல சாரங்கன் பின்தொடர்ந்தான்.

ஸ்கூட்டரில் ராஜசேகரின் பின் அமர்ந்து, சந்து பொந்துகளில் புகுந்து புகுந்து அவன் ஓட்டியபோது மௌனமாக இருந்தவன், ஸ்கூட்டர் ஒரு புது ஹோட்டல் முன் நின்றதும கோபமாக இறங்கினான்.

"டேய், உனக்கு சொன்னாப் புரியாது?"

"பேசாம வா சாரங்கா, சாப்பிடக் கூட்டிட்டு வரலைனா நம்பமாட்டியா? என் தொணைக்குத்தானே வந்திருக்கே, நா எது செஞ்சா என்ன?"

வண்டியை நிறுத்திப் பூட்டிவிட்டு, ரிசப்ஷனுக்குப் போய் ஏதோ சிரித்துப்பேசி, ஒரு சாவியை வாங்கிக் கொண்டு மாடிப்படியேறி ஒரு அறையைத் திறந்து நுழைந்தவன், மேஜைமேல ப்ரீஃப் கேஸை வைத்துத் திறந்து இரண்டு சப்பை பாட்டில்களை வெளியே எடுத்து வைத்தான்.

பொத்தானை அழுத்தி ஒரு பையனை வரச்செய்து, சோடாவும் வறுத்த முந்திரியும் கேட்டு, சில நிமிஷங் களில் அவையும் வந்ததும் கதவை அழுந்த மூடிவிட்டு படுக்கையில் சாய்ந்து பெருமூச்சு விட்டான்.

இது நாழிகை வாயைத் திறக்காமல் பார்த்துக் கொண்டு நின்றிருந்த சாரங்கனை நோக்கி, "உக்காரேண்டா... காலைல உன்னை நினைச்சேன்னு சொன்னேனே, இதுக்குதான்! நாலு நாளா எதுவும்

செய்யாம ஒரே போர்! உனக்கும் மனசு சரியில்லேன்ற... கமான், பேசிக்கிட்டே சாப்பிடுவோம், என்ன சொல்றே?''

பாட்டிலைப் பார்த்ததும் எப்போதும் உண்டாகிற படபடப்பு இன்றும் உண்டாயிற்று சாரங்கனுக்கு. ஆனாலும், கஷ்டப்பட்டு முகத்தைத் திருப்பி மனசை அடக்கிக் கொண்டான்.

''இன்னிக்கு எனக்கு வேணாண்டா... நா வண்டில கூட வரலை, பொழுதோட பஸ் புடிச்சு ஊருக்குப் போயாகணும்... இதுல உக்காந்துட்டா, அப்பறம் எப்பிடி எழுந்துக்கறது!''

''அடப்போடா, எக்திரிக்காட்டி போவுது! வேணுன்னா டாக்ஸில உன்னைக் கொண்டு விடறேன, இல்லாட்டி ராத்திரிக்கு இங்கயே தங்கிக்க! எப்பிடியும் ஒரு நாள் வாடகை இந்த அறைக்குக் கொடுக்கப் போறேனில்லே! நமக்கு எப்பவும் தண்ணி போட, 'வேணுங்கப்பட்ட' ஆளுங்கள வரச்சொல்லனு இந்த அறைதான் இப்பல்லாம் சௌகர்யம்! நீயும் இப்பிடியெல்லாம் நல்லா அனுபவிடானு நானும் சொல்லிகிட்டே இருக்கேன், காதுலயே வாங்கமாட்டேன்ற! கணக்குப் பாத்துப் பாத்து சொத்து சேத்து என்னதான் பண்ணப் போறியோ! ஜாலியா சிரிச்சுகிட்டு இல்லாம, இங்க வந்தப்புறமும் உம்முனு முகத்தத் தூக்கி வெச்சுகிட்டு... போடா!''

''கொன்னுடுவேன் ராஸ்கல்! என் நிலமை புரியாம பேசினா கெட்ட கோவம் வரும்...''

''அப்ப சொல்லு, உன் நிலமை என்னானு நானும் தெரிஞ்சிக்கறேன்... லட்ச லட்சமா மாமனாரு



வெச்சிட்டுப் போயிருக்காரு, என்னாடா இல்லே உங்கிட்ட?''

''ப்ச்... இருக்கறதெல்லாம் அப்பிடியேதான இருக்கு... ஆனா, எத்தனை நாளுக்கு இருக்கும்னுதான் தெரியலே!''

''என்ன சாரங்கா புதிர் போடறே? நெலத்துல வெளச்சல் அமோகமாக இருக்குனு போன ட்ரிப வந்தப்பகூட சந்தோஷப்பட்டுகிட்டியே... புதுசா ஏதாச்சும் நஷ்டமா? கடன் கிடன் வாங்கிட்டியா?''

''அதில்லே ராஜா... இப்ப ஏதோ ஆம்பிள்ளை இல்லாத வீடுனு, நானே எல்லாத்தையும் ஆண்டுண்டு இருக்கேன்... நாளைக்கே என் மச்சினிக்குக் கல்யாணம் ஆயிடுத்துன்னா, எல்லாம் பாதியாக் கொறைஞ்சிடும்! அப்பறம் இருக்கறதுல, என் மூணு பொண்ணுக்கும் கல்யாணம் கார்த்தி பண்ணி நிமிர்ந்தேன்னா, எனக்குனு என்ன தேறும்னு பயமா இருக்குடா...'

''இதெல்லாம் எப்பவுமே உள்ளதுதானே? இப்ப திடீர்னிட்டு எதுக்கு பயம்? உம் மச்சினிக்கு ஏதாச்சும் நிச்சயமாயிடுச்சா? அது பேரு என்ன? காயத்ரிதானே? மெட்ராஸ்ல படிக்குதில்லே?''

''ம்ம்... நிச்சயம் ஒண்ணும் ஆகல்லே... ஆனா, இன்னிக்கு இல்லாட்டாலும் நாளைக்கு நடக்க வேண்டியதுதானே... நா அதப்பத்தி கவலைப்படலே... எனக்குனு ஒரு புள்ளை இருந்திருந்தா, எதப்பத்தியுமே கவலைப்படமாட்டேண்டா... எனக்கப்புறம் எம்பேரைச் சொல்ல ஒரு புருஷ வாரிசு இருக்காங்கற தைரியத்துல புதுசு புதுசா வியாபாரம்கூட செய்யலாம்தான்... ஹூம்... எவன் எவனோ பரதேசிப் பயலுக்கெல்லாம்

ரெண்டு மூணுன்னு புள்ளையாப் பொறக்கறதுடா... எனக்கு ஒண்ணு வந்து வாய்க்க மாட்டேங்கறதே!''

குமுறலுடன் ஆரம்பித்து, நாகராஜனின் வார்த்தைகள் ஏற்படுத்திய பாதிப்பை முழுவதுமாக வெளிப்படுத்தியபோது, சாரங்கனின் குரல் ஆவேசமாக ஒலித்தது.

"...இந்த தடியன்க வாய அடக்கவாவது ஒரு புள்ளை பொறந்துத் தொலைக்காதோ? எல்லாத்துக்கும் எங்கிட்ட பிச்சை கேட்டுண்டு நிக்கறவன்கூட, இந்த ஒரு விஷயத்துல என்னை மட்டம் தட்டிடறாண்டா... சமயம் கிடைச்சா போதும், நறுக்குன்னு குத்திப்பிடறாங்க! இவனுங்களை என்ன செய்யறது, சொல்லு! வரவர இந்த கேலிப்பேச்சு ஜாஸ்தியாயிட்டதுல, பொழுது விடிஞ்சு பொழுது போனா நிம்மதியே இல்லாமப் போயிடுத்து! ச்சே... என்ன வாழ்க்கைடா இது!''

ஓங்கி மேஜையில் குத்திவிட்டு நாற்காலியில் சாய்ந்துகொண்ட நண்பனை, ராஜசேகர் தீவிரமாகப் பார்த்தான். பின் நிதானமாகப் பேசினான்.

"இதுக்குப்போய் ஏண்டா இவ்வளவு கவலைப் படறே? உனக்கென்ன அறுவது வயசா ஆயிடுச்சு, கொள்ளி வைக்க பிள்ளை இல்லியேனு அழுவுறதுக்கு? இல்லே, உம் பொண்டாட்டிதான் செத்து கித்துப் போயிட்டாங்களா? நல்லாத்தானே இருக்காங்க? அடுத்தது புள்ளையாவே பொறந்துட்டுப்போவுது...''

"நிறுத்துடா! அடுத்ததாம், அடுத்தது! இப்பிடி எதிர்பார்த்தேதான் நாலு பெத்துண்டேன்... நாலும் ஏமாத்திப்பிடுத்து! நல்லவேளை, ஒண்ணு உசிர விட்டுதோ, ஒரு செலவாவது குறைஞ்சிதோ! இன்னும் அடுத்ததுன்னு கணக்குப் பண்ணினா, மேம்மேல நஷ்டந்தான்! எம்பொண்டாட்டிக்கு புருஷப்பிள்ளை பாக்கியம் இல்லேனு திருக்கடையூர் நாடி ஜோஸியர் அடிச்சு சொல்லிட்டார்! அப்பறம புள்ளை வேணும்னு நாக்கை வழிச்சா மட்டும் ஆச்சா? ஒரு வேடிக்கை கேளுடா ராஜா... என் ஜாதகப் பிரகாரம் எனக்கு புத்ரன் கண்டிப்பா பொறப்பானாம்... இது எப்படிடா சாத்தியம்! நீ வேணுன்னா பாரு, நானும் எங்க மாமா மாதிரி எல்லாத்தையும் அம்போனு விட்டுப்டு அநாதையா திடும்னு ஒரு நாள் சாகப்போறேன்! எங்க மாமாவுக்காவது நா இருந்தேன் பொறுப்பா, எனக்கு அதுவும் கிடையாது!''



ஒரு நிமிஷ மௌனத்துக்குப்பின் ராஜசேகர் எழுந்தான்.

இரண்டு கண்ணாடி தம்ளர்களில் விஸ்கியை ஊற்றி, சோடா விட்டுக் கலந்து, ஒன்றை சாரங்கனிடம் நீட்டினான். மற்றொன்றை தன் கையில் எடுத்து இரண்டு மடக்கு அவசரமாகக் குடித்துவிட்டு நிமிர்ந்து மறுபடி தீவிரமாகப் பார்த்து பேச ஆரம்பித்தான்.

"இப்பிடியே பொலம்பிகிட்டு இருக்கறதைவிட, வேற ஏதாச்சும் உருப்படியா செய்யலாமே சாரங்கா?''

சாரங்கன் தன் தம்ளரை ணங் ணங்கென்று தட்டி ஓசை எழுப்பி கேலியாய் சிரித்தான். "உருப்படியான்னா? அதான் இப்ப ஆரம்பிச்சிருக்கோமே? இன்னிக்குப் பொழுதுக்கு எல்லாத்தையும் மறந்துட்டு மறுபடியும் நாளைக்கு யோசிக்கலாம்ங்கறியா?''

"ச்சே... முழுசாக் கேளு சாரங்கா... உம்பொண்டாட்டிக்குதான் புள்ளை பொறக்காதுனு நல்லா தெரிஞ்சிப் போயிடுச்சில்ல? அப்பால யோசிச்சு

தான் என்னா செய்யிறது? வேற ஏதாச்சும் வழி இருக்கானு பாக்கறதுதானே புத்திசாலித்தனம்?''

சாரங்கன் நிமிர்ந்தான்.

“வேறன்னா?”

“உனக்குப் புரியற மாதிரியே சொல்றேன், கேட்டுக்க... எங்க மாமனாரு இருக்காரில்லே, அவருக்கு கல்யாணங்கட்டி மொத பத்து வருஷத்துக்கு புள்ளையே இல்லியாம்... அப்பால, ரெண்டாவது கட்டிக்கிட்டாரு... ரெண்டாவதுன்னா, மொத சம்சாரத்த தள்ளி கிள்ளி வெக்கில... அவுங்ககிட்ட சொல்லிட்டுதான் செஞ்சுகிட்டாராம்! ரெண்டாவதுக்குப் பொறந்ததுதான் என சம்சாரமும், அவ தம்பியும்... இப்பக்கூட ஊருக்குப் போனா, ரெண்டு மாமியாரும் சேர்ந்துகிட்டு என்னை உபசாரம் செய்வாங்க தெரியுமா? அந்த மாதிரி நீயும்...''

“ரெண்... ரெண்டாவது கல்யாணமா பண்ணிக்கச் சொல்றே?”

“ம்... அத ஏன் என்னவோ 'கொலை பண்ணச் சொல்றியா?'னு கேக்கற மாதிரி அரண்டுபோய் கேக்கறே?”

“போடா, வெளையாடாதே ராஜா... உன்னால முடிஞ்சா ஏதாவது நல்ல ஐடியா குடு, இல்லேன்னா விட்டுடு... அதுக்காக என்னவோ நடக்காத கதையெல்லாம் பேசி நேரத்தை வீணக்காதே!''

“ஏண்டா, இது நடக்காத கதையா? இதவிட நல்ல ஐடியா உனக்குக் கிடைச்சிடுமா? உன் எடத்துல நா இருந்திருந்தா இதை எப்பவோ செஞ்சிருப்பேன்! இப்பிடி கன்னத்துல கைய வெச்சிகிட்டு உக்கார்ற வரைக்கும் வந்திருக்கவே மாட்டேன் தெரியுமா?



அந்தந்த விஷயத்த அப்பிடி அப்பிடியே சுலபமா தீர்த்துக்கிட்டு போயிகிட்டே இருக்கணும்! இல்லாட்டி, இப்பிடித்தாண்டா மத்தவன் வாயில விழுந்து எந்திரிக்கறாப்பல ஆயிடும்... இன்னூரு கல்யாணம் கட்டிக்கிட்டா என்னடா? உங்கிட்ட வசதியில்லையா, இல்லே உனக்கு வயசுதான் ஆயிடுச்சா? எதுடா குறைஞ்சிப்போயிடுச்சு? நம்மகூட திருச்சில காலேஜ்ல படிச்சானே சுந்தரம், உனக்கு நினைப்பிருக்கா? அவனுக்கும் நம்மள மாதிரி முப்பத்தெட்டு வயசுதானே? இப்பத்தான் பதினைஞ்சு நாளுக்கு முன்னால சுவாமி மலைல ரெண்டாவது கல்யாணம் கட்டிக்கிட்டான். பஸ் ஸ்டாண்டுல எதேச்சையா பார்த்தப்ப, 'நேத்து தாண்டா கல்யாணம் ஆச்சு, சிம்பிளா கோயில்ல வெச்சு செஞ்சுகிட்டதால யாருக்கும் அழைப்பு அனுப்பலேனு சமாளிச்சான்! 'மொத பொண்டாட்டிக்கு மூளை சரியில்லே, அதாண்டா...'னு வழிசல் வேற! ஒவ்வொருத்தன் என்னென்னமோ அடாவடியெல்லாம் செய்யறான், நீ என்னடான்னா...''

“எனக்கு எதுவும் குறைஞ்சிடுத்துன்னு நா சொல்லலே ராஜா... ஆனா, ஏற்கனவே பொண்டாட்டி, மூணு கொழந்தைகள் எல்லாம் இருக்கே? என்னடா செய்யிறது?''

'மெதுவாய் வழிக்கு வருகிறாயா!' என்கிற பெருமிதத்தில் ராஜசேகர் புன்னகைத்தான்.

“அவுங்களையெல்லாம் தொரத்தி விட்டுட்டா இன்னூருத்திய கட்டிக்கனு சொல்றேன்? எங்க மாமனாரு பத்தி எதுக்குடா சொன்னேன்? அவரு மாதிரி ரெண்டையும் ஒரே வீட்டுல வெச்சிக்க வேண்டியதுதானே? உங்கம்மாவுக்கு புள்ளையா நீ

பொறந்திலலே? அது மாதிரி உனக்குனு ஒரு புள்ள பொறக்காமயா போயிடும்? நல்லா தைரியமா ஆம்புளையா நின்னு எல்லாத்தையும் சாதிச்சுக்கிட்டுப் போவியா, என்னமோ வருத்தப்பட்டுகிட்டு நிக்கிறே! பொண்டாட்டி என்ன சொல்லுவா, என்ன செய்வானு கண்டதையும் யோசிக்காதே... அந்த குடும்பத்து மொத்தத்துக்கும் நீதான் ஒரே ஆம்புளை! உம்பேச்சை எதுத்துக்க யாருக்குடா தைரியம் வரும்? இப்ப என்னைப்பாரு, ஒரு பய என்னைப்பாத்து கைய நீட்டிட முடியுமா? பொண்ணும் புள்ளையுமா கலந்து பெத்துக் குடுத்திட்டா எம்பொண்டாட்டி... அதனால நா வேற கல்யாணம் கட்டற அளவுக்கு போகவேண்டி வரலை... அதுக்காக வேற எதையாச்சும் குறைச்சிக்கிட்டேனா? அவளுக்கும் நல்ல புருஷன், இந்த மாதிரி ஹோட்டல்ல தங்கும்போது வர்றவளுக்கும் நா நல்ல புருஷந்தான்! புரியுது இல்லே? இதெல்லாம் எம்பொண்டாட்டிக்குத் தெரியாதுன்னா நினைக்கிறே? தெரியும்தான்! ஆனா, வாயத் தொறந்து ஒரு வார்த்தை கேக்க விட்டிடுவேனா? 'சர்தான் போடி'னு தொறத்திட்டோம்னா, அவங்க நிலமை என்ன யோசிச்சியா? நானாவது, மாமனாரு மச்சான்னு கொஞ்சம் அவங்க மூஞ்சியெல்லாம் பாக்கணும்... உனக்கென்ன? 'என்னடா?'னு கேக்க ஒரு பிராணிகூட கிடையாது! நீ வெச்சதுதான் சட்டம், நீ செய்யுறதுதான் நியாயம்! அப்பால என்னடா சாரங்கா?"

நீளமாய் பேசி நிறுத்தின ராஜசேகர் நமுட்டாய் சிரித்தான்.

கண்களை சிமிட்டி, "அதுவும் வீட்டுலேயே வெண்ணைய வச்சிகிட்டு நெய்க்கு அலையறயேடா? உன் அசட்டுத்தனத்த என்னனு சொல்றது? ம்?"



என்றும் கிசுகிசுப்பாய் வினவ, மனசுக்குள் மத்தாப்புகள் ஒருசேர பூச்சொரிந்த சிலிர்ப்புடன் சாரங்கன் விழி களை ஒரு தரம் மூடித் திறந்தான்.

தொடர்ந்து அவன் பேசப்பேச, அதுவரை தொய்ந்து போயிருந்த தைரியமும் திடமும் சாரங்கனுக் குள் தலைதூக்க ஆரம்பித்தன.

இப்படி ஒரு அருமையான யோசனை இதுவரை தோன்றாமல் போயிற்றே என்ற ஆதங்கம்கூட எழுந்தது.

எது தவறு, எது சரி என்பதை யார் எப்படி தீர்மானிப்பது? அப்படி தீர்மானித்தால்தான், என்னை நோக்கி விரலை நீட்டி குற்றம் சாட்ட எவனுக்கு தைரியம் இருக்கிறது? யோக்யதை இருக்கிறது?

கேவலம் சாப்பாடு நெல்லுக்குக்கூட உன்பாடு, என்பாடு என்று தவிக்கிற அளவுக்கு துக்கிணியூண்டு நிலம் வைத்திருப்பவன் அந்த விஸ்வநாதன்... இஞ்சிக்குடியில் எந்த தோப்புக்கருகில் புது குடிசை எழும்பினாலும், 'குடிசை யாருது? விஸ்வநாத னோடதா? இந்தத் தரம் பொண்ணு யாராம்?' என்று கேலியாய் அவரவரும் கேட்டுவிட்டுப் போகிற அளவுக்கு புதுசு புதுசாய் எத்தனை தொடர்புகள்... இன்று வரை அவனைப் பார்த்து யார் வாயைத் திறந்திருக்கிறார்கள்?

மேலும் மேலும் எதை எதையோ பேசி, விவாதித்து, கணக்குகளைப் போட்டு, கூட்டி, கழித்துப் பார்த்து, "உன் ஐடியா பிரமாதம்டா ராஜா... இப்ப எடு பாட்டிலை, ரெண்டையும் நானே காலி பண்றேன்! சாப்பாட்ட இஞ்சயே கொண்டு வரச் சொல்லு!" என்று நண்பனைத் தட்டிக் கொடுத்து, மூன்று மணிக்கு மேல் ஆறிப்போயிருந்த சாப்பாட்டை சுத்தமாகச் சாப்பிட்டு,

அங்கேயே படுத்துத் தூங்கி, இரவு கடைசி பஸ்ஸை அவசரமாகப் பிடித்து கிராமத்தில் வந்து இறங்கிய போது, சாரங்கனின் மனசு குதூகலத்தில் ஆட்டம் போட்டது.

வீட்டுக்குள் நுழைந்து, பாலா ஓடியாடி பரிமாறிய சாப்பாட்டையும் விடாமல் சாப்பிட்டான்.

முற்றத்தில் நாற்காலியில் அமர்ந்து ஏதோ புத்தகம் படிப்பவனாக பாவனை செய்து பத்து மணிக்கு மேல் குழந்தைகள் கூடத்தில் விளக்கை அணைத்துப் படுத்துத் தூங்கியதும், மெல்ல காமிரா அறைக்குள் நுழைந்தான்.

உள் வேலைகளை முடித்து பாலா படுக்க வந்ததும, சரக்கென்று கதவை மூடினான்.

"உக்காரு... உடனே தூங்கிப் போயிடாதே! எனக்குக் கொஞ்சம் பேசணும்!" என்று அவளை உட்கார வைத்தான்.

மதியம் நடந்த பேச்சுக்களின்படியும், வரும்போது பஸ்ஸில் யோசித்துக்கொண்டு வந்த முடிவின்படியும் தான் தீர்மானித்து வைத்திருந்ததை அழுத்தம் திருத்த மாக அவளிடம் சொல்லி, "எனக்குத் தெரியும் பாலா, உங்கொணம்... என் சந்தோஷம்தான் உன் சந்தோஷம்னு வாழறவ நீ! அவனவன் பல்லு மேல நாக்கு பட என்னை கண்டபடி, ஒரு பிள்ளை இல்லேங்கறதுக்காக சதாய்க்கறது உனக்கு எத்தனை வேதனை தர்றதுனு எனக்கு நன்னாவே தெரியும்... பேசற கழுதைகளோட வாய அடைக்கணும்னா நா சொன்னதைத் தவிர வேற வழி இல்லேங்கறது உனக்கே நன்னா புரியும்... நீ சமத்து... ஆ, ஊணு கத்தி குதிச்சு ஆர்பாட்டம் பண்ணாம, நா சொல்றத ஏத்துப்பேனு..." என்றும் கெஞ்சலாகப் பேச—



அவன் பேசிக்கொண்டிருக்கையிலேயே, சட்டி தணலைத் தலையில் கொட்டிவிட்ட துடிப்புடன் "ஐய்யோ... என்னன்னா... கன்னாபின்னானு எதை எதையோ பேசறேளே? வெளையாடறேளான்னா?..." என்று கேவலாக பாலா புலம்ப முற்பட, "ஏய்... இந்தா... ஷ்... ஷ் எதுக்காக இப்ப இந்தக் கூச்சல் போடறே... ஏய்... ஷ்..." என்று அவளை சாரங்கன் அடக்கப் பார்த்தபோது, அடங்கியிருந்த எரிச்சலும் கோபமும் நன்றாகவே அந்தக் குரலில் மண்டத் துவங்கியது.

# 4

"எ... என்னடீ பாலா சொல்றே?"

பொங்கும் தறுவாயிலிருந்த பாலை ஒருதரம் கிளறி விட்ட பர்வதம், தடாலென்று கரண்டியைக் கீழே போட்டாள்.

"பொழுது விடிஞ்சதும் விடியாததுமா வந்து எந்தலைல கல்லத் தூக்கிப் போடறியே! என்னடீ சொல்றே?"

குத்துக்காலிட்டு அமர்ந்து, முழங்காலில் முகத்தைப் புதைத்து உட்கார்ந்த பாலாவிடமிருந்து மெல்லிய விசும்பல் பிறந்து, நிமிஷ நேரத்தில் பெரிய அழுகையாய் வளர்ந்தது.

"அ... அம்மா... ஆ... ஆ... நா என்னத்தம்மா சொல்றது... என்னத்தனு சொல்றது..."

"ஐயோ, தெய்வமே... எனக்கு ஒண்ணுமே புரியலியே... காலங்கார்த்தால என்னென்னமோ பேத்தறியேடீ பாலா... உனக்கு என்னடீ ஆச்சு?"

அழுகை கொஞ்சமும் நிற்காமல், "அம்மா...ஆ..." என்று பாலா மறுபடி குழறத்துவங்க, சட்டென்று முன்னால் சாய்ந்து அவளின் தோளைப் பற்றி உலுக்கி நிறுத்தினாள் பர்வதம்.



"நிறுத்துடீ... சித்த நிறுத்து... அழுகையை நிறுத்திப்ட்டு புரியும்படியா பேசப் போறியா இல்லியா? தத்துபித்துனு— ரெண்டாங் கல்யாணம்னு என்னமோ குண்டத் தூக்கிப் போட்ற மாதிரி பேத்தினியே— என்னடீது?"

புடவைத் தலைப்பால் கண்ணைத் துடைத்துக் கொண்டு, அப்படியும் நிற்காத அழுகையோடு "ஆமாம்மா... ரெண்டாவதுதான்! எங்காத்துக்காரர் பண்ணிக்கப் போறாராம்... இந்த அநியாயத்த வெவரமா எப்பிடிம்மா சொல்லுவேன்... ஐயோ, என் வாய் அடைச்சுப் போகலியே... பகவானே..." என்று விடாமல் அரற்றினாள் பாலா...

"ஏய்— பாலா— ஏதாவது சொப்பனம் கிப்பனம் கண்டுப்ட்டு உளர்றியா? நன்னா ஜலத்த அடிச்சு மூஞ்சிய அலம்பிண்டு வாடீ பாலா... தூக்கக் கலக்கம் போகும்..."

"இல்லேம்மா... தூக்கமும் இல்லே, கலக்கமும் இல்லே! தூங்கினாத்தானே சொப்பனம் காண்றதுக்கு? நெஜமாத்தான் சொல்றேன்... அவர் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கப் போறாரா..."

அவளை முடிக்க விடாமல் பர்வதம் பாய்ந்தாள்.

"அப்படியெல்லாம் பேசறவர் மாப்பிள்ளை இல்லடி... ஏதோ சொன்னத தப்பா புரிஞ்சுண்டு ஒண்ணு கெடக்க ஒண்ணு அர்த்தம் பண்ணிக்காத... ஆமா..."

"ஐயோ என்னம்மா, நா சொல்றத காதுல வாங்காம மேல மேல பேசிண்டே போறே— உன் மாப்பிள்ளையே என்னண்ட சொன்னார்... ஆணி அடிச்சாப்பல பட்டுனு

தன் வாயாலியேதான் சொன்னார்... இத்தனையும் கேட்டுண்டு நா இன்னும் உசிரோட இருக்கேனே, எனக்குத் தாங்கலையே தெய்வமே... ஐயோ, இப்போ நா என்னப் பண்ணப்போறேன்..." பாலாவின் பேச்சு இப்போதுதான் புரிந்த மாதிரி பர்வதம் அதிர்ந்து விழித்தாள்.

"என்னடீது அநியாயம்! இந்த வயசுல மாப்பிளைக்கு ஏண்டி இப்பிடி புத்தி போறது... அம்மா, தாயே... லோகமாதா... என்னம்மா இது திடீர்னு சோதனை? என்ன, ஏதுனு ஒண்ணுமே புரியலியே... ஐயோ..."

கையை ஆட்டி ஆட்டி புலம்பிய பர்வதம், ஏதோ நினைவுக்கு வந்த மாதிரி திடீரென்று புலம்பலை நிறுத்தினாள்.

"இந்தாடீ... மாப்பிளைகிட்ட எதுக்காவது வாயாடினீயா? மரியாதக் குறைச்சலா ஏதாவது பேசினீயா? கோவத்துல ரெண்டு வார்த்தை படக்குனு சொல்லியிருப்பார், அதப்போயி பெரீசா எடுத்துண்டு அழ ஆரம்பிச்சுட்டியா?"

"ப்ச்... இல்லேம்மா... அதெல்லாம் இல்லே... நேத்திக்கு பூரா நா எங்க அவர்கிட்ட பேசினேன்? கும்மோணததுக்குப் போயிட்டு ராத்திரிதானே வந்தார்?"

"ஒரு வேளை, கும்மோணத்துக்குப் போய் சினிமா கினிமா பாத்துப்ட்டு தமாஷா பேசினாரோ என்னமோ? நன்னா காதுல வாங்கிண்டியாடீ?"

"தமாஷா? எங்கிட்டியா? ஹூம்... என்னிக்கும்மா அந்த மாதிரி பேசியிருக்கார் உன் மாப்பிளை? என் கையப் பாத்தியா... ராத்திரி அவர் விஷயத்தச் சொன்னதும் எனக்குத் தாங்க முடியாம போயிடுத்து... 'ஐயோ'னு ஒடனே அழுததுக்கு, 'சத்தம் போட்டு ஊரக்கூட்டாதடீ...'னு கைய இறுக்கிப் புடிச்சு அழுத்தினார்... பாரும்மா, மூணு விரல நகம் அப்பிடியே பதிஞ்சிருக்கு... இதுவாம்மா தமாஷ்?"



இடது கையின் மணிக்கட்டுக்கருகே பதிந்திருந்த விரல நக அடையாளங்களைக் காட்டிப் பேசியபோது பாலாவின் அழுகை மேலும் அதிகமாகியது.

"ஐயோ, இந்த மனுஷன் ஏன் இப்பிடி புத்திகெட்டு அலையறார்... இப்போ என்னடீ பாலா பணறது? இப்பிடி எல்லா கண்றாவியும் பாக்கணும்னு எந்தலைல எழுதியிருக்கே... உங்கப்பா, புண்ணியாத்மா... போய்ச சேந்துட்டார்... நா என்னடீ பண்ணப்போறேன்? தெய்வமே..."

"இரும்மா, முழுசும் கேக்காம பேசறியே... யாரக் கல்யாணம் பண்ணிக்கப் போறாராம் தெரியுமா?"

"யாரா இருந்தா என்னடீ? உன் வாழ்க்கை போனது போனதுதானே? மூணு பொண்கள வெச்சுண்டு... ஐயோ பாலா, நீ என்ன பாடுபடப் போறியோ... பொம்மனாட்டிகளா இருக்கற குடும்பத்துல இப்பிடி ஒரு அசிங்கம் நடக்கப் போறது தெரிஞ்சா, நாளைக்கு ஆத்துப் பொண்களோட கதி என்னடீ? எவன்டீ வந்து தாலி கட்டப்போறான்? அம்மாடீ..."

"எவனும் வரமாட்டாம்மா... அதுவும், சொந்த மச்சினியையே ரெண்டாவதா கல்யாணம் பண்ணிண்டார்னு சொன்னா..."

"எ... என்னது? காயத்ரியையா? சரியாச் சொல்லுடீ..."

"ஆமாம்மா... காயத்ரியத்தான் பண்ணிக்கப் போறாராம்! 'வேற எவளோ ஒருத்தி வரத்துக்கு பதிலா, உன் தங்கையே வந்தா உனக்கும் சௌரியமதானே, அக்காவும் தங்கையுமா ஒத்துமையா இருககலாமே'னு சொல்றார்மா... என் வாழ்க்கை மட்டும் பாழாப் போகல்லேம்மா, அவளுதும்தான்..."

பாலா முடிக்கும் முன்பே பர்வதம் வயிற்றில் தப் தப்பென்று அறைந்து கொண்டாள். தொடர்ந்து, 'ஐயோ' 'ஐயோ' என்று தலையில ஓங்கி அடித்துக் கொண்டவள், தெளிவாய் எதுவும் பேசாமல் பெரிதாய் சப்தமிட்டு அழ,

குதிருக்கு அந்தப் பககத்திலிருந்து சாரங்கனின குரல் கேட்டது.

"என்னது இது? எழவு வீடாட்டம் காலங்கார்த்தால என்ன ஒப்பாரி? எந்தக் கிழம் மண்டையப் போட்டுது இங்க?"

ஒரே கொடியில் அழுகை சப்தம் அடங்கிப்போய், மௌனம் ஆக்ரமித்தது.

"இந்தாடீ... வா இங்க! யாரது அழுதது? என்னத்துக்கு இப்போ மாய்மாலம்? வாயேண்டீ வெளில..."

கலங்கிய கண்ணையும் சிவந்த முகத்தையும் மறைக்க அவகாசம் இல்லாமல், தலையைக் குனிந்தபடி வந்து நின்றாள் பாலா.

"கடன்காரீ... ராத்திரி சொன்னதெல்லாம் மறந்து போயிடுத்தா? அம்மாவும் பொண்ணுமா அமக்களம் பண்ணி, ஊர் மனுஷா முழுகக வந்து எட்டிப் பார்க்கணுமா? படிச்சுப் படிச்சு சொன்னேனே, காதுலியே வாங்காம ராப்பூரா அழுது என் தூக்கத்தைக் கெடுத்தது போறாதா? இன்னும் எத்தன தரம் சொல்லணும்? அழும்படியா இப்போ என்னடீ நடந்துடுத்து? சுபகாரியத்தப் பத்தி பேச்சு நடக்கறபோ யார் ஆத்துலியாவது இப்பிடி ஒரு டிராமா நடக்குமாடீ? இனிமே..."



அவன் பேசிக் கொண்டிருககையிலேயே, கூடத்தில் படுத்திருந்த பெண்கள் அபிராமி, லதா, புவனா எழுந்து சமையலறை வாசலில் வந்து நின்றார்கள்.

இங்கே என்ன நடக்கிறது என்று மருட்சியோடு பார்த்தவர்களை, "என்னடீ வேடிக்கை இஞ்ச? போய் பல்லத் தேய்ச்சுப்ட்டு பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பற வழியப் பாருங்கோ... டாண்ணு எட்டு மணிக்கெல்லாம் புறப்பட்டாயிடணும்... அங்கங்க பேசிண்டே நின்னேள்னா தொலைச்சிப்பிடுவேன்! போங்கடீ..." என்று விரட்டியவன், மூவருமாய் கிணற்றடிக்கு ஓடியதும் பாலாவைப் பார்க்கத் திரும்பினான்.

"இதுகள கவனிச்சு மொதல்ல பள்ளிக்கூடத்துக்கு அனுப்புடீ... துளி சத்தம் இல்லாம காரியம் நடக்கணும இப்போ... மூச்சு விடப்படாது, தெரியறதா? உங்கம்மாவுக்கும் சேத்துதான் சொல்றேன், உங்க கத்தலும் பேத்தலும் யார் காதுலியாவது விழுந்தது... அப்பறம் உங்களை உண்டு இல்லேன்னு ஆக்கிப்பிடுவேன்..."

ஒரு நிமிஷம் நிறுத்தினவன், "முக்கியமா இந்தக் கொழுந்தைகளுக்கு ஏதாவது தெரிஞ்சிது, உன் தோலை உரிச்சுப்புடுவேன்!" என்று கீழ்க்குரலில் உறுமினான்.

தான் ஏதோ தப்பு செய்துவிட்ட மாதிரி, குனிந்த தலையை நிமிர்த்தாமலே பாலா உள்ளே போக, கண் பார்வையில் சமையலறை முழுவதும் விழுகிற மாதிரி

நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு சாரங்கன் உட்கார்ந்தான்.

பல் தேய்த்துவிட்டு வந்த பெண்கள், அசையாமல் உட்கார்ந்திருக்கும் அப்பாவைப் பார்த்து பயந்துபோய் அவசரகதியில் வேலைகளைப் பார்த்தார்கள்.

ஒருவரோடு ஒருவர்கூட அவர்கள் எதுவும் பேசிக் கொண்டு விடக்கூடாது என்று கண்கொத்தி பாம்பு மாதிரி சாரங்கன் கவனித்துக் கொண்டிருக்கையில், கணபதி சாஸ்திரிகள் வந்தார்.

“என்ன சாரங்கா, பாக்கணும்னு சொன்னியாமே? தூங்கி எழுந்ததும் திண்ணைல உக்காந்திண்டு இருக்கறப்போ...” உற்சாகமாய் பேசிக் கொண்டே வந்தவரைப் பார்த்து திடுக்கிட்டு எழுந்து நின்றான் சாரங்கன்.

“உம்மை யாரு இப்போ வரச்சொன்னது? நீர் பாட்டுக்கு என்னமோ...”

“என்ன சாரங்கா, அப்டி கேக்கறே? நீந்தானே முருவன்கிட்ட சொல்லி அனுப்பிச்சே?”

வரவா சொன்னேன்? ஆத்துலியே இருக்கச் சொல்லு, ஒம்பது மணிக்கு மேல நா வந்து பாக்கறேன், கொஞ்சம் ஜோலி இருக்கு’னு சொல்லிவிட்டா, உம்பாட்டுக்கு தடக்குனு வந்து நிக்கறீமே?”

கணபதி உரிமையாய் அவன் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்.

“போறது போ... யாரு வந்தா என்ன? எதுக்கு பாக்கணும்னே? ஏதாவது நல்ல சேதி சொல்லப் போறியா? இந்தாத்துல இப்போதைக்கு நல்ல



சேதின்னா காயத்ரி கல்யாண விஷயமாத்தானே? சொல்லு...”

அவரை முடிக்க விடாமல் சாரங்கன் கோபத்தோடு குறுக்கிட்டான்.

“நிறுத்துமே! இப்போ எனக்கு நிறைய வேலை இருக்கு, நா அப்பறமா உங்காத்துக்கே வரேன்... அஞ்சு வந்து விவரமா சொல்றேன், நீர் பொறப்படும்...”

“இல்லே, வந்தது வந்துப்டேன்...”

“வந்துட்டேனாவது, கிந்துட்டேனாவது? நானா வரச்சொன்னேன்? இப்போ உம்மகூட அரட்டையடிக்க எனக்கு நேரம் இல்லே... மரியாதையா கிளம்பும்...”

நல்ல விஷயத்தைப் பற்றி பேசுகையில், இவனுக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது என்ற சந்தேகப் பார்வையுடன் கணபதி வாசலைப் பார்க்க நடக்கத் துவங்க, திடுமென நினைவுக்கு வந்த மாதிரி சாரங்கன் அவரைத் தடுத்து நிறுத்தினான்.

தானாகவே வந்திருப்பவரிடம் ஒழுங்காய் வேலையை முடித்துக் கெண்டால், நாம் ஒரு நடை அவர் வீட்டுக்குப் போக வேண்டிய அவசியம் இல்லை.

ஒவ்வொன்றுக்கும் நாமே வெளியில் போய் கவனிக்க ஆரம்பித்தால், கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பாலாவோ அவள் அம்மாவோ ஊரைக் கூட்டி விஷயத்தை தண்டோரா போட்டுவிட்டால என்ன செய்வது?

எவனும் எதுவும் செய்துவிட முடியாது என்றாலும், விஷயம் நல்லபடியாய் நடந்து முடிகிற வரை... அனாவசிய குழப்பமும் அமர்க்களமும் ஏன்?

தீர்மானித்துக்கொண்டதும் குரலை சற்றே தழைய விட்டு, "சித்த இருங்கோ சாஸ்திரிகளே... நீங்க சொல்றதும் சரிதான்— இத்தன தூரம் வந்துப்டேள், திரும்பிப் போவானேன? வாசத் திண்ணைல சித்த நாழி உக்காந்துக்குங்கோ, நா இதோ வரேன்..." என்றவன்,

அவரோடு கூட வாசல்வரை நடந்து திண்ணையில் அவரை அமர்த்தின பிறகு கூடத்துக்கு வந்து, "கணபதி சாஸ்திரிகள் வந்திருக்கார் பார்நீ... நல்லதா மோர் கொண்டு வந்து குடு..." என்று குரல் கொடுத்தான்.

சாஸ்திரிகள் வந்ததையும், சாரங்கன் முதலில் கத்தினதையும் பிறகு தழைந்து போய் அவரை உட்காரச் சொன்னதையும் இத்தனை நேரம் சமையலறை கதவு மூலையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த பாலாவுக்கு வெலவெலத்துப் போனது.

அவ்வப்போது லேசான விசும்பலோடு சமையலில் ஈடுபட்டிருந்த அம்மாவிடம் போய் ரகசியக் குரலில், "என்னம்மா இது, சாஸ்திரிகளை வேற அதுக்குள்ள வரச் சொல்லியிருக்கார்! 'ஒரு வாரம், பத்து நாளைக் குள்ள கல்யாணத்த முடிச்சுப்புடுவேன்'னு நேத்திக்கு சொன்னாரே, அதுக்காகத்தான் ஏற்பாடு பண்றார் போலருக்கும்மா... நம்ம கைய மீறிப் போயிண்டிருக்கு விஷயம்... இப்போ என்னம்மா பண்றது?" என்ற போது, கணவனின் மிரட்டலையும் மீறி அழுகை மறுபடி எட்டிப் பார்த்தது.

பள்ளிக்கூடத்துக்குப் போக தயாராகி நின்ற அபிராமி, "அம்மா, மோர் கொண்டு வரச் சொன்னார்ம்மா அப்பா... நீ ஏம்மா இப்போ அழறே?"



என்று பதட்டத்தோடு கேட்க, பாலா சுதாரித்துக் கொண்டாள்.

"ஒண்ணுமில்லேடீ... நீ எதையாவது பேசிண்டு நிக்காதே... வயத்துக்கு சாப்டாச்சுன்னா பொழுதோட ஸ்கூலுக்குப் போற வழியப் பாரு... பைய எடுத்துண்டு கெளம்பு... இந்தா, போறப்போ இந்த மோர சாஸ்திரிகள்டே குடுத்துப்ட்டு கெளம்பு..."

தங்கைகளை அழைத்துக் கொண்டு அபிராமி பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பிப் போக, அக்ரஹார முனையில் அவர்கள் தலை மறைந்ததும் சாரங்கன் சாஸ்திரிகளை அழைத்துக் கொண்டு உள்ளே வந்து வரசற கதவைத் தாளிட்டான்.

"இப்போ வாரும்... உட்காரும். எதுக்கு பாக்க ணும்னு சொல்லி அனுப்பிச்சேன்னா, ...மம... பத்து நாளக்குள்ள சுருக்க ஒரு பிரமாதமான முகூர்த்த நாள் பாத்துக்குடுமேன்..."

"பத்து நாளக்குள்ளியா? காயத்ரி கல்யாணத் துக்குத்தானே நாள் பாக்கறேள்? மாப்பிள்ளை யாத்துல அத்தனை அவசரப்படறாளா? பேஷ்! மனுஷா எப்பிடி, நல்லவாதானே? எந்தூர்க்காரா? காயத்ரிக்கு ஏத்த திணுசுல படிச்சவர்தானே மாப்பிள்ளை?"

"ப்ச்... மூச்சு விடாம பேசறீமே! முகூர்த்த நாள் பாத்துக்குடுங்கோன்னா, தேவையில்லாம கேள்வியா கேக்கறீம்! மொதல்ல நாள் குறிச்சுக்குடும்..."

"குறிக்கலாம்... குறிக்கலாம்... விசேஷம் என்னனு தெரிஞ்சாத்தானே நாள், நட்சத்திரம் பாக்க முடியும்?"

"ம்? நிச்சயதார்த்தம்னுதான் வெச்சுக்குமேன்! ஆனா, தாலி கட்டி கல்யாணமே பண்ணிடறாப்பல, பிரமாதமா இருக்கணும்!"

"கல்யாணமா? அப்பிடின்னா, ஜாதகம் பாக்க வேண்டாமோ?"

எத்தனை அடக்கினாலும் விடாமல் அவர் கேள்வியாய் கேட்டுக் கொண்டிருக்க, ஒரேயடியாய் அவர் வாயை அடைக்கும் ரீதியில், "இந்த தடவை உம்ம காட்டுல மழைதான் சாஸ்திரிகளே! நூறு கேள்வி கேக்காம அருமையா நாள் பாத்துக் குடுத்தீர்னா, வழக்கமா தர்றதவிட ரெட்டிப்பா உமக்கு சம்மானம் தரப் போறேன். அதனால, வாய மூடிண்டு சொன்ன வேலையச் செய்யும்" என்று அதட்டலாய் பேசி கிறுத்தினான் சாரங்கன்.

கணபதி சாஸ்திரிகள் இரண்டு பங்கு பணம் என்றதும் வாய் கொள்ளாமல் சிரித்தார்.

"குடுத்தாப்போச்சு! பையனோட நட்சத்திரத்த மட்டும் சொன்னேன்னா, காயத்ரியோடதோட பொருத்தம் பாத்து நாளைக் குறிச்சுப்பிடலாம்!"

"எல்லாம் என் நட்சத்திரம்தான்... மூலம்! பஞ்சாங்கத்தை வெளில எடுத்து பாக்க ஆரம்பியும்..."

"மூலமா? பேஷ்... ஆண் மூலம் அரசாளும்! இந்தாத்து ரெண்டு மாப்பிள்ளைகளும் ராஜாதான்... உங்க மாமனார் பண்ணின புண்ணியம்... எல்லாம் நன்னா அமையறது..."

பத்து நிமிஷங்களுக்கு பஞ்சாங்கத்தை அலசி, அடுத்து வரவிருக்கும் திங்கள்கிழமை நல்ல நாள் என்று அவர் அழுத்தம் திருத்தமாய் கூற,



சாரங்கனின் இதயம் சந்தோஷ அதிர்ச்சியில் ஒரு துள்ளு துள்ளியது.

திங்கள்கிழமை! அப்படியானால்... இன்றோடு சேர்த்து இன்னும் ஐந்து நாள்கூட முழுசாய் இல்லை!

அதற்குள், காயத்ரியை மெட்ராஸிலிருந்து வரவழைத்து, சமாளித்து, மற்ற ஏற்பாடுகளை கவனித்து...

முடியுமா?

முடியுமா என்ன, முடியுமா! முடியவேண்டும்!

இந்த மாதிரி விஷயங்களைத் தள்ளிப்போடுவதால், பிரச்னைகள்தான் அதிகமாகும்.

செய்தியை கிரகித்து மற்றவர்கள் செயல்படுகிற அளவுக்கு அவகாசமே கொடுக்கக் கூடாது.

நூறு ரூபாய்த்தாளை எடுத்து நீட்டி, "திங்கக்கிழமை பொழுது விடிஞ்சதும் இஞ்ச வந்துடணும்... அதுக்கு முன்னால ஞாயித்துக் கிழமை இஞ்ச வாரும், என்னென்ன தேவைனு சொல்றேன். நீரே எல்லா ஏற்பாடும் பண்ணிப்பிட்டு பாக்கி பணத்த வாங்கிக்கும்...... முக்கியமானத சொல்ல மறந்துட்டேனே... இப்ப இஞ்ச பேசின வெவரமெல்லாம் நம்பளோட இருக்கட்டும். கண்ணும், காதும் வெச்ச மாதிரி காரியத்த நடத்திப்டு அப்பறமா வெளில சொல்லிக்கலாம்... ஏன் சொல்றேன்னா, ஏற்கனவே அவனவன் ஆத்தாமையில வெந்துண்டு இருக்கான்... இன்னும் வயத்தெரிச்சல் பட வைக்க வேணாமேனுட்டுதான்... என்ன, புரியறதா? பாக்கி வெவரமெல்லாம் நிதானமா சொல்றேன்... என்ன?" என்று திட்டவட்டமாகப் பேசி கணபதி சாஸ்திரிகளை அனுப்பினவன், தொடர்ந்து செய்ய

வேண்டியவைகளை ஒருதரம் மனசுக்குள் பட்டியலிட்டுக் கொண்டான்.

இன்று புதன். இன்றே கும்பகோணத்துக்குப் போய் காயத்ரிக்கு ஒரு தந்தி கொடுத்தால், அது நாளைக்குள் அவள் கையில் கிடைத்து விடாதா?

பின், நாளை இரவோ அல்லது மறுநாள் பகல் ரயிலிலோ கிளம்பினால்... எப்படியும் வெள்ளிக்கிழமை மாலைக்குள் இங்கே வந்து விடமாட்டாளா?

அப்புறம், சனி... ஞாயிறு... பேசுகிற விதத்தில் பேசி அவளை சம்மதிக்க வைக்க இரண்டு நாள் எதேஷ்டம்!

இன்று தந்தி கொடுக்க போகும்போதே, பட்டுப் புடவை, பட்டு வேஷ்டி, திருமாங்கல்யம், இத்தியாதிகளை வாங்கி விடலாம்.

கும்பகோணம் போய் இத்தனையையும் முடித்துக் கொண்டு வர குறைந்தது ஐந்து, ஆறு மணி நேரமாவது ஆகாது?

அதற்குள் பாலா எதையாவது அசட்டுத்தனமாக பேசி, செய்து வைத்தால்?

நேற்று இரவு விஷயத்தைச் சொன்னதுமே, முரண்டு பிடித்து அழ ஆரம்பித்து விட்டாள்.

இத்தனை சீக்கிரம் காரியம் கைகூடி வரப்போகிறது என்பது வேறு தெரிந்தால், அவள் ஆகாத்தியம் அதிகமாகி விஷயம் ரசாபாசமாகி விடலாம்.

காயத்ரி கழுத்தில் தாலியைக் கட்டி விட்டால் பிரச்னை இல்லை. அப்புறம் யார் என்ன பேசினாலும், செய்தாலும் கவலையில்லை. அதுவரை மிக மிக ஜாக்கிரதையாக திட்டமிட வேண்டும்.



தந்தி கொடுக்க தான் போகாமல், ஆள் மூலம் அனுப்ப முடியாது.

திடுமென, நேற்று ராஜசேகர் பேசியது நினைவுக்கு வந்தது சாரங்கனுக்கு.

'நீ மட்டும் நல்லா ப்ளான் பண்ணி ஒரு தீர்மானத்துக்கு வந்திட்டேன்னா, அப்பால நா எல்லா ஏற்பாட்டையும் கவனிச்சுக்கறேன்... உங்கூர்க்காரங்க வாயத் திறக்கக்கூட முடியாம ஆளுங்கள ஏற்பாடு செஞ்சிடறேன்...'

வேலையாள் மூலம் தந்திதான் கொடுக்க முடியாது. ஆனால் ராஜசேகருக்கு கடிதம் கொடுத்து அனுப்பலாமே? 'நீயே என் சார்பில் தந்தி கொடு' என்று எழுதி அனுப்பிவிட்டால், விஷயம் தீர்ந்தது.

அப்புறம், காயத்ரி வந்து சேரும் அன்று அவளை அழைக்க ஸ்டேஷனுக்குப் போனால் போதும்.

அன்றுகூட, புடவை துணிமணிகளை வாங்கலாம் என்று பாலாவையும் அவள் அம்மாவையும் அழைத்துக் கொண்டே போய்விட்டால், அவர்கள் என் கண்பார்வையில் இருந்து தப்பிவிடாமல் கவனித்துக் கொள்ளலாம்.

பிறகு?

பிறகென்ன?

இருக்கும் ஒரே ஒரு தடையையும் அகற்றி விட்டால், அப்புறம் ஆண்களாக பெத்துப் போடப்போகும் பெண்ணும் எனக்கே; அவள் சொத்தும் எனக்கே!

கற்பனையே இனிப்பாக இருக்க, திருப்தியோடு சமையலறை பக்கம் சென்று, "ந்தாடீ... இன்னிக்கு வயக்காட்டுப் பக்கம் நா போப்போறதில்லே... சுருக்க

சமையல முடிச்சு மளமளனு எலையப் போடு...'' என்றான்.

இரண்டு நிமிஷமாகியும் உள்ளேயிருந்து பதில் வராமல் போக, எட்டிப் பார்த்தான்.

குதிரில் சாய்ந்து உட்கார்ந்து அழுது கொண்டிருந்த பாலா, எழுந்து நின்றாள்.

"என்ன? என்னத்துக்கு இப்பிடி சாவு விடாட்டம் மூஞ்சியக் காட்டிண்டு உக்காந்திருக்கே? ஒரு தரம் சொன்னா உங்களுக்கு புரியாதோ? சும்மா சும்மா நா இப்பிடி வந்து வெரட்டிண்டு நிக்கணுமா?"

"இல்லேன்னா... நீங்க நிச்சயமா முடிவே பண்ணிப் டேளா? காயத்ரிய..."

"போச்சு! மறுபடியும் மொதல்லேருந்து 'அடியப் பிடிடா பாரதப்பட்டா'னு ஆரம்பிச்சுப்டியா? தமிழ்ல தானே உங்கிட்ட சொன்னேன்? புரியாமல் போக என்னடி இருக்கு இதுல?"

"என்னன்னா... ஏன்னா இப்பிடியெல்லாம் பேசறேள்? உங்களுக்கே இதெல்லாம் நியாயமாய் படறதான்னா? இன்னொரு கல்யாணம் பண்ணிக்கற அளவுக்கு நா எதுலன்னா கொறைஞ்சிப் போயிட்டேன்? எங்கிட்ட ஏதாவது கோவம்னா அடிச்சு வேணாலும் போடுங்கோ. அதுககாக... அதுக்காக..."

"நிறுத்துடீ! ஏன், எதுக்குனு உன்கிட்ட விளக்கமா பேசிண்டு இருக்க முடியாது என்னால! எனக்கு புருஷ வாரிசு வேணும், அது உன்னால முடியாது! அப்பறம் பேச்சென்ன வேண்டிக்கிடக்கு, பேச்சு! பெத்திருக்கியே வரிசையா கொலு பொம்மையாட்டம், பொட்டச்சிக் கூட்டம்! இதுகளுக்கு கல்யாணம் பண்ணி வெக்கணு



மேன்னு கவலைப்படறதுதான் எனக்கு வாழ்க்கையா? இஞ்ச பார், கடைசியா சொல்றேன் கேட்டுக்கோ... நா கட்டாயம் காயத்ரியக் கல்யாணம் பண்ணிக்கத்தான் போறேன்... நீ அனாவசியமா அழுது ஆகாத்தியம் பண்ணி என் கோவத்த ஜாஸ்தியாக்காத... ஆமா, சொல்லிட்டேன்..."

ஒரு வினாடி நிறுத்தினவன், கேலியாய் சிரித்தான்.

"இப்போ கணபதி சாஸ்திரிகள் வந்தாரே. எதுக்குத் தெரியுமா? எங்கல்யாணத்துக்கு நாள் பாக்கத்தான்! வர்ற திங்கக்கிழமை அமோகமா இருக்காம்... அன்னிக்குப் பொழுது விடிஞ்சதும் விசேஷந்தான்! அதுக்குள்ள உன் பொலம்பலை ஒதுக்கி வெச்சுப்ட்டு, ஆக வேண்டியத கவனி..."

"ஐயயோ... ஏற்பாடே பண்ணிட்டேளான்னா? அம்மா... அம்மா... ஆ..." என்று பெரிதாய் குரல் எடுத்து பாலா அழ, இது நாழிகை ஒரு ஓரமாய் நின்றிருந்த பர்வதம் அவசரமாய் முன்னே வந்தாள். படபடப்பாய் பேசினாள்.

"இப்பிடி அக்கிரமம் பண்றேளே? இது உங்களுக்கே நன்னாயிருக்கா? எங்க ரெண்டு பேர் பேச்சையும் கேக்காட்டாலும், நல்லது கெட்டதை நாலு விதமாவும் நன்னா யோசனை பண்ணிப் பாக்க வேண்டாமா? பொம்மனாட்டிக் கொழந்தைகளா வீடு முழுக்க இருக்கே, நாளைக்கு அதுகளுக்கு ஒரு நல்லது நடக்க வேண்டாமா? அவருக்கு அப்பறம் ஆம்பிளைனு உங்களண்டதான பொறுப்ப ஒப்படைச்சிருக்கோம்! நீங்க இப்பிடி..."

துண்டை பட்டென்று உதறி தோளில் போட்ட சாரங்கன் சீறினான்.

"சட்! யாருதான் எனக்கு அட்வைஸ் பண்றதுன்னே இல்லியா? மேம்மேல பேசாம இத்தோட விடுங்கோ... இஞ்ச பார் நீ பாலா, இனிமே இதப்பத்தி யாராவது வாயத்தொறந்தா அப்பறம் கொலையே விழும், தெரியுமா?"

'ஐயோ'வென்று கத்தி, படபடவென்று பர்வதம் தலையில் அடித்துக் கொண்டு அழ, பாலா ஆவேசமாய் கத்தினாள்.

"விழட்டும்...... எங்க எல்லாரையும் கொன்னுப்டு அப்பறம் நீங்க ஒண்ணென்ன, ரெண்டு கல்யாணம் வேணாலும் பண்ணிக்குங்கோ... ஆனா, எங்களையும் காயத்ரியையும் விட்டுடுங்கோ... ஐயோ, உங்களைக கேப்பாரே இல்லியா... தெய்வமே..."

சடாரென்று இரண்டடி முன்னால் பாய்ந்த சாரங்கன் அவள் முடியை கொத்தாய் அழுந்தப் பிடித்து, தலையை பின்னால் சாய்த்து ஓங்கி கன்னத்தில் அறைந்தான்.

"மூடு... வாய மூடு... மூதேவி! ஓலம் போட்டா எல்லாருக்கும் விஷயத்தச் சொல்லிப்பிடலாம், அப்பறமா ஒண்ணும் நடக்காம தடுத்து நிறுத்திப்பிடலாம்னுதானே நினைச்சு இந்தக் கத்து கத்தறே? அதான் நடக்காது... நாக்க இழுத்து வெச்சு அறுத்துப்புடுவேன், தெரியுமா?"

மாப்பிள்ளையின் முன் வரக்கூடாது என்று தனக்குத்தானே கட்டிக் காத்த மரியாதையை விலக்கி விட்டு இப்போது பர்வதம் சாரங்கனின் முன் வந்து நின்று குரல் எடுத்து கத்தினாள்.

"அவ நாக்க அறுத்துடுவேள் மாப்பிளே... ஆனா நா சும்மா இருக்க மாட்டேன்... வீடு வீடா போய்



நியாயம் கேட்டுப் பாக்கறேன், யாரு உங்க பக்கம் பேசறான்னு பாத்துடுவோம்! செஞ்ச புண்ணியத்துக் கெல்லாம் ஏதாவது அர்த்தம்..."

மனைவியைப் பிடித்த பிடியை விடாமல் திரும்பி பார்த்து சாரங்கன் கண்கள் சிவக்க உறுமினான்.

"ஆஹா... தாராளமா போய் சொல்லுங்கோ! நானா வேண்டாங்கறேன்? எனக்கு ஒரு நல்லது நடக்கறத தடுத்து நிறுத்திட்டா மட்டும் சரியாப் போச்சா? அப்பறம் மட்டும் பாலா தலைப்பைப் பிடிச்சுண்டு, 'இனிமே உன்னைவிட்டுப்ட்டு போக மாட்டேண்டீ'னு சுத்துவேனு எதிர்பாக்கறேனா? தெருவுக்கு ஒருத்தினு, ஊருக்கு நாலு பேரை வச்சிப்பேன். அப்போ? வீடு வீடா போய் சொல்லுவாளாமே, வீடு வீடா!"

நிறுத்தினவன், மூக்கை விடைத்துக் கொண்டு பரிகாசமாய் உரக்க சிரித்தான்.

"சொல்லித்தான் பாருங்கோளேன்... இந்தாத்துக்கு ஒரே ஆம்பிளை நா, என்னக் கேக்காம நல்லது கெட்டது எதுவும் நடக்காதுங்கறது ஞாபகம் இருக்கா? இப்போ நாஞ்செய்றதுக்கு குறுக்கே வந்தேளானா, நாளைக்கு காயத்ரிக்கு வேற எடத்துல மாப்பிள்ளை பாக்க விட்டுடுவேனா? அவ படிப்ப நிறுத்தி, இஞ்ச ஆத்துல கொண்டு தள்ளினேன்னா, அப்பறம் ஆயுசுக்கும் கன்னியா இஞ்சயே சாக வேண்டியதுதான், புரியறதா? அவ மெட்ராஸ்ல எவனோடவோ சேந்து கெட்டுப் போயிட்டான்னு நானே சொன்னா, அப்பறம் எந்தப்பய இந்தப்பக்கம் எட்டிப் பாப்பான்? காயத்ரிக்கு மட்டுமில்லேடீ, நீ பெத்துத் தள்ளியிருக்கியே கம்மனாட்டி ஜென்மங்களா... அதுகளுக்கும் நாளைக்கு

இதே கதிதான்! ஒண்ணுத்துக்கும் படிப்பும் கெடையாது, ஒரு எழவும் நடக்காது! உங்களை எல்லாம் வரிசையா நடுத்தெருவுல நிறுத்தி, பிச்சை யெடுக்க விட்டுப்புடுவேன்! பேசறியா பேச்சு..."

மறுபடி, பாலாவின் தலையை முறுக்கி கோபம் குறையாமல் குதிரில் மோதினான்.

"உங்கப்பன் செத்தப்போ எல்லாருமா சேர்ந்து என்ன மாதிரி கெஞ்சினேள்? ஒரு துரும்பத் தூக்கி அந்தண்டை போட உங்க யாருக்காவது துளி துப்பு இருந்துதா? எல்லாத்துக்கும் நான்தானே வரவேண்டி யிருந்துது! ராவும் பகலும் பாக்காம ஒழைச்சு ஒழைச்சு இத்தனையும் விருத்தி பண்ணி காபந்து பண்றேனே, என்னைப்பாத்தாடி இந்தப் பேச்சு பேசறே! போய் சொல்லித்தான் பாரேன் வீடு வீடா! எவன் வந்து என்ன செய்யப் போறான்னு பாக்கலாம்! என்னப் பாத்து கைய நீட்ட எவனுக்குடி யோக்யதை இருக்கு? புதுசு புதுசா பொண்ணக் கூட்டிண்டு வந்து குடுத்தனம் போடறவனும், வாரந்தவறாம கூத்தியாளப் பாக்கப் போறவனுந்தானே இஞ்ச இருக்கான்கள்! ஒழுங்கா கல்யாணமே பண்ணிக்க போறேங்கற என்னப் பாத்து எவன்டி குத்தஞ் சொல்ல முடியும்?"

மாமியாரை அடிக்க முடியாத கையாலாகாதத் தனத்துடன் மூச்சிரைக்கப் பேசினவன், சுவரோரமாக இருந்த பானையைத் தூக்கிப் போட்டு உடைத்தான். பாத்திரங்கள் இருந்த ஸ்டாண்டை ஓங்கி உதைத்து கவிழ்த்தான்.

ஒரு நிமிஷத்தில் அறையை கன்னா பின்னா வென்று அலங்கோலப்படுத்திய பின், இடுப்பில் கை வைத்து நின்று மூச்சிரைக்க பேசினான்.



"மரியாதையா வாய மூடிண்டு கிடங்கோ... இல்லேன்னா, உள்ளதும் போச்சு நொள்ளக்கண்ணானு ஆயிடும்! இன்னிக்குப் போய் தந்தி குடுத்து காயத்ரிய வரவழைக்கப்போறேன்... அவ வர அன்னிக்கு கும்மோணத்துல பொடவையும் கிடவையும் வாங்கிண்டு வந்துட்டா, திங்கக்கிழமை காத்தால கல்யாணம்... அதுவரைக்கும் மூச்சு சத்தம் கேக்கக்கூடாது... இந்த கணபதி சாஸ்திரிகள் போய் நா சொன்னதையும் மீறிண்டு யாருகிட்டயாவது உளறி வெச்சாலும் வெக்கும்! 'உங்காத்து காயத்ரிக்குக் கல்யாணமாமே?'னு புத்தி கெட்டவ எவளாவது வந்து விசாரிச்சா, இப்போ அழுதியே அந்த மாதிரி அழுது வெக்காதே! 'திங்கக் கிழமை வெறும் நிச்சயதார்த்தமதான், பாக்கி எல்லாம் விசேஷம் முடிஞ்சப்புறம் வெவரமா சொல்றோம்'னு சொல்லி வை! அதிகமா வாயக் கொடுக்காம எதையாவது சொல்லி மேக்கரிச்சுப் பேசு! என்ன, புரியறதா? படிச்சுப் படிச்சு சொல்லியிருக்கேன், அப்பறம் ஏடாகூடமா எதையாவது செஞ்சேன்னு தெரிஞ்சுதோ— வீட்டையே உருப்படியில்லாம பண்ணிப்பிடுவேன்!"

திக்பிரமை பிடித்த மாதிரி நின்று, அடிகளும் அவன் பேச்சும் தந்த வலியில் தெம்பு முழுக்க இழந்து போனவளாய் துவண்டிருந்த பாலா மெல்ல நிமிர்ந்து பார்த்தாள். பலவீனமான குரலில், "எங்க வாய அடைச்சுட்டேள்! இதுக்கு காயத்ரியையாவது ஒரு வார்த்தை கேக்க வேண்டாமான்னா? அடிச்சு தாலி வேணா கட்டலாம்... வாழ்க்கை நடத்த முடியு மான்னா?" என்று முனக,

சாரங்கன் பக்கென்று சிரித்தான். பின், பெருமிதத் தோடு பேசினான்.

"அதப்பத்தி ஒனக்கு என்ன? நா ஆம்பிளைடீ... நெலமைய எப்டி சமாளிக்கறதுனு எனக்குத் தெரியும். ஏற்கனவே எங்கிட்ட காயத்ரிக்கு தனி பாசம் உண்டு தெரியுமா? 'சினிமால வர பண்ணையார் மாதிரி ஜம்முனு இருக்கேள், அத்திம்பேர்!'னு போனதரம் வந்தப்போகூட சொன்னாளே... ஞாபமிருக்கா? அவ என்ன ஒன்ன மாதிரி படிக்காத அசட்டுப் பொணமா? அவ புத்திசாலி.. சொல்ற விதத்துல சொன்னா புரிஞ்சுக்கப் போறா! நீ வாயத் திறக்காம இருந்தாப் போதும்... அவளை நா பாத்துக்கறேன்! எல்லாம் ஒழுங்கா நல்லபடியா நடந்து முடியறவரைக்கும் நீயோ, உங்கம்மாவோ 'உம்'னு ஒரு வார்த்தைகூட பேசப் படாது! ஜாக்கிரதை!"

கறாராய் அவளிடம் சொன்னபடியே மிக உன்னிப்பாய் செயல்பட்டான் சாரங்கன்.

'அம்மாவுக்கு உடம்பு சீரியஸாக இருக்கிறது. உடனே புறப்பட்டு வரவும்' என்ற தந்தி வாசகத்தையும் காயத்ரியின் விலாசத்தையும் எழுதி, 'இந்தத் தந்தியை உடனே கொடுத்து விடு' என்று ராஜசேகருக்கும் ஒரு கடிதம் எழுதி ஆள் மூலம் கொடுத்தனுப்பினான்.

மனைவியோ மாமியாரோ வெளி மனிதர்கள் யாருடனும் பேசிவிடாத மாதிரி, 'உடம்பு சரியில்லை' என்று சாக்கு சொல்லி வீட்டிலேயே இருந்து அவர்களைக் காவல் காத்தான்.

குழந்தைகள் மூலமாகக்கூட விஷயம் வெளியில் போய்விடக்கூடாது என்று தீவிரமாக அவர்களையும் கண்காணித்து, பள்ளிக்கூடம் தவிர வேறு எங்கும் அனுப்பாமல் இருந்தான்.

ஆனால் சந்தோஷ சமாசாரம்தானே என்கிற ஆர்வத்தில் கணபதி சாஸ்திரிகளே விஷயத்தை வெளி



யில் அவிழ்த்துவிட, சேதி கேட்டு விசாரிக்க வந்த ஒன்றிரண்டு பேர்களையும், "ஆமா... நிச்சயதார்த்தத்த சிம்பிளாத்தான் பண்ணப்போறோம்... கல்யாணத்த நன்னா விமரிசையா மெட்ராஸ்ல நடத்தப்போறோம்... உங்களையெல்லாம் பஸ் வெச்சு பட்டணத்துக்கு அழைச்சிண்டு போறேன்!" என்று சாமர்த்தியமாய் பேசி சமாளித்தான்.

'வெள்ளிக்கிழமை பகல் ரயிலில் வருகிறேன்' என்று காயத்ரி கொடுத்த பதில் தந்தி கிடைத்ததும், வீட்டைப் பூட்டிக்கொண்டு குடும்பத்தோடு கும்பகோணம் சென்று, ஹோட்டல் ஒன்றில் அறையெடுத்து எல்லாரையும் தங்க வைத்தான்.

"நா கடைத்தெருவுக்குப் போயிட்டு, ஸ்டேஷனுக்கும் போய் காயத்ரியக் கூட்டிண்டு வரேன்... அது வரைக்கும் யாரும் வெளிய வரப்படாது!" என்று எச்சரித்து விட்டு, ராஜசேகரின் கடை சிப்பந்தி ஒருவனை "கூப்ட்ட குரலுக்கு இவன் இருக்கட்டும்..." என்றும் காவலுக்கு வைத்துவிட்டுப் புறப்பட்டான்.

பளபளவென்று உடல் பூராவும் ஜரிகை போட்டு ஒன்றுக்கு இரண்டாக பட்டுப் புடவையும், பட்டு வேஷ்டியும் வாங்கிக்கொண்டு, ஐந்து பவுனில் கொடியும் இரண்டு பவுனில் அழுத்தமாய் திருமாங்கல்யமும் வாங்கினான்.

கடைத் தெருவிலிருந்து நேராக ரயில்வே ஸ்டேஷன் போய், ஊருக்குத் திரும்பிப்போக டாக்ஸி ஒன்றைப் பேசி முடித்துக்கொண்டு, ஸ்டேஷனுக்குள் நுழைந்து,

ரயிலில் வந்து இறங்கப் போகும் காயத்ரிக்காகத் தவிப்போடு காத்திருக்க ஆரம்பித்தான்.

# 5

காயத்ரி இறங்கினாள்.

தோளில் தொங்கிய கருப்பு ஏர்பேகும், முகத்தில் படிந்த கவலையின் சுவடுமாய் அவசரமாக ரயிலிலிருந்து இறங்கினாள்.

பிளாட்பாரத்தில் கால் பட்டதும் படாததுமாய் பதட்டத்தோடு நடந்து, இரண்டு பக்கமும் பார்வையைச் சுழற்றினாள்.

ஒரு சில வினாடிகளில், சாரங்கன் இவள் பார்வையில் விழ, இரண்டே எட்டில் அவனை நெருங்கி, "அத்திம்பேர்... அம்மா எப்பிடி இருக்கா ?" என்றாள் பரபரப்பாய்.

அதுவரை காத்திருந்ததில் ஏற்பட்ட தவிப்பு காயத்ரியை நேரில் கண்டதும் அதிகமாக, ஒருவித புளகாங்கித உணர்வுடன் சாரங்கன் அப்படியே நின்றான்.

தன் கேள்விக்கு பதிலோ, வேறு எதுவுமோ சொல்லாமல் அவன் விழிப்பதை விபரீதமாகப் புரிந்து கொண்ட காயத்ரி, "என்ன அத்திம்பேர், அ... அம்மா... அம்மாவுக்கு என்னாச்சு ?" என்று தழுதழுத்த குரலில் மறுபடி கேட்க,



சாரங்கன் சுதாரித்துக் கொண்டான்.

பொய் சொல்லி காயத்ரியை வரவழைத்த விஷயமே அப்போதுதான் நினைவுக்கு வர, சமாளிக்கும் விதமாக பெரிதாக சிரித்தான்.

"பயந்துட்டியா காயத்ரி? உங்கம்மாவுக்கு ஒண்ணுமில்லே... நீ வா, போகலாம்."

அனாவசியமான அவன் சிரிப்பு மறுபடி ஏதோ சந்தேகத்தைத் தூண்டி விட்ட மாதிரி காயத்ரி பயம் குறையாமல் கேட்டாள்.

"சொல்லுங்கோ அத்திம்பேர்... அம்மாவுக்கு உடம்பு சரியில்லேன்னு தந்தி குடுத்திருந்தேளே... இப்போ எப்பிடி இருக்கா ? திடீர்னு என்னாச்சு ?"

ரயிலில் ஏறுவதும் இறங்குவதுமாய் இருந்த ஒன்றிரண்டு பேர்கள், காயத்ரியின் பேச்சு சப்தம் காதில் விழுந்து, ஒரு வினாடி நின்று அழுந்தப் பார்த்து விட்டுப் போக, "ப்ச்... அம்மாவுக்கு ஒண்ணுமில்லேன்னு நாந்தான் சொல்றேனே, திருப்பித் திருப்பி அதையே கேக்கறியே காயத்ரி... நீ மொதல்ல வெளில வா... அஞ்ச போய் பேசுவோம்..." என்று அதட்டிவிட்டு முன்னே நடந்தான் சாரங்கன்.

தொடர்ந்து எதுவும் பேசாமல் அவனை காயத்ரி பின்தொடர்ந்தாள். வாடகை கார்கள் நிற்குமிடத்தை அடைந்ததும் மறுபடி "அத்திம்பேர்..." என்று கூப்பிட்ட போது, அவள் குரலில் ஒரு கண்டிப்பு ஏறியிருந்தது.

"ஸ்டேஷனுக்குள்ளதான் கேக்கக் கூடாதுன்னு சொன்னேள்... இங்க யாருக்கும் காதுல விழாது, இப்போ சொல்லுங்கோ... அம்மா எப்பிடி இருக்கா ?"

"ம்? அம்மாவா? நன்னா கல்லுகுண்டு மாதிரி இருக்கா..."

"அப்போ, உடம்பு சரியில்லேன்னு எனக்கு தந்தி ஏன் குடுத்தேள்? இதுலெல்லாங்கூட விளையாடுவாளா, இல்ல பொய் சொலலுவாளா அத்திமபேர்?"

'பொய்' என்ற வார்த்தையைக் கேட்டதும் சாரங்கனுக்கு திக்கென்றது.

ஆரம்பமே பொய் என்றால், போகப்போக காயத்ரியை எப்படி நம்ப வைக்க முடியும்?

அசட்டு சிரிப்பொன்றை சிரித்து சமாளிக்க பார்த்தான். யோசனை பண்ணாமல் முதல் பொய்யை நீளமாக வளர்த்தான்.

"நா ஒண்ணும் பொய் சொல்லலே காயத்ரி... அன்னிக்கு திடீர்னு உங்கம்மாவுக்கு உடம்புக்கு முடியாமத்தான் போயிடுத்து... மூச்சை அடைக்கிறது, மார் வலிக்கறதுனு ஒரேயடியா எங்களை பயமுறுத்திப்ட்டா... சாதாரணமா எதுக்கும் வாயத் தொறந்து பொலம்பாதவ அப்படி செஞ்சதும், நாந்தான் உனக்கு அவசரமா தந்தி குடுத்தேன்... ஆனா, பகவான் புண்ணியத்துல அம்மா நேத்திலேந்து நல்லபடியா எழுந்து நடமாடறா... அதுக்கப்புறம் உனக்கு மறுபடி தந்தி கொடுத்து நிறுத்தவேணாம்... ஒரு நடை வந்துட்டுப் போகட்டும்னு சும்மா இருந்துட்டேன். முழுசும் கேட்டுக்காம அதுக்குள்ள நா பொய் சொல்றேன்னு நினைச்சுப்டியே! போனாப்போறது... ஏறு கார்ல..."

காரின் பின்கதவைத் திறந்தபடி சாரங்கன் பேச, "அப்பாடா... இப்பத்தான அத்திமபேர் எனக்கு நிம்மதியாயிருக்கு! உங்க தந்தி கிடைச்சு, நா இங்க வந்து சேர்ற வரைக்கும் என்னென்னவோ கற்பனை பண்ணிண்டு... ச்சே, அசட்டுத்தனமா பயந்து போயிட்டேன்!"... என்று புன்சிரித்தாள.



"அதான் போனாப்போறதுன்னு சொல்லிட்டேனே! சீக்கிரமா கார்ல ஏறு, இருட்டறதுக்குள்ள ஊர் போய்ச் சேர வாண்டாமா?"

"நாம்ப ரெண்டு பேர்தானே அத்திம்பேர்? பஸ்லயே போயிடலாமே? கார் எதுக்கு அனாவசியமா?"

"ஆ? ரெண்டு பேரா? உங்கம்மா, அக்கா எல்லாரும் வந்திருக்காளே— அவாள இப்படியே கும்பேஸ்வரர் சன்னதில வுட்டுப்ட்டு போயிடலாங்கறயா?"

அவுட் சிரிப்பும், வேடிக்கை வார்த்தைளுமாய் சாரங்கன் முடிக்கும் முன் காயத்ரி ஆச்சர்யத்தோடு குறுக்கிட்டாள்.

"எல்லாருமா? எதுக்கு? எங்க இருக்கா இப்போ?"

"அடடா... மூச்சு விடாம எத்தன கேள்வி கேட்பே, காயத்ரி? நா எத்தன நாழி இப்பிடி கார் கதவ தொறந்து வெச்சுண்டு நிக்கறது? இப்போ ஏறி உக்காரப் போறியா இல்லியா? ம்?"

வலிய வரவழைத்துக்கொண்ட செல்லச் சிணுங்கல் சாரங்கனின் குரலில் பரவி இருக்க காயத்ரி புருவங்கள முடிச்சுப் போட்டுக கொள்ள நின்றாள். பிறகு அந்த யோசனை மாறாமலேயே பின்சீட்டில் ஏறி உட்கார்ந்ததும, முன்னால் டிரைவர் பக்கத்தில சாரங்கன் அமர்ந்து கொண்டான். கார் கிளம்பியது.

பின் இருக்கையில், தனக்குப் பக்கத்திலிருந்த புடவைப் பார்ஸலை அப்போதுதான் கவனித்த காயத்ரி, "என்னது இது? புடவையா அத்திம்பேர்?" என்றாள்.

"ம்ம்..."

"ஏது? யார் வாங்கினா? எதுக்காக இங்க வச்சிருக்கா?"

காயத்ரி முன்னால் சாய்ந்து வினவ சாரங்கன் 'ப்ச்' என்று சூள் கொட்டினான்.

"எல்லாத்தையும் இங்கயே வேத்து மனுஷன எதிர்லியே கேட்டாகணுமா? ரூம் போய் சேர்ற வரைக்கும் கூட பொறுமையாக இருக்க முடியாதா?"

"ரூம்லயா? எந்த ரூம்? எனக்கு ஒண்ணுமே புரியலே அத்திம்பேர்... வழக்கமில்லாத வழககமா என்னென்னமோ சொல்றேளே! அம்மா அக்காவெல்லாம் இங்க நிஜமாவே வந்திருக்காளா? எதுக்கு? அப்படி எல்லாம் அம்மாவோ, அக்காவோ ஆத்த விட்டுட்டு ஒட்டு மொத்தமா கிளம்பமாட்டாளே!"—பேசிக்கொண்டே சீட்டின் நுனிக்கு நகர்ந்தவள், "சொல்லுங்கோ அத்திம்பேர்... அம்மா நன்னா இருக்காதானே? எங்கிட்ட சொல்ல வாண்டாம்னு எதையாவது மறைக்கறேளா?" என்றபோது வேண்டாத கற்பனையில் குரல் பிசிரடித்தது.

சாரங்கன் அவளைப் பார்க்க திரும்பி உட்கார்ந்தான். கஷ்டப்பட்டு பொறுமையை வரவழைத்துக் கொண்டு பேசினான்.

"என்ன நீ, சொன்னா நம்பமாட்டேங்கறியே! உங்கம்மா அக்காவெல்லாம் இஞ்ச கும்மோணத்துக்கு



வந்திருக்கா... உங்கம்மாக்கு சத்தியமா ஒரு கேடும் இல்ல... ஒரே சத்தமும் கித்தமுமா ஸ்டேஷனுக்கு வந்து அவஸ்தைப்பட வாண்டாமேனு, இருக்கற நான்தான் அவாள ஒரு ஹோட்டல்ல ரூம் போட்டு தங்க வெச்சிருக்கேன்... போறுமா?"

"அதுசரி அத்திம்பேர், என்னை அழைச்சிண்டு போறத்துக்கா இத்தன பேரும் வந்திருக்கேள்? நா என்ன சின்னக் கொழந்தையா?"

"சின்னக் கொழந்தையாவது? உனக்கே கொழந்தை பொறக்கற வயசாயிடுத்துன்னு எனக்குத் தெரியாதா என்ன?"— கேலியாய் கேட்டு சாரங்கன் பெரிதாய் சிரிக்க, காயத்ரி அந்த பேச்சில் சிரிக்க என்ன இருக்கிறது என்பது போல ஏறிட்டாள்.

"போங்கோ அத்திம்பேர், எதையோ கேட்டா என்னமோ பேசறேள்! அங்க மெட்ராஸ்லேருந்து விழுந்தடிச்சுண்டு ஒடி வந்திருக்கேன், நீங்க என்னடான்னா..."

"சரி... சரி! கோச்சுக்காதே! இன்னிக்கு நீ வரேன்னு தெரிஞ்சதும், உன்னை அழைச்சிண்டு வர நா கும்மோணத்துக்கே கெளம்பினேனா, அப்பிடியே உங்கம்மாவ பெரிய டாக்டரண்ட காட்டலாமேன்னு தோணித்து... எல்லாருமா கெளம்பி வந்துப்டோம்! டாக்டரப் பாத்துட்டு வந்ததும் அவாள ஹோட்டல ரூம்ல எறக்கிப்ட்டு நா மட்டும் ஸ்டேஷனுக்கு வந்தேன்..."

அவன் சமாதானம் திருப்தி அளித்துவிட்ட மாதிரி காயத்ரி மறுபடி சீட்டில் சாய்ந்து உட்கார்ந்தாள். ஆனால், ஒரு நிமிஷம் செல்வதற்குள் திடுமென நினைத்துக்கொண்டு கேட்டாள்—

"டாக்டரப் பாக்க வந்தவா கடைத்தெருக்கெல்லாம் வேற போனேளா என்ன? இப்போ எதுக்கு புடவையும் கிடவையும்? பார்ஸலைப் பாத்தா பட்டுப் புடவை பெட்டிகள் மாதிரின்னா தெரியறது?"

"அ... அதுவந்து பட்டுதான்! பொம்மனாட்டிகள் ஆத்த விட்டு வெளில வந்தா புடவை வாங்காம திரும்பிப் போவாளோ? அதுவும உங்கக்கா... கடைத் தெருவையே கலக்கிப்ட்டுத்தானே வருவா..."

தன் ஜோக்கிற்கு தானே சாரங்கன் சிரித்துக் கொண்டான்.

"அக்காவுக்குத்தான் புத்தியில்லேன்னா நீங்களாவது சொல்லப்படாதோ அத்திம்பேர்? உடம்பு சரியில்லாத அம்மாவையும் வேற இழுத்தடிச்சு இப்போ புடவை வாஙகாட்டாத்தான் என்ன? அதுசரி, அந்தப் பார்சலை ஹோட்டல்லியே வெச்சுப்ட்டு வரக் கூடாதோ? நீங்க எதுக்கு கையிலியே வெச்சுண்டு இருக்கேள்?"

தொடர்ந்து தர்மசங்கட கேள்விகளாகவே காயத்ரி கேட்க, சட்டென்று சாரங்கனின பொறுமை குறைந்தது.

"என்னமோ இந்த பை மட்டும் எங்கிட்டியே தங்கிப் போயிடுத்து... இந்தப் பேச்ச இத்தோட நிறுத்திக் கறியா! சாதாரண பொண்டுகள் மாதிரி நீ கூடவா புடவை நகைனு பேசி பொழுத போக்கணும்! மெட்ராஸ்ல என்ன விசேஷம்?— அஞ்ச பரீட்சைல பதில் ஒழுங்கா எழுதறியோ என்னமோ என்னண்ட வந்து கேள்வி மேல கேள்வியா கேட்டு டபாய்க்கறே... ம்ம்... உனக்கென்னம்மா... மஹாராணி... ஒரு கவலை இல்ல... நா கொடுக்கற எடத்துல படிக்கறேன் பேர்



வழினு ஜாலியா அஞ்ச பொழுத போக்கிண்டு இருக்க... ம்ம்... ஜமாய்" என்று சம்பந்தா சமபந்தம இல்லாமல் எதையோ உளறிக் கொட்டி விட்டு, பேசியது போதும் என்கிற பாவனையில் சாலையைப் பார்க்க திரும்பி உட்கார்ந்து கொண்டான்.

தலைக்கு மேல் இருந்த சின்னக்கண்ணாடியில் காயத்ரியின் பாதி உருவம் தெரிய, முழு உருவத்தையும் பார்த்துவிடும் உத்தேசத்தில் சற்றே நகர்ந்து உட்கார்ந்தவன், தன்னை அவள் கவனித்துவிடாதவாறு ஜாக்கிரதையாக அரைக் கண்ணால் பார்த்தான்.

சில நிமிஷங்களில் ஹோட்டல் வாசலில் கார் நின்றதும், அவசரமாக தான் முதலில் இறங்கி பின் கதவைத் திறந்துவிட்டான்.

மாடிப்படிகளில் ஏறி அறை வாசலை நெருங்கும் வரை, அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடந்தான்.

ராஜசேகரின் கடைச் சிப்பந்தி இவனைக் கண்டதும் எழுந்து நின்றான். "நீ போயிட்டு வாப்பா, நா நாளைக்கு வந்து ராஜசேகரப் பாக்கறேன்..." என்று அவனை அனுப்பிவிட்டு, தன் செய்கைககு விளக்கம் கொடுக்கும் எண்ணத்தில், "பொம்மனாட்டிகளா தனியா இருக்காளேன்னுதான் இவனை சித்த இருந்து பாத்துக்கோன்னு சொன்னேன்..." என்றான காயத்ரியிடம்.

அறைக் கதவைத் தட்டியதும், "யாரு?" என்ற மெல்லிய கேள்வியோடு கதவை லேசாக பாலா திறந்தாள்.

எதிரில் விஷயம் எதுவும் தெரியாமல் அப்பாவியாய் வந்து நிற்கும் தங்கையைக் கண்டதும் துக்கத்தில் முகம்

அஷ்ட கோணலாயிற்று. வெடித்துக் கொண்டு வெளிப்படுவேன் என்று உள்ளுக்குள் அழுகை மிரட்டியது.

ஆனாலும், காயத்ரிக்குப் பின்னால் நின்று உதட்டில் விரலை வைத்து 'எதுவும் பேசாதே— ஒழுங்காக நடந்து கொண்டாயோ, பிழைத்தாய்'— என்கிற உருட்டு விழியும், மிரட்டல் பார்வையுமாய் சாரங்கன் அச்சுறுத்த, ஒரு தினுசாய் உதட்டை கடித்து, எச்சிலை விழுங்கி சமாளிக்கப் பார்த்தாள்.

'வா' என்றுகூட தங்கையை அழைக்கத் தெரியாமல் தலையை சட்டென்று குனிந்து கொண்டு, ஒதுங்கி வழி விட்டாள்.

"என்னக்கா, எப்பிடியிருக்கே? அம்மா எங்க? படுத்துண்டிருக்காளா?"

கேள்விகளோடு உள்ளே நுழைந்து, ஏர்பேகைக் கீழே இறக்கி ஓரமாய் வைத்தவள், பாலாவிடமிருந்து துளிக்கூட சத்தமே வராமல் இருக்க பார்வையை உட்புறமாய் ஓட்டினாள்.

கட்டில் மேல் உட்கார்ந்திருந்த குழந்தைகளும், நாற்காலியில் இருந்த பர்வதமும், சாரங்கனைப் பார்த்து விட்டு எழுந்து நின்றார்கள். எவருமே தன்னிடம் எதுவும் பேசாததும், 'வா...' என்றுகூட சொல்லாததும் காயத்ரிக்கு புதிராய் இருந்தன.

கிட்டத்தில் வந்து அம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டவள், "எப்பிடிம்மா இருக்கே? வலி தேவலாமா? இப்போ மூச்சு விடறது சிரமமாயில்லியே?" என, பர்வதம் என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் விழித்தாள்.

"உனக்கு உடம்பு சரியில்லேன்னு சொன்னதும் பயந்தே போயிட்டேன், தெரியுமோ? நல்லவேளை,



தலைக்கு வந்தது தலைப்பாகையோட போச்சுன்னு இப்பத்தான் நிம்மதியாயிருக்கு! டாக்டர் என்ன சொல்றார், ஈ. ஸி. ஜி. எடுத்துப் பாத்தாரா? எதனால அப்படி திடும்னு வந்துதாம்? மருந்து குடுத்திருக்காரா?"

தொடர்ந்து பர்வதம் விழிக்க, சாரங்கன் சமாளித்தான்.

"அதெல்லாம் நிறைய குடுத்திருக்கார்... பாலா, நீதான் சொல்லேண்டி, வாய்ல என்ன கொழுக்கட்டையா? இனிமே கவலைப்பட ஒண்ணுமில்லேன்னு டாக்டர் சொன்னாரே, அதப்பத்தி காயத்ரிகிட்ட நன்னா சொல்லு! அவ பாவம், மெட்ராஸ்லேருந்து அலறியடிச்சுண்டு வந்திருக்கா..."

'சொல்லு' என்று சொல்லிவிட்டு, பாலா வாயைத் திறக்கும் முன் மறுபடி குறுக்கிட்டான்.

"சரி... சரி... இப்பிடியே பேசிண்டே நின்னா, அப்புறம் ரொம்ப இருட்டிப்போயிடும்... பொழுதோட போய்ச் சேர்ந்து டாக்ஸிய அனுப்பியாகணும்... காயத்ரி, டிபன் காபி ஏதாவது இஞ்சயே சாப்டுட்டேன்னா, ஊருக்குப் போய் ராத்திரி சாப்பாட்டக் கவனிச்சுண்டா போதும்..."

அவள் பதிலுக்குக் காத்திராமல், ஓட்டல் சிப்பந்தியைக் கூப்பிட்டு, டிபன் காபி சொல்லி "அஞ்சு நிமிஷத்துல எல்லாம் வரணும் நாழியாறது..." என்று அவசரப்படுத்தினான்.

ஓட்டல் பையனைக் கூப்பிடவும், டிபன் ஆர்டர் பண்ணவும் எடுத்துக் கொண்ட ஓரிரு நிமிஷங்களில் காயத்ரி அம்மாவோடும் அக்காவோடும் ஒரு பக்கமாய் நின்று வேண்டாத பேச்சு ஏதாவது பேசி விடுவாளோ என்கிற பயம் ஆளை விரட்ட, நொடிக்கொருதரம் 'ஏய்

என்னடி நொன நொனனு பேச்சு... இஞ்ச நா ஒருத்தன் டிபனுக்கு ஆர்டர் குடுக்கிறது புரியாம? வா இஞ்ச...' என்று மனைவியை அதட்டி தன் பக்கத்தில் நிறுத்திக் கொண்டான்.

சாப்பிடுகையில், "காயத்ரி சித்தி, உனக்கு எக்ஸாம் ஆயிடுத்தா? நீ பாஸாயிடுவியா?" என்று இரண்டாவது பெண் புவனா வெகுளியாய் கேட்க, "சும்மார் நீ... களைச்சு வந்துருக்கறவள புடுங்காத..." என்று அதட்டினான் சாரங்கன்.

ரவா தோசையை விண்டு வாயில் போட்டுக் கொண்ட காயத்ரி அவன் அதட்டியது தன்னை அல்ல என்கிற மாதிரி அந்த அதட்டலை லட்சியம் பண்ணாமல் புவனாவின் கேள்விக்கு நீளமாய் பதில் அளித்தாள்.

"எக்ஸாம் எழுதறதா! எங்க? தந்தியக் கண்டதும் மெட்ராஸ்ல எல்லாத்தையும் அப்பிடியே பாதில விட்டுட்டு வந்திருக்கேனாக்கும்! ஹாஸ்டல்ல கூட வார்டன்கிட்ட மட்டும்தான் சொன்னேன், வேற லெக்சரர்ஸ், ஃபிரண்ட்ஸ் யாருகிட்டயும் சொல்ல டயமே இல்லே. சுருக்க திரும்பிப் போயிட்டா தேவலாம். திரும்பி பாத்தா பரீட்சைதான்... படிக்க ஏகத்துக்கு இருக்கு... ஆமாக்கா, அம்மா எப்பிடியிருக்காளோ என்னமோனு நா பதறிண்டுவரேன், நீயானா அம்மாவக் கூட்டிண்டு ஊரச் சுத்திண்டிருக்கியாமே! இந்த அலைச்சல் அலைஞ்சாவது புடவையும் மண்ணாங்கட்டியும் வாங்காட்டா என்ன? தெரியாமத்தான் கேக்கறேன் அப்பிடி என்ன தலைபோற விசேஷம் இப்போ, ம்?"

பேசிக்கொண்டே டிபனைச் சாப்பிட்டவள், இடது கையால் எட்டி படுக்கை மீது சாரங்கன் வைத்திருந்த புடவை பார்சலை எடுத்தாள்.



"சரி போ... வாங்கினதுதான் வாங்கிட்ட... எப்டி இருக்குனு பாத்துடறேன்... யாருக்கு உனக்கு தானே?"

பேசியவாறு பையை மடியில் வைத்து மேலாக இருந்த ஒரு அட்டை டப்பாவை வெளியில் எடுத்து நூலை அவிழ்த்து, மூடியைத் திறந்தாள்.

மயில் கழுத்து நிறத்தில், சிகப்பு பேட்டு பார்டரும், உடம்பு பூராவும் ஜரிகை கொட்டடியாய் புடவை தகதகத்தது.

"அட! என்னக்கா இது, கல்யாணத்துக்கு வாங்கற மாதிரி... வெலை எக்கச்சக்கத்துக்கு இருக்குமே... ஆமா... மூவாயிரத்து நூறு... அடேங்கப்பா... இன்னொரு பொட்டில என்ன? அதுலேயும் இதே மாதிரி கிராண்ட் 'ஸாரி' தானா? ஜமாய்... உனக்கென்னக்கா... பண்ணையார் பொண்டாட்டி... ஆத்துலேயே தினப்படிக்கு பட்டுப்புடவை கட்டிண்டா கூட கேக்கறத்துக்கு யாரு?"- பேசிக்கொண்டே இரண்டாவது பெட்டியை வெளியில் எடுத்தவள், நிமிர்ந்து பாலாவை ஏறிட்டாள்.

"என்னக்கா, நாம்பாட்டுக்குப் பேசிண்டேயிருக்கேன், நீ வாயே திறக்கமாட்டேங்கறியே? அத்திம்பேர் கேட்ட மாதிரி, கொழக்கட்டையா இருக்கு வாயில? புடவையும் நகையும் பத்தி பேச ஆரம்பிச்சா உனக்கு உலகமே தெரியாதுன்னு அத்திம்பேர் சொல்வாரே, இன்னிக்கு என்னாச்சு? நன்னா ஊரச் சுத்தி ரெண்டு புடவை வாங்கினதுல டயர்டாயிட்டியா? எதுக்குமே பதில் சொல்ல மாட்டேங்கறியே?"

"அது... வந்து..." என்று ஏதோ சொல்ல ஆரம்பித்த பாலாவை பேசவிடாமல் சாரங்கன் தலையிட்டான்.

"அவளப் போயி கேக்கறியே காயத்ரி? என்னிக்கு கேட்ட கேள்விக்கு உடனே சமத்தா அவ பதில் சொல்லி இருக்கா? அதவிடு... சீக்கிரமா கௌம்பற வழியப்பாத்தா, மத்தது எல்லாத்தையும் ஊருக்குப் போய் பேசிக்கலாம்..."

பேசியவன் "அந்த புடவைப் பொட்டிகள இப்படி குடு" என்று கை நீட்ட, அந்த உத்தரவுக்கு அடி பணியாமல் இரண்டாவது பெட்டியின் மூடியை காயத்ரி திறந்தாள்.

"இருங்கோ அத்திம்பேர். எதுக்காக இத்தனை அவசரப்படறேள்? ம்? இன்னொண்ணையும் பாத்துட்டு..."

பெட்டியில் இருந்த புடவையில் பார்வை விழுந்ததும் பேச்சு தடைப்பட்டது.

சிகப்பு வர்ணத்தில் ஒன்பது கஜப் புடவை.

காயத்ரி கண்ணகல நிமிர்ந்தாள்.

"கூரைப் புடவை மாதிரின்னா இருக்கு... இது இப்ப எதுக்கு..."

அவளை முடிக்கவிடாமல் சாரங்கன் எட்டி புடவை டப்பாக்களை முரட்டுத்தனமாய் பறித்தான்.

"எல்லாம் ஊருக்குப் போய் பேசிக்கலாம்னு சொல்றது காதுல வாங்காம இது என்ன அடம்? எழுந்துரு காயத்ரி... கையலம்பிண்டு கிளம்பு! ஏண்டி... மூதேவி, உன் படைகள கிளப்பிண்டு புறப்படுனு கரடியா கத்தறது காதுல விழலியா? ஆளாளுக்கு வெத்தல பாக்கு வச்சு உபஜாரம் பண்ணணுமா?"



அடிக்குரலில் சாரங்கன் உறும, பரபரவென்று குழந்தைகள் எழுந்தார்கள். கணவன் அறியாமல் கண்களை பாலா துடைத்துக் கொண்டாள். புருவங்கள் முடிச்சு போட சில நொடிகள் அப்படியே உட்கார்ந்து விட்டு காயத்ரி "அத்திம்பேரோட இந்த கத்தல கேட்டா தான் ஊருக்கு வந்த மாதிரி இருக்கும்மா" என்று கூறி சிரித்து நிலைமையின் இறுக்கத்தை குறைக்க முனைந்தாள்.

சில நிமிஷங்களில் எல்லாருமாய் கிளம்ப, அறையைப் பூட்டிக்கொண்டு படியிறங்கிக் கீழே வந்தார்கள்.

ரிசப்ஷன் கவுண்டருக்கு அருகில் சென்று, தன் அருகிலேயே எல்லாரையும் நிற்கச் சொல்லி, அறை வாடகையைக் கொடுத்து விட்டு, வாசலுக்கு வந்து, "ம்... ஆகட்டும்... சீக்கிரமா வண்டில ஏறுங்கோ..." என்று விரட்டினான் சாரங்கன்.

முன்சீட்டில், கடைசி இரண்டு பெண்களையும் மாமியாரையும் ஏற்றி விட்டவன், பின்சீட்டின் இடது ஓரத்தில் தான் உட்கார்ந்து, பக்கத்தில் அபிராமி, பாலா, காயத்ரியை அமரச் செய்தான்.

ஒருக்களித்து உட்கார்ந்து கொண்டபோது, காருக்குள் இருந்த அனைவரும் தன் பார்வையில் விழுவதை திருப்தியோடு பார்த்துவிட்டு, காரைக் கிளப்பச் சொன்னான்.

புறப்பட்ட இரண்டு நிமிஷத்துக்கெல்லாம், "என்னக்கா..." என்று காயத்ரி ஏதோ பேச ஆரம்பிக்க, "எல்லாத்தையும் ஊருக்குப் போய் பேசிக்கலாமே காயத்ரி? கார்த்தாலேருந்து அலைஞ்சதுல எனக்குத் தலைவலி தாங்க முடியல... சித்த பேசாம வந்தேன்னா

தலைவேதனை இல்லாம இருக்கும்...'' என்று தடுத்து நிறுத்தினான்.

கொஞ்ச நேரம் பேசாமல் அக்காவையும், மற்றவர்களையும் மாறி மாறி பார்த்தபடி வந்த காயத்ரி, வரிசையாய் கடைகள் இருந்த தெருவில் கார் நுழைந்ததும் நினைத்துக் கொண்ட மாதிரி கையை உதறி "அத்திம்பேர்... காரக் கொஞ்சம் நிறுத்தச் சொல்லுங்கோளேன்...'' என்றாள்.

"ஏன்? எதுக்கு இப்போ நிறுத்தணும்?''

"ஒண்ணுமில்லே அத்திம்பேர்... எனக்கு ஒரு போன் பண்ணணும்... போன் இருக்கற கடையா பாத்து நிறுத்தச சொல்லுங்கோளேன் ப்ளீஸ்...''

சாரங்கன் திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

"போனா? யாருக்கு?''

"என் ஃப்ரெண்டு கௌசல்யாவுக்குதான்... 'ஒவ்வொரு தரம் இங்க கும்மோணத்துக்கு வரும்போதும் என்னைப் பாக்காமலே போயிடறியே... நீ எப்போ வருவேன்னு தெரிஞ்சா நானாவது இஞ்சிக்குடிக்கு வந்து உன்னப் பாக்கறேனே... மெட்ராஸ்க்குப் போனதும் பழைய சினேகிதத்த மறந்துட்டியா?'னு லெட்டர் மேல லெட்டரா போட்டுண்டிருக்கா! எப்பவும் ஸ்டேஷன்லேர்ந்து நேரா பஸ்ல போயிடுவேன், இந்தத் தரம்தான் இவ்வளவு நேரம் இருக்கேன்...அதான் அவளுக்கு போன் பண்ணி நா வந்திருக்கேன்னு சொல்லிட்டா தேவலாம்... ஹோட்டலேந்தே பண்ணியிருக்கணும்— எல்லாரையும் பாத்த குஷில மறந்திட்டேன். நேரா பாக்காட்டாலும் ரெண்டு வார்த்தை போன்லியாவது பேசிட்டா ரொம்ப சந்தோஷப்படுவா... ப்ளீஸ்... அத்திம்பேர்...''



காயத்ரி நிறுத்தச் சொன்னதுமே தெருவோரமாக காரை டிரைவர் நிறுத்தியிருக்க, போனும் வேண்டாம் மண்ணும் வேண்டாம் என்று மறுக்க நினைத்த சாரங்கன் ஒரே நொடியில் எண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

விட்டுப் பிடித்தால்தான், கிராமத்துக்குப் போகிற வரை தொந்தரவு எதுவும் இல்லாமல, அனாவசிய கேள்விகளும் மழுப்பல்களும் இல்லாமல் நிம்மதியாய போய்ச்சேர முடியும்.

"சரி... சரி... போய் பேசிட்டு சுருக்க வந்துடு... இதோ, இந்த ஸ்டுடியோவுல போன் வெச்சிருக்கான் பாரு... பேசிட்டு ரெண்டே நிமிஷத்துல திரும்பி வந்துடு... ரொம்ப நாழி வெயிட் பண்ணிண்டிருக்க முடியாது...''

ஸ்டுடியோ முன் அறையில் மேஜைமேல் போன் இருக்க, காயத்ரி நம்பரைச் சுழற்றுவதையும் தொடர்ந்து பேசுவதையும் நன்றாகக் கண்காணிக்க முடிந்தது.

திரும்பி வந்து அவள் காருக்குள் ஏறிக்கொண்டதும், கார் மறுபடி கிளம்பியது.

"கடையிலேர்ந்து போன் பேசினா, அடக்க, ஒடுக்கமா நடந்துக்க வாண்டாமா? என்னத்துக்கு அப்பிடி சிரிச்சு சிரிச்சுப் பேசினே?''

காயத்ரி சிரிப்பு மாறாமல், "எத்தன நாளுக்கப்பறம் பேசறோம்? ஃப்ரெண்ட்ஸ்னா வேற எப்டி பேசுவாளாம்?'' என, "ம்ம்... இனிமே வண்டி எங்கியும் நிக்கப்படாது... நைநைனு பேசாம இரு...'' என்று சாரங்கன் எரிந்து விழுந்தான்.

இஞ்சிக்குடிக்குப் போய்ச்சேருகிற முக்கால் மணி நேரமும் யாரும் எதுவும் பேசாமல் வந்தார்கள். முன்

சீட்டில் புவனாவும், சின்னதும் தூக்கத்தில் ஆடி ஆடி டிரைவர் மேல் விழுந்தன.

வலது பக்கம் தெரிந்த வயல்களையும், தோப்புகளையும், அவ்வப்போது குறுக்கிட்ட சில ஊர்களின் பஸ் ஸ்டாண்டுகளையும் வேடிக்கை பார்த்த மாதிரியான பாவனையுடன் காயத்ரி வந்தாலும் ஊன்றிப் பார்க்கும் போது அவள் ஏதோ யோசிப்பது புரிந்தது.

ஊருக்குள் கார் நுழைகையில் நன்றாக இருட்டி விட்டது.

வீட்டு வாசலில் காரை நிறுத்தி, எல்லாரும் இறங்கினதும் பேசின பணத்தைக் கொடுத்து காரை அனுப்பி விட்டு, "இஞ்ச வாசலிலியே பொம்மை மாதிரி அலங்காரமா நிக்காம உள்ள போய்த் தொலைங்கோ... 'காயத்ரியா வந்திருக்கா ?'னு வம்புக்கு அலைஞ்சிண்டு யாராவது வரதுக்குள்ள கதவச் சாத்தி தாப்பாள் போட்டுடணும்... காயத்ரி, உனக்கும்தான் சொல்றேன்... சினேகிதியப் பாக்கறேன், அவளப் பாக்கறேன், இவளோட பேசறேன்னு சவாரி கௌம்பிடாத... எல்லாம் நாளைக்குப் பாத்துக்கலாம்... தெரிஞ்சுதா ?" என்று உத்தரவிட்டவன்,

அவர்கள் வீட்டுக்குள் நுழைந்ததும் தானும் பின்னோடு நுழைந்து கதவைச் சாத்தி தாழ்ப்பாள் போட்டான்.

கூடத்து நாற்காலியில் சாய்ந்துகொண்டு, "காயத்ரி போய் மூஞ்சி அலம்பிண்டு பளிச்சுன்னு வந்து உக்காரு பாக்கலாம்..." என்றவன், "இந்தாடி அழுது வடிஞ்சுண்டு நிக்காம போய் நல்லதா காபி போட்டு எனக்கும், காயத்ரிக்கும் எடுத்துண்டு வா... பாவம்... அவ களைச்சுப் போயிருப்பா..." என்று உத்தரவிட்டான்.



கிணற்றடிக்குப் போய்விட்டு மறுபடி கூடத்துக்குள் காயத்ரி நுழைந்தபோது அவள் பின்னோடு ஒட்டிய வால் மாதிரி அபிராமி, புவனா, லதா தொடர்ந்து வந்தார்கள்.

"இஞ்ச பெரியவா பேசற எடத்துல உங்களுக்கு என்னடி வேலை ? எல்லாம் ரெண்டாங்கட்டுல போய் புஸ்தகத்த எடுத்து வெச்சுண்டு படிங்கோ... ராத்திரி சாப்பாட்டுக்கு கூப்படறப்போ வந்தா போதும்... அது வரைக்கும் யார் தலையாவது தெரிஞ்சுது, கொன்னுப்புடுவேன்..."

அப்பாவின் உறுமலுக்கு அடிபணிந்து பெண்கள் இரண்டாம் கட்டுக்குப் போக, காபி டம்ளரை அவன் முன் வைத்துவிட்டு ஓரமாய் நின்றாள் பாலா.

சமையலறை வாசற்படி அருகில் பர்வதம்...

முற்றத்தில் காலைத் தொங்க விட்டவாறு தரையில் காயத்ரி...

சூடாக காபியை குடித்தவன் கைகளைத் தலைக்கு மேல் தூக்கி ஒருதரம் சோம்பல் முறித்தான்.

'ம்' என்று அடிவயிற்றிலிருந்து ஆரம்பித்து நீளமாய் ஒலி எழுப்பினான்.

பின், காயத்ரியைப் பார்த்து நக்கலாகச் சிரித்தான்.

"ம்ம்... அம்மாவப் பாக்கணும்னு மெட்ராஸ்லேருந்து வந்திருக்கியாக்கும் ! பாத்தாச்சோன்னோ ? மேல என்ன பண்ணப் போறதா உத்தேசம் ?"

அந்த கேள்வியில் தொக்கியிருந்த கிண்டலை புரிந்து கொள்ள முடிய காயத்ரி புருவத்தை உயர்த்தினாள்.

"சுருக்கப் போயிட்டா தேவலைதான்... நிறைய 'அஸைன்மெண்ட்ஸ்' முடிக்காம வெச்சுட்டு வந்துட்டேன்..."

"அதுக்காக காலல வென்னீர கொட்டிண்டு ஓடணுமா, என்ன? முடிச்சு என்ன கிழிக்கப்போறே? என்ன பாலா, நா சொல்றது சரிதானே?"

ஒன்றும் புரிபடாமல் பேசியதும் அல்லாமல் அதிசயமாய் மனைவியை வேறு ஸப்போர்ட்டுக்கு சாரங்கன் அழைக்க, காயத்ரி அவசரமாய் அக்காவை ஏறிட்டாள்.

"அவள என்ன பார்வை! புரியலைனா என்ன கேளேன்— புரியும்படி சொல்லிட்டுப் போறேன்... ஆமா, ஊருக்கு மறுபடி நீ போய் என்னத்த சாதிக்கப் போறேனுதான கேட்டேன்... மறுபடி பட்டணத்துக்கு போ வாண்டாம, இஞ்சயே இருந்துருனு சொல்ல வரேன்... இப்ப புரியறதோன்னோ?"

காயத்ரியின் முகத்தில் குழப்பக்கோடுகள் தெரிந்தன.

"ஏன் அத்திம்பேர்? ஏன் போ வாண்டாம்?"

"ஏன்னு என்ன கேழ்வி! வாண்டான்னா வாண்டாந்தான்! ஹாஸ்டலுக்கு லெட்டர் எழுதி, நீ விட்டுட்டு வந்திருக்கற சாமான்கள மட்டும் மூட்டை கட்டி அனுப்பச் சொல்லு."

காயத்ரி சரக்கென்று எழுந்து நின்றாள்.

"எ... என்ன அத்திம்பேர் இது? இதானே கடைசி வருஷம, எப்படா பரீட்சை முடிஞ்சு 'எம். ஏ'னு ஒண்ணு வாங்குவோம்னு நானே தவிச்சுண்டு இருக்கேன்... இப்பபோய் நிறுத்தறதாவது? ஜோக பண்றேளா அத்திம்பேர்?"



சாரங்கன், பாலாவின் பக்கம் திரும்பினான்.

"ஜோக் பண்றேனாம், காயத்ரி சொல்றா! கேட்டியாடி? நீ கொஞ்சம் அவளுக்குப் புரிய வை, பாக்கலாம்..."

அதுவரை வெறும் தலையாட்டி பொம்மை மாதிரி நின்றிருந்த பாலா கண்கள் கலங்க பரிதாபமாய் விழித்தாள்.

"நா... நானா? நா... என்னன்னா சொல்றது..."

"எதையாவது சொல்லு! இஞ்ச நின்னுண்டு சும்மா வேடிக்கை பாக்கவா உன்னக் கூப்டேன்? சொல்லு... ரெண்டு நாளா நா சொன்னதெல்லாம் காயத்ரிக்கும் கொஞ்சம் புரிய வை... ம், ஆரம்பி..."

அவன் கட்டளையிட்ட பிறகும்கூட பாலா கையைப் பிசைந்துகொண்டு நிற்க, சாரங்கன் திடுமென குரல் த்வனியை மாற்றிக் கொண்டான்.

தழைத்துபோய் பரிதாபமாய் ஒலித்தது அவன் பேச்சு.

"பாரு காயத்ரி, நா இப்பிடித்தான் எல்லாத்துக்கும் இவகிட்ட மன்னாடிண்டு நிக்க வேண்டியிருக்கு... எம்பாட்டுக்கு திருச்சில நல்ல வேலைல ராஜா மாதிரி இருந்துண்டு இருந்தவனை மெனக்கெட்டு கூப்ட்டு இவ கழுத்துல தாலியக் கட்ட வெச்சு, இஞ்ச கிராமாந்தரத்துல கொண்டு தள்ளிப்டார் உங்கப்பா... சரி, எல்லாம் நம்ப ப்ராப்த கர்மானு நானும் பொறுமையாத்தான்

இருக்கேன்... இப்ப வாழ்க்கை போனதுமில்லாம, என் வம்சமே தீஞ்சு போயிடுத்து! காரைக்குடி டப்பா மாதிரி இவளும் வரிசையா பொம்மனாட்டிக் கொழந்தையாவே பெத்துண்டிருக்கா... ஒவ்வொரு தரமும் ஏமாந்துபோய் எனக்கும் அலுத்துப் போச்சு... அதனால..."

சில வினாடிகளுக்கு நிறுத்திவிட்டு சாரங்கன் தொடர்ந்தான்.

"அதனால... காயத்ரி... என்னப்பத்தி உனக்கு நன்னாத் தெரியும், நீ படிச்சவ... புத்திசாலி... என்ன நன்னா புரிஞ்சிப்பே... உனக்கு நா ஜாஸ்தி விவரமா சொல்ல வாண்டாம்... வந்து... நா உன்னை... கல்யாணம் செ... செஞ்சுக்கலாம்னு முடிவு ப..."

மார்பில் கைகளைக் கட்டியபடி நின்று, நேருக்கு நேர் சாரங்கனைப் பார்த்துக் கொண்டிருந்த காயத்ரி, அதிர்ந்து கத்தினாள்.

"எ... என்ன... என்ன சொல்றேள் அத்திம்பேர்?"

"ஆமா காயத்ரி... உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறதா முடிவு பண்ணி, இப்போ அதுக்குதான் உன்னை இஞ்ச வரவழைச்சேன்! உங்கம்மாவுக்கு உடம்பும் இல்லே, கிடம்பும் இல்லே!"

காயத்ரி செயலிழந்து நின்றதை பொருட்படுத்தாமல் சாரங்கன் குழைவுடன் பேசினான்.

"நீ இதுக்கு நிச்சயமா ஒத்துப்பேன்னு எனக்குத் தெரியும்... அதனாலதான் எல்லா ஏற்பாட்டையும் பண்ணிப்ட்டு உனக்குத் தந்தி குடுத்தேன்! வர்ற



திங்கக்கிழமை காத்தால இஞ்ச ஆத்துலியே கல்யாணம். அப்பறம்..."

குறுக்கே கையை நீட்டி, "நிறுத்துங்கோ அத்திம்பேர்..." என்று கூவிய காயத்ரி, "இதெல்லாம் என்ன பேச்சு அத்திம்பேர்? என்னாச்சு உங்களுக்கு? ஏன் இப்பிடி 'ஸில்லியா பிஹேவ்' பண்றேள்?" என, சாரங்கன் அசடு வழிய இளித்தான்.

"ஸில்லிதான்... யாரண்ட அப்டி நடந்துக்கறேன்? உன்கிட்டதானே! பரவாயில்ல..."

"அத்திம்பேர்..." காயத்ரி அதட்ட, விளையாட்டுப் பேச்சு போதும் என்கிற மாதிரி சாரங்கன் எழுந்து நின்றான்.

"ஆங்? இந்த 'அத்திம்பேர்'னு கூப்படறத மொதல்ல நிறுத்து! கேக்க சகிக்கல்லே. சமத்தா சொல்றது நல்லதுக்குதான்னு புரிஞ்சுண்டு கடந்துக்கோ— வீணா என்ன கத்த வைக்காத... எனக்கு நிறைய வேலையிருக்கு! கணக்கு வழக்கெல்லாம் பாத்து ரெண்டு நாள் ஆச்சு!"

பேசிக்கொண்டே மேஜை அருகே வந்து, ஏதோ ஒரு நோட்டுப் புத்தகத்தைப் பிரித்து வைத்துக்கொண்டு, பேனா மூடியைக் கழற்றியவனை காயத்ரி தீர்க்கமாகப் பார்த்தாள்.

பல்லைக் கடித்து சில கணங்களில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவள், சாரங்கனின் நாற்காலியில் அழுத்தமாக உட்கார்ந்துகொண்டு நிதானமாக அலட்சிய சிரிப்புடன் பேச ஆரம்பித்தாள்.

"ஏன் அத்திம்பேர், இவ்வளவு ஏற்பாடு பண்ணியிருக்கேளே, என்னை ஒரு வார்த்தை கேக்கணும்னு உங்களுக்குத் தோணலையா? நா சந்தோஷமா 'சரிம்பேன்னு நீங்க எதிர்பார்த்தேளா?"

"எதிர்பார்த்தா தப்பா என்ன?" என்னைவிட நல்ல மாப்பிளை உனக்குக் கிடைச்சிடுவானா?" என்று கோபமாக ஆரம்பித்த சாரங்கன், திடுமென விகாரமாகச் சிரித்தான்.

"என்னைக் கல்யாணம் பண்ணிக்க உனக்கு இஷ்டம்தான்னு எனக்கு தெரியும் காயத்ரி... சினிமால வர்ற பண்ணையார் மாதிரி நா இருக்கேன்னு நீயே சொல்லியிருக்கியே !, மறந்து போச்சா?"

காயத்ரி உதட்டைச் சுழித்து சிரிப்பை உதிர்த்தாள்.

"ஆள், அம்புனு எல்லார் கண்ணுலியும் நீங்க விரலைவிட்டு ஆட்டி வேலை வாங்கற தோரணையப் பாத்து அப்பிடிச் சொன்னேன்... பார்க்கப் போனா, அது உங்களைக் கிண்டல் பண்றதுக்காகச் சொன்ன வார்த்தை! அதப் போயி நெஜம்னு நம்பி..."

அதுவரை இருந்த பொறுமை அவளது கேள்வியில் கரைந்துபோக, சாரங்கன் ஆத்திரத்தோடு கத்தினான்.

"போதும். நிறுத்து! இப்போ உன்கிட்ட வியாக்யானம் கேக்க எனக்கு அவகாசம் இல்லே... அதனால பேசறத நிறுத்திப்பிட்டு வேலையப்பாரு..."

காயத்ரி எழுந்து பாலாவின் பக்கத்தில் சென்றாள்.



"என்னைத்தான் எதுவும் கேக்கலே... உன்னையாவது கேட்டாரா அக்கா? உன் சம்மதத்தோடதான் இவ்வளவும் நடக்கறதா?"

பதில் பேசாமல் பாலா விம்மத் தொடங்க காயத்ரி எதிர்வாயாடுவது தந்த துணிச்சலில் பர்வதம் இருந்த இடத்திலிருந்தே குரல் கொடுத்தாள்.

"யாரைடி அவர் கேட்டார்? ஒருத்தரையும் கேக்கல்லே... எங்களப் பேசக்கூட விடல்லியே..... தலைல நெருப்ப அள்ளிக் கொட்டற மாதிரி காரியமெல்லாம் நடக்கறதுடி காயத்ரி..."

நிதானமாய் ஆரம்பித்து விபரீதமாய் போய்க் கொண்டிருப்பதை உணர்ந்து, சாரங்கன் இரைந்தான்.

"நிறுத்துங்கோ எல்லாரும்... யாரையும் எதுவும் கேக்கணும்னு எனக்கு எந்த முடையும் இல்லே...... நா சொன்னா சொன்னதுதான்... இனிமேயும் விடாம பேசினேள்னா..."

"அத்திம்பேர், கத்தாதீங்கோ... இதுவரைக்கும் சொல்லாட்டா பரவாயில்லே... இனிமேயாவது சொல்லுங்கோ... எதுக்கு இப்போ திடீர்னு இப்பிடி ஒரு அவசரக் கல்யாணம்?"

"அதான் சொன்னேனே... என் வம்சம் விருத்தியாக எனக்கு ஒரு புள்ளைக் கொழந்தை வேணும்! அதை இப்போ பெத்துக்காம, கிழவனா ஆனப்பறமா செய்யறது?"

"உங்களுக்கு பிள்ளை வேணும்னா அதுக்கு ஏன் என்னை பலியாக்க தீர்மானம் பண்ணினேள்?"

"பின்னே? வீட்டுக்குள்ளியே பொண்ணை வெச்சுண்டு வெளில போய் கேட்டா, எல்லாரும் வழிச்சுண்டு சிரிப்பான்கள்!"

"இப்போ எனக்குக்கூட சிரிப்பாத்தான் இருக்கு அத்திம்பேர், உங்க பிளானை புரிஞ்சிக்க முடியாத அளவுக்கு மக்குனு என்னை நினைச்சுட்டேளேனு! என்னைப் பண்ணிண்டா, எனக்குனு எங்கப்பா வெச்சிருக்கற அத்தனை சொத்தையும் சேத்து அநுபவிக்கலாமேங்கறதுதானே உங்க திட்டம்! அதானே? சரி, அதவிடுங்கோ... என்ன காரணம் சொன்னேள்? பிள்ளை குழந்தை வேணும்னுதானே! எனக்கு ஒரு சந்தேகம் அத்திம்பேர், என்னைக் கல்யாணம் பண்ணிண்டுட்டா, எனக்கு மட்டும் ஆம்புளைக் கொழந்தை பொறக்கும்னு என்ன நிச்சியம்? எந்த டாக்டராவது உங்களுக்கு சத்தியம் பண்ணிக் குடுத்திருக்காரா? ம்?"

சாரங்கன் பதில் பேசாமல் முகத்தைத் திருப்பிக் கொள்ள காயத்ரி இடுப்பில் கையை வைத்துக்கொண்டு அழுத்தம் திருத்தமாகப் பேசினாள்.

"உங்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ, இருந்தாலும் நா சொல்றேன் கேட்டுக்கோங்கோ... குழந்தை பெத்து தர்ற சக்தி இருக்கற பெண்ணுக்கு, அது ஆணா, பெண்ணானு தீர்மானம் பண்ணற 'பவர்' இல்ல... அதாவது குழந்தையோட 'செக்ஸ்' இன்னதுனு முடிவு செய்யற சக்தி அவகிட்ட இல்ல... சரியான க்ரோமோஸோம்ஸ்களை தந்து ஒரு குழந்தைய ஆணாவோ, பெண்ணாவோ ஆக்கறது கணவரோட ஜீன்ஸ்ல— ஜீவ அணுக்கள்ல— இருக்கற சமாசாரம்.



புரியறதா? அக்கா பொண்களா பெத்து போட்டிருக்கான்னா, அது அவ தப்பு இல்லை... நீங்க அவளுக்கு கொடுத்த க்ரோமோஸோம்ஸ் பெண்களை உற்பத்தி பண்ணக்கூடியதா இருந்ததுதான் காரணம்! அதனால, அந்த குறை உங்ககிட்ட இருக்கற வரைக்கும் நீங்க எத்தனை பொண்களை கல்யாணம் பண்ணிண்டாலும், அத்தனைபேருக்கும் பொட்டை குட்டிகளாத்தான் பொறக்கும், புரியறதா? இது அந்தக் காலம் இல்லை... பொண்களை குத்தம் சொல்லிட்டு, புருஷன்களெல்லாம் கையைத்தட்டிண்டு பொறுப்பில்லாம திரிகறத்துக்கு! காலம் மாறிடுத்து... நாங்கள்ளாம் படிச்சு, உண்மைய புரிஞ்சுக்க ஆரம்பிச்சாச்சு... இனியும் பழைய மிரட்டல் எல்லாம் வாண்டாம்.. ஆமா, சொல்லிட்டேன்......"

நீளமாகப் பேசியவள் பாலாவின் பக்கம் திரும்பினாள்.

"இதெல்லாம் உனக்குத் தெரியாட்டாலும், அத்திம்பேர் செய்ய நெனைச்சது தப்புனு அவருக்கு புரியவச்சு அவர் ஆசைய முளையிலேயே கிள்ளி எறிஞ்சிருக்க வாண்டாமா நீ? அழுதுண்டு நின்னா ஆச்சா? இவ்வளவு கோழையா நீ இருப்பேனு சத்தியமா நா எதிர்பார்க்கலைக்கா!"

விசிப்பு சற்றும் நிற்காமல் பாலா முதல் முறையாக வாயைத் திறந்து கெஞ்சினாள்.

"பூரா விஷயத்தயும் புரிஞ்சுக்காம எதையாவது பேசாதேடீ காயத்ரி! அப்பறம் எல்லாருமா ஒரேயடியா அழிஞ்சிப் போறதுக்கா? அவர்கிட்ட எதுத்து வாயாடாம இருடீ... தயவு பண்ணி..."

காயத்ரியின் முகத்தில் ரௌத்ரம் கொப்பளித்தது.

"என்ன பேச்சு பேசறேக்கா? இந்த மாதிரி மூளை கெட்டத்தனமா பேசிப்பேசியே விஷயத்த வளர விட்டுப்டியே! இப்பிடி புழு மாதிரி நெளியறத விட்டுட்டு ஒரு நிமிஷம் நிதானமா யோசிச்சுப் பாரு... புழியப்புழிய அழுதுண்டு இப்பிடி மூலைல நிக்க உனக்கு வெக்கமா இல்லே?"

சாரங்கன் ஒரே தாவலில் அருகில் வந்து அவள் தோளை முரட்டுத்தனமாய் பிடித்தான்.

"நிறுத்துடீ! நானும் பாத்துண்டேயிருக்கேன், எனக்குத்தான் பேசத் தெரியும்னு மேம்மேல வாயாடிண்டு நிக்கறியே! இஞ்ச பார், எம்முடிவு தீர் மானமா ஒண்ணேதான்! நீ எத்தனை பேசினாலும் நா மாத்திக்கப் போறதில்லே! மரியாதையா வாய மூடிண்டு கழுத்த நீட்டு!"

காயத்ரி தைரியமாய் நிமிர்ந்தாள். அவன் பிடியை உதறி கையைத் தட்டி விட்டாள். சற்றும் நகராமல் இருந்த இடத்திலேயே அழுத்தமாக நின்று, "உங்களுக்குக் கழுத்த நீட்ட என்னால முடியாதுன்னு சொன்னா, என்ன பண்ணுவேள் அத்திம்பேர்?" என்றாள்.

"முடியும் முடியாதுன்னு பேச உனக்கு உரிமையே இல்லே... இன்னும் ரெண்டே நாள்ல கல்யாணம, உன்னால என்ன முடியும்?"

"ஏன் முடியாது? என்னை மீறிண்டு என் கழுத்துல உங்களால கை வைக்க முடியாது



அத்திம்பேர்... இந்த ஊர்ல அத்தனைப் பேர் ஆத்துலியும் எங்கப்பா ஏத்தி வெச்ச வௌக்குதான் இருக்கு! எங்கக்காவுக்கோ எனக்கோ ஒரு அநியாயம்னா, ஊர் கூடி பொங்கி எழும், நிச்சயம்! என் கையக் கட்டிப் போட்டுட்டு நீங்க தாலி கட்டினா, தடுத்து நிறுத்த ஒருத்தர் கூடவா வராம போயிடுவா?"

"தெரிஞ்சாத்தானே வருவா? இப்பக்கூட, ஒரு மஞ்சக் கயித்த எடுத்து உங்கழுத்துல கட்டிப்டேன்னா என்னடீ செய்வே?"

காயத்ரி தோள்களை முறுக்கி, கண்கள் சிவக்க விழித்தாள்.

"என்ன செய்வேன்னா கேக்கறேள்? நீங்க கட்டின மறு நிமிஷமே அத அறுத்து எறிவேன்! சினிமாக் கதாநாயகி மாதிரி, தாலி கட்டின உடனே வில்லனைக் கூட தெய்வமா பூஜை பண்ணுவேன்னு நினைச்சேளா? இப்போ கட்டினாலும் சரி, ரெண்டு நாள் ரூம்ல பூட்டி கீட்டி வெச்சு திங்கக்கிழமை கட்டினாலும் சரி, மொத காரியமா அதக் கழட்டி வீசிடுவேன்! ரூம்ல அடைச்சு வெக்கற அளவுக்கு அநாகரீகமா நீங்க நடந்துக்க மாட்டேள்னு நம்பறேன் அத்திம்பேர்! அப்பிடியே நீங்க என்னை அடைச்சாலும், இன்னிக்கு ராத்திரிக்குள்ள வெளியே வந்துட என்னால முடியும்! என் ஃப்ரெண்டு கௌசல்யாவோட அப்பா ஆள்களோட வந்து என்னைக் காப்பாத்திடுவார் தெரியுமா?"

"எ... என்... என்னது? என்னடீ உளர்றே? யாரு வருவாங்கறே?"

"உள்றலே அத்திம்பேர்! நெஜமாத்தான் சொல்றேன். கும்மோணத்துல கடைலேந்து போன் பண்ணினேனே, அந்தக் கௌசல்யாவோட அப்பாதான்! அவர் யார் தெரியுமா? ரிடயர்ட் போலீஸ் ஆபீஸர்... மறந்துட்டேளா? நீங்க ஸ்டேஷனுக்கு வந்ததும், கார்ல ஹோட்டலுக்கு அழைச்சிண்டு போனதும், அங்க அக்காவையோ அம்மாவையோ பேசவிடாம செஞ்சதும், இடைல அக்கா சொன்ன ஒரு வார்த்தையும், கூரைப்புடவையும் எனக்கு ரொம்ப விசித்திரமா பட்டது! என்னமோ சரியில்லே ஏதோ தாறுமாறா நடக்கப் போறதுனு என் மனசுக்குப் பட்டது! அதான் கௌசல்யாவாத்துக்கு போன் பண்ணினேன்... அவ அப்பாவே போன் எடுத்தார். ஒரு நிமிஷம் தயங்கினேன், சந்தேகம்தானே— அவசரப்பட்டுச் சொல்லலாமா கூடாதானு... அப்புறம் மனமளனு என்ன உறுத்தின விஷயங்களச் சொல்லிட்டு, "காரணம் புரியாம பயமா இருக்கு மாமா... ஏதோ விபரீதம் நடக்க போறது போல உறுத்தறது"னு சொன்னேன், "எதுக்கும் நீ பயப்படாத; அந்தப் பக்கம் வரவேண்டிய வேலை இருக்கு... வேலைய முடிச்சுண்டு ராத்திரி உங்காத்துக்கும் ஒரு நடை வந்து நானே சாரங்கனோட பேசிப் பாக்கறேன்"னு மாமா ஆறுதல் சொன்னார். உங்களுக்கு எந்த சந்தேகமும் வராம இருக்கத்தான் போன்ல அப்பிடி சிரிச்சுச் சிரிச்சுப் பேசற மாதிரி நடிச்சேன்... அவாத்துல கார் இருக்கு... எப்பிடியும் ராத்திரிக்குள்ள மாமா கட்டாயம் வந்திடுவார். இப்போ என்ன அத்திம்பேர் பண்ணுவேள்?"

யாரிடமிருந்து அதிகமாக எதிர்ப்பு இருக்காது, எவளை சமாளிப்பது மிக எளிது என்று நினைத்திருந்



தானோ, அது சரிந்துபோய் விஷயம் கோணல்மாணலாகப் போக, சாரங்கனின் ஆத்திரம் கட்டுக்கடங்காமல் போயிற்று.

மறுபடி காயத்ரியைத் தோளில் கை வைத்து முரட்டுத்தனமாய் திருப்பியவன் வலது புறங்கையால் அவள் கன்னத்தில் பட்டென்று அறைந்தான்.

"இப்பிடியெல்லாம் வீறாப்பா பேசிட்டா ஆச்சா? எவன் வேணாலும் இஞ்ச வரட்டும்... கல்யாணத்த நிறுத்தட்டும்... ஆனா, அது ஒண்ணப் பண்ணிட்டா மட்டும் போதுமா? நாளைக்கு நீ மேல படிக்கறதையோ, வேற எவனோடயாவது வாழறதையோ நடக்காமப் பண்ண என்னால முடியும்! அப்போ யாரு வருவா உன் உத்தாசைக்கு? ஹூம்? ஆத்துக்கு மூத்த மாப்பிள்ளை நா... என் தயவு இல்லாம இஞ்ச என்ன எழவு நடக்கறதுன்னு பாத்துடறேன்! உங்கக்காவையும் அவ பெத்த கழிசடைகளையும் தெருவுல நிக்க வெச்சுப்புடறேன்! அப்போ எவன் வரான்னு பாக்கலாம்..."

ஆவேசமாய் பேசினவனை, நிதானமிழக்காமல் பார்த்தாள் காயத்ரி.

"வீணா கத்தாதீங்கோ அத்திம்பேர்... உங்களால இது எதுவுமே செய்ய முடியாது! எங்கக்காவ தெருவுல நிறுத்த நீங்க யாரு? சொல்ல வாண்டாம்னு பாத்தா, ஓட, ஓட வெரட்றேளே! இந்த வீடு, வாசல், நெலம், நீச்சுன்னு ஒவ்வொரு குந்து மணியும் எங்கப்பா எங்களுக்காக வெச்சுட்டுப் போனது ஞாபகம் இருக்கா, இல்ல மறந்துடுத்தா? இதுல உங்க விரல்கூட படவிடாம

கோர்ட் மூலமா தொரத்தியடிக்க என்னால முடியும் அத்திம்பேர்... நியாயம் எங்க பக்கம் இருக்கறதால கோர்ட்டுல ரொம்ப சுளுவா எங்களுக்கு சாதகமா தீர்ப்பாயிடும். அப்புறம் உங்களுக்குனு காலணா இருக்காது... பைசா பெறாத உங்களை அப்பறம் யாரு சீண்டுவா? ஒரு வேளை, ஏதாவது தகிடுதத்தம் பண்ணி எல்லா சொத்தையும் அபகரிக்க ஏதாவது கீழ்த்தரமான முயற்சில நீங்க எறங்க பாத்தேள்னாலும்— கவலையில்லே... நா படிச்ச படிப்புக்கு நிச்சயமா ஏதாவது வேலை கிடைக்கும்... அத வெச்சு அம்மாவையும், எங்கக்காவையும் அவ கொழந்தைகளையும் மானமா, கண்ணியமா காப்பாத்த என்னால முடியும்! சத்தியமா நா செஞ்சு காட்றேன்... பொம்மனாட்டி எல்லாம் கிணத்துத் தவளையா இருந்த காலம் மலை ஏறிடுத்து அத்திம்பேர்... கிணத்துக்கு வெளிலேயும் உலகம் பரந்து விரிஞ்சு எங்களுக்காக காத்துண்டு இருக்குனு நாங்க புரிஞ்சுக்க துவங்கிட்டோம்... மரியாதையும், அன்பும் சேர்ந்து கிடைச்சா, பணிஞ்சு இருக்க ரெடி... ஆனா, மரியாதை கிடைக்காத எடத்துல கேவலம் சோத்துக்கும, துணிக்கும் ஆசைபட்டுண்டு அடிமையா இருக்க முடியாது அத்திம்பேர்! நாங்களும் மான, அவமானமெல்லாம் பாக்க ஆரம்பிச்சுட்டோம்— இத மறக்காதீங்கோ''

உணர்ச்சி வசப்பட்டுவிட்ட தினுசில் உதடுகள் துடிக்க காயத்ரி அக்கா பக்கம் திரும்பினாள்.

''இப்போ நாஞ்சொன்னதெல்லாம் உனக்கும் ஏற்கனவே தெரிஞ்சதுதானே? அப்பறம் ஏன் பேசாம இப்பிடி அழுதுண்டே நிக்கறே? அழறதுன்னால



என்னக்கா லாபம்? கண்ணெதிர ஒருத்தர் அக்ரமம் பண்ணினா கையப் பிசைஞ்சுண்டு நின்னா அது நியாயமாயிடுமா? உன் தொடைநடுங்கித்தனத்தால என்னை பலி குடுக்க முனவரயே— இது நியாயமாக்கா? யாரு எதச் செஞ்சாலும், என்னால என்ன முடியும்னு மூஞ்சிய மூடிண்டுட்டா, விஷயம் தீர்ந்து போயிடுமா? இன்னொருத்திய கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு இந்த மனுஷர் சொன்னதுக்கு வாயத் தொறக்காம இருக்கியே, நாளைக்கு காசு பண்றதுக்காக பெத்த பொண்களையே எவன்கிட்டயாவது அனுப்பினார்னா, அப்போவும் பேசாமயே இருப்பியா? அப்பிடியாவது ஒரு மானங்கெட்ட வாழ்க்கை உனக்குத் தேவைதானா? இப்பயாவது வாயத் திறந்து பேசேங்கா...''

அவள் பேசப்பேச, ''ஐயோ... நா மடச்சி! பயந்தாங்குள்ளியா நடந்துண்டு எல்லார் வாழக்கையும் பாழாக்க நினைச்சேனே! ஐயோ...'' என்று தலையில 'பட் பட்'டென்று அடித்துக் கொண்டு பாலா அழ, காயத்ரி அவள் கையைப் பற்றி தடுத்தாள்.

''இப்பிடி அவசரப்பட்டு உணர்ச்சி வசப்படறதே உனக்கு பழக்கமாயிடுத்துக்கா. யாராவது மிரட்டினா உடனே பயப்படறே, திட்டினா உடனே அழறே, அதட்டினா உடனே அடங்கிப்போயிடறே, இல்லேன்னா இப்பிடி அடிச்சுண்டு கதற ஆரம்பிக்கறே! பிறத்தியாரால எப்பவுமே பாதிக்கப்பட்டு நடந்துக்கறியே தவிர, நீயா சுயமா யோசிச்சு எதையாவது செய்றியாக்கா? நீ மட்டும்னு இல்லே, உன்னை மாதிரி பலவீனமான பொண்களாலதான் இவாள்ளாம் இந்த ஸ்கூல் ப்ரேயர்ல ரீதில அக்ரமம் பண்ண துணியறா...

பாரதியார் பாட்டெல்லாம் நீட்டி முழக்கிண்டு பாடு வோமே— மறந்துட்டியா? 'புதுமைப்பெண்' எப்பிடி இருக்கணும்னு பாரதியார் சொன்னத மனசுல வாங்கிண்டு, அர்த்தம் புரிஞ்சு பாடியிருந்தா, இன்னிக்கு இப்படி நடந்துக்க மாட்டே... என்னிக்கோ அவர் பாடிட்டுப் போனத, அவர் கொள்ளுப் பேத்தி வயசார உன் காலத்துல கூட நாமல்லாம் இன்னும் புரிஞ்சிக் கலேன்னா எப்பிடி? கண்ண தொடச்சுண்டு எழுந்து ஆக வேண்டியத பாரு... இல்லாட்டா, என்னால முடியாது, நா இப்படியே என் காலத்த கழிச்சுட் ரேன்னு சொல்லு, உன் பொண்கள கூட்டிண்டு நா அம்மாவோட மெட்ராஸுக்குப் போயி, எனக்குத் தெரிஞ்சவரைக்கும் அவாளயாவது நன்னா வளக்கப் பாக்கறேன்."

அழுகையை நிறுத்தின பாலா, புடவைத் தலைப் பால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். நின்றிருந்த மூலையை விட்டு நகர்ந்து வந்து, காயத்ரியின் பக்கத்தில் நின்றாள். அவளுடைய செய்கை யானை பலம் தந்த மாதிரி "அபிராமி, புவனா... லதா..." என்று குரல் கொடுத்து, ஓடி வந்த குழந்தைகளை அணைத்தவாறு பர்வதமும் பெண்களுக்கு அருகில் சென்று நின்றாள். ரொம்ப வருஷங்களாக தலைதூக்காத தன்னம்பிக்கை யுடன் நிமிர்ந்து சாரங்கனை ஏறிட்டாள்.

நடப்பதத்தனையும் பார்த்துக்கொண்டே நின்ற சாரங்கன் தன் கண்களையும், காதுகளையும் கூட நம்ப முடியாத அளவுக்கு அதிர்ந்து போனான்.

ஆழமான கிணற்றுக்குள்ளிருந்து ஒவ்வொரு தவளையாக வெளியே வந்து கைப்பிடி சுவரில் அமர்ந்து



தங்கள் சுதந்திரத்தை கொண்டாடும் விதமாய் ஒருசேர குரல் எழுப்புகிற மாதிரியான கற்பனை எழ, நிற்கமுடி யாமல் சட்டென்று நாற்காலியில் உட்கார்ந்து தலையை கவிழ்த்து கைகளால் தாங்கிக் கொண்டபோது முதன் முறையாக— தப்புப் பண்ணிவிட்டோமோ என்கிற பயம் அடிவயிறு பூராவும் நாய் குடைகளாக முளைக்கத் தொடங்கியது...

**முற்றும்**